சக்தி

மாத வெளியீடு
நவம்பர் '53



அனைவரும் விரும்பும்

மதுரமான

மார்ட்டன்

மிட்டாய்கள்

ஏர்கண்டிஷன் செய்த
தொழிற்சாலையில்
தயாரிக்கப்பட்டவை.
பரிசுத்தமான
பழ ரஸங்களுள்ள
மார்ட்டன் மிட்டாய்களையே
வாங்குங்கள்.

ருசிமிக்க

டால்மியா

பிஸ்கோத்துகள்

சிறந்த நவீன சாதனங்களால்
தூய்மையான முறையில்
தயாரிக்கப்படுகின்றன.
பிஸ்கோத்து வாங்கும்போது
டால்மியா
என்ற பெயரைப் பார்த்து
வாங்குங்கள்.

தென் இந்தியாவிற்கு சோல் ஏஜண்ட்ஸ் :

சௌத் இந்தியா
கார்ப்பரேஷன் (மதராஸ்) லிமிடெட்

2, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ், 1

தந்தி "GOODWILL" போன். *4911 (4 லைன்)*

தபால் பெட்டி நெ. 113.

68898
சென்னை-600 008.

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி
லிமிடெட்

போன்: 250 (5-லைன்)— மதுரை —தந்தி: "ஹார்வி"

மதுரை ★ தூத்துக்குடி ★ அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

நம்பர் 80 வரை நூல்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல் பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல் மில் நெசவுக்கேற்ற சீஸ நூல், முறுக்கேற்றிய நூல்	5,00,000 நூற்கும் கதிர்கள்

★

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல்தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங் கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள் மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்

★

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்திபெற்றவை.

★

நாங்கள் நூற்பதைத்தவிர நெய்வதில்லை

மானேஜர்கள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,
மதுரை.

போன்: 420 (4-லைன்) தந்தி: "ஹார்வி"

சுகாதாரமான காற்ரேட்டமுள்ள ரூம்களுக்கும்
ஆரோக்கியமான சுவையுள்ள சாப்பாட்டிற்கும்
சிற்றுண்டிக்கும்

"சந்திரா பவன்"

(ராயப்பேட்டை ஆஸ்பத்திரி எதிரில்)

ராயப்பேட்டை ஹைரோடு,
சென்னை-14

தீபாவளிக்கு எமது Sweet meat Stall-க்கு
விஜயம் செய்யுங்கள்

உங்களிடம் இருக்கிறதா!

புதுமைப் பித்தன் வரலாறு :	ரகுநாதன்	3	0
இலக்கிய விமர்சனம் :	,,	2	0
மார்க்ஸியப் பொருளாதாரம் :		2	0
	எஸ். ராமகிருஷ்ணன்		
மொழிவழி ராஜ்யம் ஏன்? :		0	5
பூமியும் மனிதனும் :	இலின்	0	12
விரோதி பணியாவிட்டால் :	கார்க்கி	0	6
நீரோடை :	கிருஷ்ணசந்தர்	0	6
ஆடுதன் ராணி :	,,	0	10
பேச்சுக்கலை :	கே. வீரராகவன்	1	0

தபால் செலவு தனி

நவயுகப் பதிப்பகம், சென்னை–14

விற்பனை உரிமையாளர் :
சக்தி காரியாலயம், சென்னை-14

பொருளடக்கம்

நவம்பர், 1953 மலர் 18 இதழ் 1

"சக்தி"யின் சேவை	...	தலையங்கம்	1
வாழ்த்து	...	கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, வ. சண்முக சுந்தரம்	3
கவி செய்கிற காரியம்	...	டி. கே. சி.	4
குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்	...	வை. கோவிந்தன்	6
பிரிட்டிஷ் கயானா	...	வ. விஜய பாஸ்கரன்	8
உலகத்தின் கால நிலை	...	டாக்டர் ஜே. ஸி. குமரப்பா	11
சுயசரிதம்	...	வெ. சாமிநாத சர்மா	15
வைராக்கியம்	...	எம். சுப்பிரமணியம்	16
தொட்டிகளில் காய்கறிச் சாகுபடி	...	எஸ். சுந்தரம்	29
பரிபாடலில் நகைச்சுவை	...	எஸ். வையாபுரிப் பிள்ளை	32
மொழி வழி ராஜ்யம்	...	எஸ். ராமகிருஷ்ணன்	37
குட்டிக் கதைகள்	...	கிரிம் சகோதரர்கள்	41
நிலப்பிரச்னை	...	ஸி. எஸ் சுப்பிரமணியம்	44
நிலத்தின் வாழ்வு	...	வித்துவான் மு. சண்முகம் பிள்ளை	49
வாழைப் பழம்	...	வை. கோவிந்தன்	51
புத்தக உலகம்	...	சி. எஸ்.	52

அட்டைப் படம்: ஸ்ரீ முத்துராமலிங்கம்

★

விஜய சக்தி ஐப்பசி

வருடசந்தா ரூ. மூன்று தனிப்பிரதி அணா நான்கு

பணம் **எமிலி பேர்ன்ஸ்**

பணம் என்ருல் என்ன? அதன் தன்மை என்ன? அதன் பூர்விகம் என்ன? இன்றைய சமுதாயத்தில் அதன் இடம் என்ன? அதன் எதிர்காலம் என்ன? என்ற விஷயங்களை அலசி ஆராய்ந்திருக்கிருர் ஆசிரியர் வெ. ராமசாமியின் ஆற்ெருழுக்குப்போன்ற தமிழ் மொழிபெயர்ப்பு.

ரூபாய் ஒன்றரை தபால் செலவுடன் ரூ. **1—10**

அணுவை அறிக **நா. கி. நாகராசன்**

அணுவைப்பற்றிய அறிவு தற்கால பௌதிகத்திற்கே அடிப்படையானது. பொருளின் அமைப்பு, மின்சாரத்தின் தன்மை, ஒளியின் பண்பு, அணுகுண்டின் பேராற்றல், முதலிய விஞ்ஞான உண்மைகளை உணர அணுவின் தன்மை அறியவேண்டும் பழங்கால இந்தியத் தத்துவஞானிகளது கற்பனையிலிருந்து ஹைடிரஜன் குண்டு பற்றிய ஆராய்ச்சிவரை இந்த புத்தகத்தில் ஆசிரியர் விளக்கி இருக்கிருர்.

ரூபாய் ஒன்றரை தபால் செலவுடன் ரூ. **1—10**

நான்கு முட்டாள்கள் **அணில் அண்ணன்**

வேடிக்கையான கதை விறுவிறுப்பான கதை. குழந்தைகள் கதையைப் படித்தால் விழுந்து விழுந்து சிரிப்பார்கள். பெரியவர்களும் படிக்கலாம். இது குழந்தைக் கதைப் புத்தகம்.

விலை அணு நான்கு தபால் செலவுடன் அணு **5**

அணில் அண்ணன் எழுதிய **மாய விளக்கு**, எங்கெல்ஸ் எழுதிய **குடும்பத்தின் தோற்றம்**, மு. அருணுசலம் எழுதிய **காய்கறித் தோட்டம்**, டால்ஸ்டாய் எழுதிய **கதைகள் முதல் புத்தகம்** அச்சாகிறது.

விபரமான விலைப்பட்டிக்கு ஒரு கார்டு எழுதுங்கள்

★

சக்தி காரியாலயம், சென்னை-14

டவர் பிராண்டு

ஸ்குரூ ஆணிகளையும்,
கதவு நாதங்கிகளையும்,
துத்தநாக வாளிகளையும்
வாங்குங்கள்.

சுதேசிப் பொருளை
ஆதரியுங்கள்

பழைய டயர்களைச் சரிப்படுத்தி
புதிதாக்கப் படுகிறது

DUROTREAD
A
Firestone
APPROVED PRODUCT

32×6, 34×7, 8·25×20
சைஸ் உள்ள
டயர்கள்

விபரங்களுக்கு:

சதர்ன் இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன்,

2, அரமனைக்கார தெரு,
தபால் பெட்டி நெ. 1823,
சென்னை - 1.

புதுமைப் புத்தகங்கள்

—:o:—

	ரூ.	அ.
மகாத்மா காந்தி		
மாணவருக்கு	5	0
பெண்களுக்கு	3	12
ஹிந்து முஸ்லிம் பிரசினை	6	0
சமஸ்தானப் பிரசினை	6	0
ராஜாஜி		
ஆத்ம சிந்தனை	1	8
முல்க்ராஜ் ஆனந்த்		
தீண்டாதான்	3	
தங்கம்மாள் பாரதி		
பாரதியும் கவிதையும்	2	8
'லக்ஷ்மி'		
தாய்மை	4	8
குழந்தை வளர்ப்பு	(அச்சில்)	
விநோபா பாவே		
ஸ்வராஜ்ய சாஸ்திரம்	2	0
லெனின் சரித்திரக் கதைகள்	3	12
கார்ல் மார்க்ஸ்	2	0
சீனமக்களும் சீனமும்	7	8

இன்னும் மற்ற வெளியீட்டார்களின்
நூல்களும் எங்களிடம் கிடைக்கும்

தபால் செலவு தனி

★

புதுமைப் பதிப்பகம் லிட்,

கல்லுக்கட்டி, காரைக்குடி.

எமது சிறந்த வெளியீடுகள்

		ரூ.	அ.
மலரும் மாலையும்	கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை	5	0
மருமக்கள்வழி மான்மியம்	,,	2	0
ஆசிய ஜோதி	,,	1	8
உமர் கய்யாம் பாடல்கள்	,,	1	4
தேவியின் கீர்த்தனங்கள்	,,	1	12
கவிமணியின் உரைமணிகள்	,,	2	8
தமிழ்ச் சுடர் மணிகள்	பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை	5	8
இலக்கிய தீபம்	,,	3	0
தமிழின் மறுமலர்ச்சி	,,	2	8
அம்பிகாபதி அமராவதி	மறைமலையடிகள்	4	0

(தபால் செலவு தனி)

●

பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1

எங்கள் புத்தகக் கடை

மைலாப்பூர், லஸ், கச்சேரித் தெரு, 26-A என்னுள்ள கட்டிடத்தில் நடைபெறுகிறது

அங்கு எல்லா வகையான தமிழ், ஆங்கிலப் புத்தகங்களும் கிடைக்கும்.

சக்தி காரியாலயம்,
சென்னை-14.

விஜய		ஐப்பசி
மலர் 18		இதழ் 1

சக்தி

மெய்ப் பொருள் காண்பது அறிவு

○

சக்தியின் சேவை

●

சக்தி தோன்றி பதினன்கு வருஷங்கள் ஆகின்றன.

மாதப் பத்திரிகை உலகிலேயே ஒரு புதுமையை—ஒரு புரட்சியைச் செய்தது — செய்கிறது — செய்யப் போகிறது, 'சக்தி.'

இந்தப் பதினன்கு வருடங்களிலும் எத்தனையோ சோதனைகள், தொல்லைகள் நேர்ந்தன. அத்தனை சோதனைகளுக்கும், தொல்லைகளுக்கும் தப்பி நேர்மையான வழியில் நடைபெற்று வருகிறது 'சக்தி.'

முதன் முதலாக அழகிய முறையில் வெளி வந்த மாத வெளியீடு 'சக்தி'.

முதன் முதலாகக் கவிதைகளை வெளியிட்டுப் புதிய புதிய கவிஞர்களைத் தோற்றுவித்தது 'சக்தி'.

உயர்ந்த கருத்துக்களைத் தெளிவாக எல்லோரும் படிக்கும்படியான நடையில் எழுதச் செய்து வெளியிட்டு வந்தது 'சக்தி'

தமிழ் நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள அறிஞர், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், அரசியல்நிபுணர்கள் இவர்களின் வாழ்க்கை வரலாறுகள், இவர்களின் அறிவுரைகள், கட்டுரைகளைத் தமிழ் மக்களுக்கு முதல் முதலாக அதிக அளவில் அறிமுகம் செய்துவைத்தது 'சக்தி'தான்.

அரசியல் தத்துவக் கட்டுரைகளைத் தக்கவர்களைக் கொண்டு எழுதச் செய்து வெளியிட்டதும் 'சக்தி'தான்.

கதைகள் மட்டுமே வெளிவந்தால்தான் நாட்டில் அதிக அளவில் பத்திரிகை விற்குமென்று தெரிந்திருந்தும் சமுதாயம் பயனடைய வேண்டுமே என்ற ஒரே நோக்கத்துடன் எத்தகைய தொல்லைகளையும் சமாளித்துக் கொண்டு எல்லாவகையான கட்டுரைகளையும் வெளியிட்டு வருகிறது 'சக்தி'.

சில காலமாக சக்தி நிறுத்தி வைக்கப் பெற்றிருந்தது. சக்தியின் வாசகர்கள் சக்தி வரவில்லையே என்று பெரிதும் வருத்தப்பட்டார்கள். சக்தி வருவதாக விளம்பரங்களில் பார்த்ததும் பல அன்பர்கள் வரவேற்றுக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கு எங்கள் நன்றி.

வாசகர்கள் விரும்பியபடி சக்தி திரும்பவும் தோன்றி இருக்கிறது. வாசகர்களாகிய உங்களுடைய ஆதரவுதான் தேவை. நீங்கள் ஒவ்வொரு வரும் புதிதாக உங்கள் நண்பர்கள் நான்கு பேர்களை 'சக்தியைப் படிக்கச் செய்யுங்கள்.

அறிவுக்கு வரியா? வெளி ஊரில் உள்ள ஒருவர் சென்னையில் உள்ள ஒரு புத்தகக் கடைக்கு ஆறணு விலையுள்ள ஒரு புத்தகத்தை அனுப்பும்படியாக எழுதினர். நாலாவது நாள் அவருடைய வீட்டுக்கு தபால்காரர் வந்தார். 'சார் வி. பி. பார்சல் வந்திருக்கிறது'. என்ருர். 'எங்கே எடு பார்க்கலாம்?' 'என்னப்பா இது ஆறணு விலை உடைய புத்தகம் ஒன்று அனுப்பும்படியாக எழுதியிருந்தேன். அதே புத்தகக் கடையிலிருந்துதான் இது வந்திருக்கிறது. ஒரு ரூபாய் இரண்டணுவுக்கு வி. பி. வந்திருக்கிறதே' என்ருர். உடனே தபால்காரர் "பார்சலில் பத்தணு தபால் தலை ஒட்டியிருக்கிறது, வி. பி, மணியார்டர் செலவு இரண்டணு, புத்தக விலை ஆறணு, மொத்தம் ஒரு ரூபாய் இரண்டணு ஆகிறதே" என்ருர். "ஒரு ரூபாய் இரண்டணு கொடுக்க முடியாது. வி. பி.யைத் திருப்பிவிடு" என்ருர்.

சென்னைக்கு வி. பி. திரும்பி வந்துவிட்டது. புத்தகக் கடைக்காரருக்கு பத்தணு நஷ்டம். ஆறணு புத்தகத்தில் மிஞ்சிப் போனல் ஒன்றரையணு லாபம் கிடைத்திருக்கும். இப்பொழுது நஷ்டம் பத்தணு.

வியாபாரம் எல்லாவற்றிலும் கடைகெட்ட வியாபாரம் புத்தக வியாபாரம். மக்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் போல அறிவு அவசியமாகத் தோன்றுவதில்லை. உணவு, உடை, இருப்பிடம் பிரச்னைகளே மக்களை வாட்டிக் கொண்டிருக்கும்போது அறிவைப் பற்றிச் சிந்திக்க அவர்களால் முடியுமா?

இந்த நிலையில் அறிவுத் துறையில் ஈடுபட்டிருக்கும் புத்தகம் வெளியிடுவோர் நிலை என்ன? யோசித்துப் பாருங்கள். பல பிரசுரகர்த்தர்கள் தங்கள் மூட்டைகளைக் கட்டி விட்டார்கள்.

புத்தகப் பிரசுரகர்த்தர்களின் நிலை மிக மோசமாகிக் கொண்டு வருகிற நிலையில் அரசாங்கம் வேறு செத்துச் சுடுகாட்டுக்குப் போய்க் கொண்டிருக்கும் ஒருவனுக்குப் புதைகுழி தோண்டுவதைப் போல வி. பி. ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணங்களை உயர்த்திவிட்டது.

மந்திரிகளும், மற்றவர்களும் படிப்பறிவை விருத்தி செய்ய வேண்டும் என்று வாய்கிழியப் பேசுகிருர்கள். அவர்கள் செய்யும் காரியங்களால் மக்கள் பெறும் அறிவு பூஜ்யம்தான். அறிவைப் பரப்ப சமுதாயத்தில் ஒரு சிலர் செய்யும் சேவைக்கு உதவி செய்யாவிட்டாலும் அந்த அரிய காரியத்தைக் குழி தோண்டிப் புதைக்க 'நல்ல காரியங்களை' அரசாங்கம் செய்து வருகிறது. அதில் ஒன்றுதான் தபால் கட்டணத்தை உயர்த்தியது. இது பற்றி எவ்வளவோ இடங்களில் மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். பலன் இல்லை. அரசாங்கம் இனியும் சும்மா கைக்கட்டிக்கொண்டிருப்பதில் பலனில்லை. நாட்டு மக்கள் அறிவு பெற வேண்டுமென்ற நல்லெண்ணம் உண்மையிலேயே இருக்குமானல் புத்தகங்களுக்கு மட்டுமாவது வி. பி. தபால் செலவை பாதியாக்க வேண்டும்.

குழந்தைப் புத்தகக் காட்சி: சென்னை லேடி மூத்தையா செட்டியார் உயாதரப் பள்ளிக்கூடத்தில் நாலாவது குழந்தைப் புத்தகக் காட்சி அக்டோபர் மாதம் சரஸ்வதி பூஜை சமயத்தில் நடைபெற்றது. காட்சியில் தமிழ், ஆங்கிலம், சீனம், ருஷ்யப் புத்தகங்கள் வைக்கப் பெற்றிருந்தன. காட்சியில் வைக்கப் பெற்றிருந்த புத்தகங்களில் நலிவடைந்து இருந்தவை தமிழ்ப் புத்தகங்கள்தான். காட்சியைத் திறந்து வைத்த கல்வி மந்திரி ஸ்ரீ. சுப்பிரமணியம் "நம் குழந்தைகள் நலிவுற்றிருப்பதுபோல 'தமிழ்ப் புத்தகங்களும் நலிவுற்றிருக்கின்றன. நல்ல புத்தகங்களைக் குழந்தைகளுக்கு பெற்ருேர் வாங்கிக் கொடுக்க வேண்டும். குழந்தைகளைப் பற்றி பெற்ருேரோ, அரசாங்கமோ போதிய கவனம் செலுத்தவில்லை' என்று கூறினர். தீபாவளிக்குப் பட்டாடை, பட்டாஸ் வாங்கிக் கொடுப்பதுபோல பெற்ருேர்கள் குழந்தைகளுக்கு நல்ல புத்தகங்களை வாங்கிக் கொடுக்க வேண்டும். அரசாங்கமும் விரைவில் லைபெரரி திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். பெற்ருேரும் அரசாங்கமும் ஒத்துழைத்தால் நல்ல புத்தகங்களை பிரசுரகர்த்தர்கள வெளியிடுவார்கள். இதில் சந்தேகமில்லை.

●

குடி, முகஸ்துதி செய்யும் ஒரு பேய்; இனிப்பாக இருக்கும் விஷம்; சந்தோஷமான பாபகிருத்தியம். குடியைக் கைக்கொண்டவன் தன்னைக் கைவிட்டுவிடுகிருன். குடிக்கிறவன் பாதகம் பண்ணுவதில்லை; அவனே ஒரு மகா பாதகமாயிருக்கிருன்.

—அகஸ்டின்

வாழ்த்து

வளர்க சக்தி

●

கல்வி வளரக் கலைவளர நாடெங்கும்
செல்வம் வளரத் திருவளர — நல்வழிசேர்
புத்தி வளரப் புகழ் வளரத் தோன்றுமிச்
சக்தி வளர்க தழைத்து.

— கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

○

சக்தி வாழ்த்து

●

(வெண்பா)

(1) வையம் செழிக்க வளஞ்சேர மாநிலத்தில்
ஐயம் அகன்றோட ஆரமுதாய்க் – கையகத்து
வந்ததால் சக்தி மலர்வுற்று யாவர்க்கும்
தந்ததால் இன்பம் பல,

(2) ஆய்வோர்க்கு நல்விருந்தாய் ஆயாது பல்பொருளை
மேய்வோர்க்கும் நல்விருந்தாய் மேவுமே தோய்வால்
ஒளிவிட்டு நின்று உணர்வை உணர்த்தித்
துளிர்விட்ட சக்தித் துணர்.

(3) பொய்கள் விரைந் தோடும் புன்மொழிகள் வாய் [குழறும்
ஐயம் நடுங்கி அடிபணியும்–மெய்யே
தனக்கணிய தாகத் தலம்செழிக்க வந்த
மனக்கணியாம் சக்திமல ரால்.

— ல. சண்முகசுந்தரம்

கவி செய்கிற காரியம்

டி. கே. சி.

இலக்கியம் என்பது அனுபவிக்கிற காரியம். எப்போதுமே உள்ளத்தில் உள்ளது வெளிவந்தால் நாம் அனுபவிக்கிறோம். அபிநயக் கலையில் உள்ளத்தில் உள்ள உணர்ச்சியை அபிநயம் மூலமாகப் பார்க்கும்போது அதிசயம், ஆனந்தம் எல்லாம் உண்டாகிறது. அபிநயத்தைப் பார்த்துக் கஷ்டப்பட்டவர்கள் அப்படியாக யாரும் இல்லை.

ஆனால் இலக்கியம் என்றால் கஷ்டந்தான். அதன் கிட்டேயே மனுஷாள் போகமாட்டேன் என்கிறார்கள். காரணம்: பள்ளிக் கூடத்தில் பாடமாய் வைத்துப் பதவுரை, பொழிப்புரை எல்லாம் சொல்லி இலக்கியத்தை உருக்குலையப் பண்ணிவிடுகிறோம். இலக்கியம் அல்லாத போலிச் செய்யுள்களை வைத்துக் கொண்டு கஷ்டப்படுத்துகிறோம் மாணவர்களை. உயர்ந்த ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடிய கவிகளும் கஷ்டப்படுத்துவதற்கே கருவிகளாக ஆகிவிடுகின்றன. பிறகு நல்லது பொல்லது என்கிற வித்தியாசம் அற்றுப்போய் விடுகிறது. இது பின்னலேயும் விட்ட பாடில்லை மனுஷனை.

அபிநயக் கலையையும் ஹிம்சைக்கான கருவியாக ஆக்கலாம் "தெருவில் வாரானே" என்கிற பதத்துக்கு அபிநயம் நடக்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம் பள்ளிக்கூடத்தில். உண்மைப் பொலிவோடு நடக்கிறது என்றே வைத்துக் கொள்ளுவோம். பரீக்ஷையில் கேள்வி "தெருவில் வாரானே" எத்தனை படலங்களில் இந்த விஷயத்தைக் காட்டலாம்? "வாரானே" என்ன ரஸம்? இது மாதிரி கேள்வி கேட்கிறதே முறையாய் இருந்து விட்டால்

இன்றைய கல்விமுறை, நமது இலக்கியங்களை எதையுமே ரஸிக்கும் ஆற்றலை நமக்கு அளிப்பதில்லை, குழந்தைகளின் கற்பனை-சக்தியை மழுங்கடித்து வெறும் புத்தகப் புழுக்களாகவும், மனனம் செய்யும் இயந்திரங்களாகவுமே மாற்றி விடுகிறது. ரஸிகமணி டி. கே. சி. குழந்தைகளைப் பாழடிக்கும் இந்தக் கல்வி முறையின் அபத்தங்களை தமக்கே உரித்தான நடையில் இக்கட்டுரையில் எழுதுகிறார்.

பிறகு மாணவர்கள் அபிநயக் கலையை அனுபவிக்கிறது என்பது ஏற்படுமா? பயந்தான், வெறுப்புத்தான். அபிநயம் என்றாலே அஞ்சு காத தூரம் ஓடி விடுவார்கள்.

எப்படியோ பள்ளிக்கூடத்துப் பாடமாக, பரீக்ஷைக்குப் பாடமாக அல்லாமல் தப்பியது அபிநயக் கலை. ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர் எல்லாருமே அனுபவிக்கிறார்கள் அபிநயக் கலையை.

ஆனால் கவிக்கலையை தப்புவிக்க முடியவில்லை நமக்கு. யாருக்குமே முடியவில்லைதான்.

ஏதோ குடிமோசம் வந்துவிடும் என்று ஆத்திரப்பட்டு சிறுபிள்ளைகளுக்கே பாடமாக வைத்துவிடுகிறார்கள் செய்யுள்களை. கண் மூடித்தனமாய்ப் படிக்கிறார்கள் மாணவர்கள் அந்தச் செய்யுள்களை. பதவுரை, பதவுரை என்று வெட்டிச் சிதைக்கிறார்கள். செய்யுள்களைக் கீறி எழுவாயைப் பெயர்த்து எடுக்கிறார்கள். பயனிலையைப் பெயர்த்து எடுக்கிறார்கள். செயப்படுபொருளைப் பெயர்த்து எடுக்

கிறார்கள். உயிரை வாங்கியாகிவிட்டது செய்யுளிலிருந்து.

இவ்வளவுக்கும் உள்ளான செய்யுளை உட்கொண்டால் அறிவுக்கு ஆரோக்கியம் ஏது. தீரா நோய்க்கு உள்ளாகி விடுகிறது அறிவுத் தத்துவம். இதற்கு ஒரு உதாரணம்.

நாம் எல்லாரும் பசலையாய் இருக்கும் போதே ஒரு செய்யுளைப் பாடமாகப் படித்து விட்டோம்.

பண்டு முளைப்ப(து)
அரிசியே ஆனாலும்
விண்டுமி போனால்
முளையாதாம்—கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும்
ஆகா(து) அளவின்றி
ஏற்றக் கருமம்
செயல்

அடடா! இதற்கு எழுவாய் பயனிலை கண்டோம். பதவுரை கண்டோம். உவமான உவமேயங்களின் பொருத்தத்தைக் கூடக் கண்டோம்.

என்ன பொருத்தம் ஏழாம் பொருத்தம்தான்.

சிறு பிள்ளையின் மூளையைக் குழப்பின குழப்பு வயசாகியும் விட்டபாடாய் இல்லை. தீரா நோய்தான். இந்த ஒரு செய்யுளைப் பிடித்தது எல்லாக் கவிகளையுமே பிடித்தது என்று சொல்லலாம்.

கவிகளை அனுபவிக்க முடியாமல் போய்விடுகிறது. காரணம் என்ன? 'பண்டு முளைப்பது அரிசியேதான்!' இந்த நோய்க்கு மருந்து உண்டா என்று கேட்டால் மருந்தில்லைதான். ஆனால் சிகிச்சை உண்டு. அதாவது: மூன்று வருஷத்துக்குச் செய்யுளோ கவியோ ஒன்றையும் பார்க்கக் கூடாது. எழுத்து வாசனை இல்லாத காட்டுப் பிரதேசத்துக்குள்ப் போய் இருந்துவிட வேண்டியது. காடல்லவா, பூர்வ வாசனையெல்லாம் போய்விடும். மூளை தெளிந்துவிடும். பிறகு நல்ல கவிகளை மாத்திரம் படிக்க வேண்டும். மற்ற ரஸமில்லாத செய்யுள்கள் கிட்டவே வரக்கூடாது. தமிழ்ப் பண்பும் கவிப் பண்பும் நமக்குள் புகுந்து என்றும் காணாத ஆனந்த வெறியை உண்டாக்கி விடும்.

வீரவேல் தாரைவேல்
விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேல்
திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேள்
சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே
துணை.

தமிழ்ப் பண்பு நிறைந்திருக்கிறது கவியில். ரஸம் பெருகி ஓடுகிறது. ஆனந்த வெறிக்கு உள்ளாக்குகிறது நம்மை. தமிழ்க் கவி செய்கிற காரியம் இது.

குடி

ஒரு வாய் மது குடித்தால் உடலுக்குச் சுகம் ஏற்படுகிறது; இரண்டு வாய் குடித்தால் சந்தோஷம் உண்டாகிறது; மூன்று வாய் குடித்தால் பைத்தியம் பிடித்து விடுகிறது.

—ஆனச்சார்ஸிஸ்

முதலில் மனிதன் மதுவைக் குடிக்கிறான்; அப்புறம் மது, மதுவைக் குடிக்கிறது; கடைசியில் மது மனிதனைக் குடித்துவிடுகிறது.

—ஜப்பானிய வசனம்

விஸ்கி (மது) ஒரு நல்ல வஸ்து. செத்துப்போனவர்களைக் காப்பாற்ற அதைப்போல எதுவும் உதவுவதில்லை. செத்துப்போன உடலைக் கெட்டுப்போகாமல் வைத்துக் காப்பாற்ற அதை விஸ்கியில் போட்டுவையுங்கள். ஆனால், உயிரோடிருக்கும் ஒரு மனிதனைக் கொல்ல வேண்டுமென்றால் விஸ்கியை அவனுக்கு உள்ளே செலுத்தி விடுங்கள்.

—கத்ரீ

குடிப்பது என்பது வேண்டுமென்றே தன்னைப் பைத்தியமாக்கிக் கொள்ளுவதுதான்.

—ஸெனிகா

குழந்தைகளைக்

காப்பாற்றுங்கள்

வை. கோவிந்தன்

வேறு யாருடைய குழந்தைகளையும் காப்பாற்றும்படியாக நான் சொல்லவில்லை. நம்முடைய குழந்தைகளையே தான். 'நம் குழந்தைகளை நாம் காப்பாற்றாமல் யார் காப்பாற்றப் போகிறார்கள். நாம்தான் உணவு கொடுக்கிறோம், உடை கொடுக்கிறோம், அறிவு பெற படிப்பறிவு கொடுக்கிறோமே, வேறு என்ன காப்பாற்றுவதற்கு இருக்கிறது' என்று எண்ணுகிறோம் நாம்.

நம் குழந்தைகள் இந்த நாட்டுப்பிரஜைகள். இப்பொழுது நம் நாட்டில் ஜனநாயகம் நடைபெறுகிறது. ஆதலால் உங்கள் குழந்தை வருங்காலத்தில் நம் நாட்டில் ஜனாதிபதியாகலாம், பிரதம மந்திரியாகலாம், சேனாதிபதியாகலாம், அப்படி இல்லையானால் ஒரு பெரிய விஞ்ஞானியாகலாம், தத்துவ ஞானியாக ஆகலாம். சர்வகலாசாலையில் உப அத்யக்ஷகராகவும் ஆகலாம். அப்படியாவதற்கு நம் நாட்டில் நம் குழந்தைகளுக்கு வாய்ப்பு இருக்கிறது. நம் நாட்டை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டிய நம் குழந்தைகளை கொலைக்காரர்களாக ஆக்கவும், திருடர்களாக ஆக்கவும், கொள்ளைக்காரர்களாக ஆக்கவும் பல தீய சக்திகள் வேலை செய்கின்றன; செய்து வருகின்றன.

அத்தகைய தீய சக்திகள் எவை என்று அறிய விரும்புகிறீர்கள் அல்லவா? அவைகளில் ஒன்று இன்றைய சினிமா, இரண்டாவது இன்றைய குழந்தை இலக்யம். இந்தத் தொல்லைகள் நம்மை மட்டும் பிடிக்கவில்லை. அமெரிக்காவிலும் இதே கதைதான். பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான் இன்னும் ஏனைய நாடுகளிலும் கூட.

சினிமாவில் வரும் கதாபாத்திரங்கள் கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், கையில் துப்பாக்கி சகிதமாகக் காட்சியளிக்கிறார்கள். மற்றும் அயோக்கியர்கள் பொய்யர்கள், விபசாரிகள்— இவர்கள்தான்.

இந்தக் காட்சிகளை சினிமாவிலே பார்க்கிறார்கள் குழந்தைகள். குழந்தைகள் மனசு இளமனசு. கண்ணால் கண்டதை, உடனே செய்யத் தூண்டும் மனசு அவர்களுக்கு. உலகமெல்லாம் எங்கு நோக்கினும் 100-க்கு 99 பேர்கள் கஷ்டத்தில் உழலுகிறார்கள். அவர்களுடைய குழந்தைகள்தானே இத்தகைய சினிமாவைப் பார்க்கிறார்கள். அந்தக் குழந்தைகள் தங்கள் வீடுகளில் அடையும் சிரமங்களைச் சகியாது தாங்கள் சினிமாவில் பார்த்தபடி சுலபமான வழிகளில்—அதாவது கொலை, கொள்ளையால்—பணம் அடையலாம் என எண்ணுவது இயற்கைதானே— அமெரிக்காவில் துப்பாக்கிப் படம் ஒன்றை ஒரு தகப்பனும், மகனும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். தகப்பன் ஒரு போலீஸ் ஆபீஸர் என நினைக்கிறேன். பையனுக்கு சுமார் 11 வயது இருக்கலாம். படத்திலே முக மூடிகளும், துப்பாக்கிகளும் டப் டபார் நடக்கின்றன. பார்த்தான் பையன். தகப்பனார் இடைவாரில் மாட்டியிருந்த துப்பாக்கியை தகப்பனார் அறியாமல் எடுத்தான். விசையைத் தட்டிப் பார்த்தான். பாய்ந்தது குண்டு, தகப்பனார் உடம்பில். தகப்பனார் இறந்தார். இது இரண்டு வருடங்களுக்குமுன். சமீபத்திலே ஒரு கேஸ் நம் தமிழ் நாட்டில். அது ஒரு கொலை கேஸ். சினிமாவைப் பார்த்த பிறகு ஒரு எஸ். எஸ். எல். ஸி. படித்த மாணவன் பணம் சம்பாதிப்பதற்கு கொள்ளையும் கொலையும் ஒன்றேதான் என்று முடிவு செய்து அந்தத் தொழிலில் பிரவேசித்து விட்டான். அவனால் நடந்தது ஒரு கொலை. கொலைக்கு ருசுவில்லை என்று

குற்றவாளிகள் விடுதலை அடைந்தார்கள். இந்தச் செய்தியை சமீபத்தில் நீங்களும் தினசரிகளில் படித்திருப்பீர்கள். மேலே கண்ட கதை சினிமா செய்த வேலை. இன்னும் இதுபோல பல ரசமான கதைகளை அமெரிக்கப் பத்திரிகைகளிலும், பிரிட்டிஷ் பத்திரிகைகளிலும், நம் நாட்டுப் பத்திரிகைகளிலும் படித்து வருகிறோம்.

அடுத்தபடியாக பத்திரிகைகள், புத்தகங்கள். அமெரிக்காவிலே 'காமிக்ஸ்' என்ற படப் புத்தகங்களும், பத்திரிகைகளும் வெளியாகின்றன. அந்தப் புத்தகங்கள் மாதம் ஒன்றுக்கு 60 கோடி செலவாகின்றனவாம். அமெரிக்காவில் மட்டுமல்ல. அந்தப் படப் புத்தகங்கள் பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், நம் நாட்டிற்கும் நிறைய வருகின்றன. இந்த நாடுகளில் உள்ள குழந்தைகள் ஏராளமான அளவில் இந்தப் புத்தகங்களை வாங்கிப் படித்தார்கள், படிக்கிறார்கள். இந்தப் புத்தகங்களில் வரும் கதைகள் நான் முன் சொன்னபடி சினிமாவில் வரும் துப்பாக்கி, கொள்ளை, கொலைக் கதைகள்தான்— 'ஒரு ஏழை. ரொம்ப கஷ்டப்பட்டவன். வேலை தேடினான். வேலை கிடைக்கவில்லை. அவனைப் போலப் பத்துப் பேர்களைச் சேர்த்துக் கொண்டான். 'பிக்பாக்கெட்' அடிக்கிறார்கள். கொள்ளைக்காரர்களாகிறார்கள்; பிறகு கோலைகாரர் ஆகிறார்கள், இத்தனையும் ஆன பிறகு பணக்காரர் ஆகிறார்கள். இது போலத்தான் கதைகள் இருக்கும். மற்றும் கதையின் நடுவில் பாஷாண மருந்துகளைக் கொடுத்துக் கொன்றதாகவும் இருக்கும். எந்த மாதிரிப் பாஷாணம் கொடுத்தார்கள் என்றும் கதையில் சொல்லப்பட்டிருக்கும். இந்தமாதிரிக் கதைகளைப் படித்து அமெரிக்காவில் பல குழந்தைகள் கெட்டுவிட்டார்கள். இந்தக் குழந்தைகளை எப்படித் திருத்துவது என்று அமெரிக்க மனோதத்துவ நிபுணர்கள் தங்கள் மூளையைக் குழப்பிக் கொண்டு தவிக்கிறார்கள். ஒரு சிறு பையன், அவனுக்கு ஒரு தங்கை. தங்கையிடம்தான் தகப்பனார் பிரியமாக இருக்கிறார் என்று அவனுக்குப் பொறாமை. தங்கை ஒருத்தி இருப்பதால்தானே தகப்பனார் அவளிடம் அன்பு காண்பிக்கிறார் என்று எண்ணினான். எடுத்தான் துப்பாக்கியை. சுட்டான் தங்கையை. இது ஒரு நடந்த கதை. வீட்டிலே பாட்டி நச்சரித்துக் கொண்டிருப்பாள் அல்லவா? சிலகுழந்தைகளுக்குப் பாட்டிகளைப் பிடிக்காதல்லவா? ஒரு குழந்தை பாட்டிக்கு, தான் படித்த கதைப் புத்தகத்தில் படித்தபடி விஷத்தைக் கொடுத்துவிட்டாள். இதுவும் நடந்த கதை. இந்த இரண்டு சம்பவங்களும் அமெரிக்காவில் நடந்தன.

இந்த காமிக் பத்திரிகைகள் அமெரிக்காவில் மட்டும் வெளிவரவில்லை. படங்களுடன் குழந்தைகள் பத்திரிகைகள், புத்தகங்கள் என்ற பெயர்களில் நம் தமிழ் நாட்டில் நிறைய வெளி வருகின்றன. பதினாயிரக் கணக்கில் விற்பனையாகின்றன. இந்தக் 'குப்பைகளை'ப் படித்து நம் குழந்தைகள் கெட்டு வருகிறார்கள். அவர்கள் கெட்டு வருவது பற்றிப் பத்திரிகைகளில் நீங்கள் படித்திருப்பீர்கள்.—

ஆதலால் நாம் உடனடியாகச் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால் நம் குழந்தைகளை இன்றையசினிமாக்களைப் பார்க்க விடாமல் தடை செய்வது. அமெரிக்காவிலிருந்து வரும் காமிக்ஸ், இங்கு நடைபெற்று வரும் 'குப்பை'களான, குழந்தைப் புத்தகங்கள், பத்திரிகள் இவைகளைப் படிக்கவிடாமல் தடை செய்வது. இந்த இரண்டு காரியங்களையும் நாம் உடனே செய்ய வேண்டும். குழந்தைகள் சினிமாப் பார்க்க ஆசைப்பட்டால் அந்த சினிமாவுக்கு நாம் போக வேண்டும், அது நம் குழந்தைகளைக் கெடுக்காது என்று தோன்றினால் அந்த சினிமாவுக்குக் குழந்தைகளை அனுப்பலாம் குழந்தைகளுக்காக வெளி வரும் பத்திரிகைகள் கதைகளை நாம் படிக்க வேண்டும். படித்துப் பார்த்து, நல்ல பத்திரிகை, புத்தகங்களைத்தான் படிக்கக் கொடுக்க வேண்டும்.— பெற்றோர்கள் கடமைகள் இவைதான்.

சினிமாக்காரர்கள் குழந்தைகளுக்காகவே நல்ல படங்கள் எடுக்கவேண்டும். அவர்களின் குழந்தைகளும் கெடாமலிருக்க வழி உண்டு அல்லவா?

குழந்தைப் பத்திரிகை, குழந்தைப் புத்தகம் வெளியிடுவோரும் தங்கள் குழந்தைகளும் கெடலாமே என்பதை எண்ணியாவது இத்தகைய 'குப்பைகளை' வெளியிடும் வேலையை நிறுத்திக் கொண்டு நல்ல புத்தகங்களை அழகான படங்களுடன் வெளியிட வேண்டும்.

மீறிக் கேடுசெய்பவர்களைத் தண்டிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்க நடவடிக்கைக்குக் கெட்டவர்கள் பயப்படமாட்டார்கள். குழந்தைகளின் பெற்றோர்கள் குழந்தைகளை நாசமாக்கும் இந்தக் கயவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு சரியான பாடம் கற்பிக்க வேண்டும். ★

பிரிட்டிஷ் கயானா

வ. விஜய பாஸ்கரன்

கயானா ஒரு சின்னஞ் சிறிய தேசம். தென்னமெரிக்காவின் ஒரு கோடியில் உள்ள இந்நாட்டின் ஜனத்தொகை 5 லட்சத்திற்கும் குறைவானது. இங்கு வாழும் மக்களில் பெரும் பகுதி இந்தியர். குறிப்பாகத் தமிழரும் பீகாரிகளுமே அதிகம். இன்றைக்கு இச்சிறிய நாடு உலக மக்களின் கவனம் முழுமையும் கவர்ந்திருக்கிறது. மக்களது நன்மதிப்பைப் பெற்ற மந்திரி சபை அவசரச் சட்டத்தின் கீழ் தூக்கி எறியப்பட்டு ராணுவமும், போலீசும் நாட்டை ஆள்கின்றன. இந்நாட்டின் மேல் ஆதிக்கம் கொண்டுள்ளது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்.

குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியையும் பறித்ததாம் என்பார்களே அதுபோல மக்களுடைய நலனில் நாட்டம் கொண்ட அரசாங்கத்தை நீக்கியதோடல்லாமல், அம்மந்திரி சபையின் மேல் அப்பட்டமான பொய்க் குற்றச்சாட்டுகளை சுமத்தியிருக்கிறது பிரிட்டிஷ் அரசாங்கம். பிறர் கண்ணில் மண்ணைத் தூவும் வியாபாரம். பலாத்காரத்தைக் கையாண்டு நாட்டில் குழப்பம் உண்டாக்க மந்திரி சபை திட்டமிட்டதாம். நாட்டில் எங்கும் வேலை நிறுத்தத்தை நடத்துமாறு தொழிலாளரைத் தூண்டிவிட்டதாம் மந்திரி சபை. உலகில் எங்காவது கேள்விப்பட்டதுண்டா இம்மாதிரி அபத்தங்களை? நாட்டை அரசாளும் மந்திரி சபையே தன் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தியது என்ற கதையை.

ஏகாதிபத்தியத்தின் பாதுகாவலர்கள் என்றைக்குமே, தங்களின் கீழ் உள்ள காலனிகளில் மக்கள் சுவர்க்கத்தில் வாழ்வது போன்ற சகல சௌபாக்கியங்களிலும் நிறைந்து உள்ளதாகக் கதையளந்து வருவார்கள். இம்மாதிரி பிரசாரங்களை நாம் நீண்ட நாட்களாக கேள்விப்பட்டு வருகிறோம். ஆனால் அத்தனையும் வடிகட்டிய கொயபல்ஸ் பிரசாரம்தான் என்பதைக் காலம் அப்போதைக்கப்போது நிரூபித்தே வந்திருக்கிறது. கடைசியாக இன்று கயானாவும் இவர்களது பொய்ப் பிரசாரங்களை அம்பலப்படுத்திவிட்டது.

> மேலை நாட்டு ஜனநாயகத்திற்கு ஒரு சவால் பிரிட்டிஷ் கயானா, செக்குமாடென உழைத்து நாட்டை வளம்படுத்திய மக்களுக்குஅங்கே உரிமை யில்லை. நாம். என்ன செய்யப் போகிறோம்?

பிரிட்டிஷ் சர்க்கார், அக்டோபர் மாதம் 6-ம் தேதி வெளியிட்ட அறிக்கையில் கயானாவில் சட்டத்தையும் அமைதியையும் நிலை நாட்ட வேண்டியது அவசியத்திலும் அவசியமாயிற்றென்றும் அதற்காக யுத்தக் கப்பல்களை கயானாவுக்கு அனுப்பியிருப்பதாகவும் கூறியது. ஆனால் அன்றிரவே ஒலி பரப்பட்ட பி. பி. ஸி. ரேடியோ செய்திகள் குழப்பம், பலாத்காரம் என்ற கட்டுக் கதைகளை மறுத்திருக்கின்றன. அது மட்டுமல்ல; பிரிட்டிஷ் பத்திரிகைகள் அத்தனையுமே கயானாவில் கலவரம் ஏதும் நிகழவில்லை என்று தெரிவித்தன. பின் ஏன் பிரிட்டிஷ் அரசாங்கம் இம்மாதிரிப் பொய்ப் பிரசாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டது; மக்களது அரசாங்கத்தை நீக்கிவிட்டு ராணுவ தர்பார் நிகழ்த்த வேண்டியதற்கு என்ன தான் காரணம்?

கயானா வளம் நிறைந்த நாடு. காணுமிடமெல்லாம். கரும்புத் தோட்டங்களும், வயல்களும், தொழிற்சாலைகளும். ஆனால் இத்தனை செல்வங்களும் அந்நாட்டு மக்களுக்குச் சொந்தமில்லை. 4000 மைல்களுக்கு அப்பால் உள்ள பிரிட்டிஷ் பெரு முதலாளிகளுக்கும், சில அமெரிக்க ஏகபோக முதலாளிகளுக்குமே சொந்தம். இந்நாட்டின் மொத்த ஜனத் தொகையையான 4,37,000 பேர்களில் சுமார் 1,46,000 பேர்கள் கரும்புத் தோட்டங்களிலும், தொழிற்சாலைகளிலும் வேலை செய்கின்றனர். ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் கூடத் தான். இந்நாட்டிற்கு முதன்முதலில் இந்தியா போன்ற கீழ் நாடுகளிலிருந்து மக்கள் அடிமைகளாகத் தோட்டக் காடுகளில் வேலை செய்வதற்காகக் கொண்டுவரப்பட்டனர். அவர்கள் தங்கள் இரத்தத்தை ஆறுகப் பெருக்கி உழைத்து கயானாவை

ஒரு செல்வம் கொழிக்கும் நாடாக மாற்றினர். இன்று அடிமை முறை இல்லை. ஆனால் வயிறு ஒட்டிய கூலிகளே நிரம்பியுள்ளனர் இவர்கள் பெறும் ஊதியம் அரை வயிற்றிற்கும் போதாததாகும். நரக வாழ்க்கையென்றால் இவர்கள் வாழும் வாழ்க்கையைத்தான் சொல்ல வேண்டும் இவர்களைப் பற்றி எவ்விதக் கவலையும் கொள்ளாத பிரிட்டிஷ் அரசாங்கம் இன்று கயானாவில் மக்களைக் காப்பாற்ற நாங்கள் விரைகிறோம் என்றெல்லாம் தம்பட்டமடிக்கிறது. இவர்கள் எந்த மக்களைக் காப்பாற்றச் செல்கிறார்கள்?

கயானாவின் பொருளாதாரம் முழுமையும் தம் இரும்புப் பிடிக்குள் வைத்திருக்கும் சில பெரு முதலாளிகளில் புக்கர் பிரதர்ஸ் என்ற ஏகபோக பெரு முதலாளிக் கம்பெனி தான் குறிப்பிடத் தக்கதாகும். இவர்களது ராக்ஷசக் கரங்கள் படாத இடமே இல்லை. கப்பல் வியாபாரம், போக்கு வரத்து, தொழிற்சாலைகள், வயல்கள், எல்லாவற்றிற்கும் மேலாக கரும்புத் தோட்டங்கள் அத்தனையிலும் இவர்கள் கை தான் ஓங்கியிருக்கிறது. புக்கர் பிரதர்ஸ் கம்பெனியின் மூலதனம் சுமார் 3 கோடி பவுன்கள் என்று கணக்கிடப்படுகிறது. ஐந்தே ஐந்து லட்சத்திற்கும் குறைவான மக்களே வாழும் இச்சிறிய நாட்டில் இந்த மூலதனம் எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதை நாம் சொல்லத் தேவையில்லை.

பிரிட்டிஷ் மூலதனத்திற்கு அடுத்த படியாக அமெரிக்க மூலதனம் இந்நாட்டில் அங்கம் வகிக்கிறது. அலுமினியம், பாக்சைட் தொழிற்சாலைகளில் இவர்களது மூலதனம் உள்ளது. இந்த இரண்டு பொருள்களும் ஆயுதப் போட்டியில் மிகவும் முக்கியமானவையாகும். சுருங்கச் சொன்னால் கயானாவின் பொருளாதாரமே சில பிரிட்டிஷ் அமெரிக்கத் திமிங்கிலங்களிடம் அடைக்கலம். இந்தத் திமிங்கிலங்களுக்குப் பாதுகாவலாகத்தான் பிரிட்டிஷ் அரசாங்கம் யுத்தக் கப்பல்களை அனுப்பி ராணுவ ஆட்சியை நிலை நாட்டியுள்ளது கயானாவில்.

ஏகபோக பெருமுதலாளிகளின் சுரண்டலை எதிர்த்து கயானா மக்களும் அவர்களது கட்சியான மக்கள் முற்போக்குக் கட்சியும் போர்முரசு கொட்டினார்கள். கயானாவின் சரித்திரத்திலேயே முதன் முதல் சென்ற ஏப்ரல் மாதம் தான் சகல மக்களுக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் தேர்தல் நடைபெற்றது. மக்கள் முற்போக்குக் கட்சி பெருவாரியான ஸ்தானங்களை அதாவது 24 ஸ்தானங்களில் 18 ஸ்தானங்களைக் கைப்பற்றியது. மக்கள் முற்போக்குக் கட்சியின் தலைவர் டாக்டர் ஜெட்டி ஜெகன். பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார். முற்போக்குக் கட்சி தன் தேர்தல் பிரகடனத்தில் கூறியிருந்த கயானாவுக்கு பரிபூரண சுதந்திரம், சர்க்கரை ஆலை, பெரிய தொழிற்சாலைகள் இவைகளை தேசிய உடமையாக்குதல், அந்நியச் சுரண்டலைத் தடுத்தல், பிரிட்டிஷ் கவர்னரின் விசேஷ அதிகாரங்களை ரத்து செய்தல், சுகாதாரம், கல்வி, வீட்டு வசதி இவைகளை மக்களுக்குப் பரிபூரணமாக வழங்கல் என்ற இந்த அடிப்படை கோஷங்கள் மக்கள் இதயங்களில் பட்டு ரீங்கார மிட்டு வந்தன. பெருவாரியாக மக்கள் முற்போக்குக் கட்சியின் கீழ் ஒன்று திரண்டனர்.

அதிகாரத்திற்கு வந்தவுடன் டாக்டர் ஜெட்டி ஜெகனும், அவர் தம் கட்சியும், தங்கள் தேர்தல் பிரகடனத்தில் கோரியிருந்த கோரிக்கைகள் ஒவ்வொன்றையும், நிறைவேற்ற ஆரம்பித்தனர் சொல்லும், செயலும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் . என்பதை நடைமுறையில் காட்டினர். மக்களது துன்பத்தைத் துடைக்கத் தக்கநடைவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்தனர். தொழிலாளரது நியாயமான கோரிக்கைகளை முதலாளிகள் நிறைவேற்றி வைக்க வேண்டுமெனப் பெருமுதலாளிக் கூட்டத்தை வற்புறுத்தினர். பிரிட்டிஷ் அரசாங்கமும் சர்க்கரை ஆலை அரசர்களும், கயானா மந்திரி சபையின் இந் நடவடிக்கைகளைக் கண்டு கிலி கொண்டனர். தாங்கள் போட்ட கணக்கெலாம் தப்புக்கணக்காக மாறிவிட்டதைக் கண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் நடு நடுங்கினர். மக்களது எழுச்சியைக் கண்டு அலர ஆரம்பித்தனர் சுரண்டல் வெறியர்கள்,

பிரிட்டிஷ் அரசாங்கம்உடன் எதிர்நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தது. ஆறு மாதங்களுக்கு முன்னர் தான் வழங்கியிருந்த அரசியல் சட்டத்தை ரத்து செய்து ராணுவச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியது. கவர்னருக்கு விசேஷ அதிகாரங்களை வழங்கியது. கயானாவில் 'கம்யூனிஸ்ட் சதிவேலை' நடப்பதாகவும் மந்திரி சபையும் டாக்டர் ஜகனும் கம்யூனிஸ்ட்டுகள் என்றும் பொய்யும் புனை

சுருட்டும் பேச ஆரம்பித்து விட்டது பிரிட்டிஷ் அரசாங்கம். உலகில் எங்கும் மக்கள் எழுச்சியை அடக்க கம்யூனிஸ்ட் பூச்சாண்டி காட்டுவது தான் ஏகாதிபத்தியத்தின் முதல் வேலே. அதே திருக்கைங்கரியத்தைத் தான் கயாளுவிலும் கடைப் பிடிக்கிருர்கள் பிரிட்டிஷார். இதற்கு ஆதரவாக பொய்தஸ்தாவேஜுக்களேத் தயாரித்து வருகிருர்கள். இந்த நடவடிக்கைகளே கண்டித்து வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் டாக்டர் ஜகன், "ஜனநாயகத்தில் நம்பிக்கையுடையவர்களென்று கூறிக் கொள்ளும் பிரிட்டிஷ் சர்க்கார் ஜன நாயகத்தையே குழி தோண்டிப் புதைக்கும் மிகக்கேவலமான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்றனர். இல்லாத ஒரு சதித்திட்டத்தைக் கண்டு பிடிக்க இப்பொழுது அவர்கள் முயற்சி செய்கிருர்கள்" என்று தெரிவிக்கிருர். அமெரிக்க அரசாங்கத்தின் ஏவல் படிதான் பிரிட்டிஷ் அரசாங்கம் இம்மாதிரி அக்கிரம நடவடிக்கைகளே எடுக்கத் துணிந்தனர் என்று செய்திப் பத்திரிகைகளே கூறுகின்றன.

சுதந்திரத் தேர்தல் ஜனநாயகம் என்றெல்லாம் மேலே நாட்டு அரசியல் தத்துவ ஞானிகள் சண்டப்பிரசண்டம் செய்வார்கள். தங்கள் நாடுகளில் தான் மக்கள் சுதந்திரமாக வாழ உரிமை யுண்டு; எண்ண, எழுத, பேச இன்னும் ஏட்டிலுள்ள எல்லா சுதந்திரங்களும் எங்கள் ஜனநாயகத்தில் தான் உண்டு என்று தம்பட்டம் அடிப்பதில் சளேப்பதில்லே. ஆனல் காரியாம்சத்தில் ஆளும் வர்க்கத்திற்கு எதிராகப் பேசவோ, எழுதவோ, ஆரம்பித்தால் இவர்களது சுயரூபம் அம்பலமாகி சுத்த சுயம்பிரகாசமான பாசிஸ்ட்டுகளாகக் காட்சியளிப்பார்கள். இதை நாம் தினசரி கண் கூடாகக் கண்டு வருகிருேம். கயாளுவும் இவர்களது ஆகாயப் பந்தல்களுக்கு ஒரு சூரைக் காற்ருகவே வந்தமைந்தது.

அடக்கு முறையும், எதேச்சாதிகாரமும் எங்குமே பலித்ததில்லே. மக்களது எழுச்சி என்பது காட்டாற்று வெள்ளம் போலத் தன் முன்னுள்ள தடைகள் அத்தனையும் சுக்கு நூருக நொறுக்கித் தகர்த்து எறிந்து விடும் சக்தி அதற்குண்டு. கயாளு மக்களும் இறுதியில் வெற்றி அடைவது திண்ணம். ★

மிளகாய்

மிளகாயை மிகுதியாக உண்டால் கண்ணில் நீர் வடிதல், கண்சிவத்தல், குடல் தீளிப்பை, மார்பு வாய் முதலியவை புண்பட்டுச் காரப்படமுடியாமை, சீதபேதி, சாதாரணமாய் மலம் போனுலும் கொதிப்பாய்ப் போதல், வயிற்று நோய் என்பவைகள் உண்டாகும்.

மிளகாய் வேகத்துக்கு கொத்துமல்லியையும் நெய்யையும் அதிகமாகச் சேர்த்துக் கொண்டால் மேற்படி வேகம் தணியும்

—நஞ்சு நூல்

இரண்டு பெண்டாட்டிகள்

ஒருவனுக்கு இரண்டு பெண்டாட்டிகள் ஒருத்தி புருஷனேவிட வயதானவள், மற்ருெருத்தி புருஷனேவிட ரொம்ப இளேயவள். புருஷனுக்குத் தலேயில் நரைவிழ ஆரம்பித்தது. இதைப்பார்த்தஇளேயவள் தன் புருஷன்கிழவனுகிவிட்டானே என்று நினேத்து புருஷன் தலேயிலிருந்த நரைமயிர்களேப் பிடுங்க ஆரம்பித்தாள். மூத்தவள் பார்த்தாள். புருஷனேவிட தான் அதிகவயதானவள் என்று யாரும் நினேக்கக் கூடாதே என்று எண்ணினுள். புருஷன் தலேயில் உள்ள கறுப்பு மயிர்களேப் பிடுங்கி வந்தாள்.

இருவரும் செய்தவேலேயால் புருஷனின் தலே சீக்கிரமாகவே மொட்டை மண்டை ஆயிற்று.

இரண்டு கட்சிகளில் ஒருவன் இருக்க முடியாது

—ஈசாப் கதை

உலகத்தின் காலநிலை

டாக்டர் ஜே. சி. குமரப்பா

உலகச் சுற்றுப் பிரயாணத்தை முடித்த பின் தாய்நாடு திரும்பியுள்ள ஸ்ரீ அட்லாய் ஸ்டீவன்சன் தன்னுடைய மணியான கருத்துக்களை நமக்கு வழங்கி யிருக்கிறார். ஏறக்குறைய நூறு கோடி மக்கள் வாழும் நாடுகளின் வழியாகச் சுற்றுப்பிரயாணம் செய்ததின் விளைவாக அவருக்குத் தன் தேசம் எவ்வளவு சிறியது என்பதும், உலகின் மற்ற பகுதி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்ற உண்மையும் புரிய ஆரம்பித்திருக்கிறது. இத் தெளிவான கண்ணோட்டம், மிகப் பெரும்பான்மையான மக்களுக்கு, குறிப்பாக அமெரிக்கருக்கு ஏற்பட வேண்டுவது அவசியத்திலும் அவசியம்.

ஆத்ம திருப்தி

வழக்கம் போலவே ருஷ்ய மக்களைக் கடைத்தேற்ற வேண்டும் என்ற திருஷ்டியுடனேயே ஸ்டீவன்சன் பிரச்னைகளைக் கவனித்திருக்கிறார். கொரிய யுத்தத்தைத் தற்காலிகமாக நிறுத்த முடிந்த, அமெரிக்காவின் வலிமைபற்றி அவர் பெருமையடித்துக்கொள்ளுகிறார். இந்தப் பிரமை அவருக்கு ஒரு ஆத்ம திருப்தியைக் கொடுத்திருக்கிறது. தாங்கள் போகும் பாதை ராஜ பாட்டை என்று அவர் நினைக்கிறார். மிதமிஞ்சிய நம்பிக்கையால் அசமந்தமாக இருந்து விடக்கூடாது என்றும் அவர் எச்சரித்திருக்கிறார். மற்ற நாடுகளுடன் சமாதானமாக வாழ ருஷ்யா தயாராக இருக்கிறது என்பதற்கு அறிகுறியே அவருக்குத் தென்படவில்லையாம்.

"ஒரே கையைத் தட்டி ஓசை செய்ய முடியாது" என்ற இந்தியப் பழமொழியைத்தான் நாம் ஸ்டீவன்சனுக்கு இச்சமயத்தில் நினைவூட்ட வேண்டியிருக்கிறது. அமெரிக்காதான் சமாதானத்திற்கு உலை வைக்கிறது என்ற பழிச்சொல் அமெரிக்கரைச் சாராமல் இருக்க அவர்கள் கவனித்துக் கொள்வார்களா?

> சுதந்திர உலகத்தை கம்யூனிச ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்காகவே தங்களை ஆண்டவன் படைத்திருப்பதாக அமெரிக்கர் பெருமை அடிப்பதில் குறைச்சலில்லை. இவர்களின் சுயரூபத்தை அம்பல மாக்குகிறார் டாக்டர் ஜே. சி. குமரப்பா இக்கட்டுரையில். **கிராம உத்தியோக் பத்திரிகை**யிலிருந்து எடுக்கப்பட்டது.

யுத்தத்தின் அடிப்படை

கம்யூனிஸ்ட்டுகள், கம்யூனிஸ்ட் அல்லாதவர்கள் என்று உலகையே அவர் இரு கூறுகளாகப் பிரிக்கிறார். தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், பொதுப் படையாக அவர் கூறும் பிரிவுகளை சோஷலிஸ்டுகள், ஏகாதிபத்திய வாதிகள் என்று நாம் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். சோஷலிஸ்ட் நாடுகளில் மக்கள் தங்களுக்கு தேவையானவற்றைப் பரிபூரணமாகப் பெறுகிறார்கள். ஏகாதிபத்திய வாதிகளின் கோஷ்டி என்பது தன்னலம் கொண்ட நிலப்பிரபுக்கள், தொழில் முதலாளிகள் வியாபார மன்னர்களின் சர்வதேச ரீதியான ஒரு சேர்க்கையே யாகும். இந்த இரு பெரும் பிரிவுகளும் ஒன்றுக்கொன்று நேர் எதிரானவை. ஆகவே இவை இரண்டும் ஒரு சேர வாழ முடியாது.

ஆசியாவின் கோரிக்கை

உலக மக்களின் மத்தியில் அமெரிக்காவின் செல்வாக்கும் பெருமையும் சரிந்து வருகிறது என்பதை அவர் சரியாக உணர்ந்திருக்கிறார். இது அமெரிக்காவின் நடத்தைபற்றி உலகின்

தீர்ப்பு என்பதை அவர் ஏன் புரிந்து கொள்ளவில்லை? உண்மையில் அவர் செய்திருக்க வேண்டியது என்ன? ஆர அமர நிலைமையைப் பரிசீலனை செய்ய முற்பட்டிருக்க வேண்டாமா?

அபிவிருத்தியடையாத நாடுகளில் வசிக்கும் நாம் கிரியாப்சையில் என்ன காண்கிறோம். நமது தேசங்களின் மீது ஐரோப்பிய நாடுகளுக்கு இருந்த ஏகாதிபத்திய ஆட்சிப் பிடிப்பை நீக்கிவிட்டு, அந்த இடத்தில் தங்களது பிடிப்பை ஏற்படுத்த அமெரிக்கா முயல்கிறது என்பதைத்தானே அமெரிக்காவின் திட்டங்களிலிருந்து காணக் கிடக்கிறது. ஆகவேதான் அமெரிக்காவின் ராணுவ ஆதிக்கத் திட்டத்தைக் கண்டு அதன் கூட்டாளிகளே மிக்க பொருமையடைகின்றனர். அவர்களுக்குள்ளேயே பூசல் வளர்ந்து வருவதை நாம் காண்கின்றோம். இந்த நிலைமை உலகிற்கு மட்டுமல்ல, அமெரிக்காவுக்கே பேராபத்தானதாகும். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி உட்ரோவில்சன் உலக அரசியலில் புகுத்திய அனுபவசாத்தியமான கொள்கைகள் காரணமாக உலக நாடுகள் சமீபகாலம் வரை அமெரிக்காவுடன் ஒத்துழைக்க முடிந்தது. ஆனால் நாம் இன்றைக்கு பார்ப்பது என்ன? உட்ரோ வில்சனின் லட்சியத்திற்குப் பதில் அந்த ஸ்தானத்தில் மக்கார்த்தியின் முறைகள் அரியாசனம் ஏறுகின்றன. இயற்கையாகவே உலகத்தில் அமெரிக்காவின் தலைமைக்கு ஆட்டம் கண்டிருக்கிறது.

இந்த நிலைமையில் அபிவிருத்தியடையாத ஆசிய நாடுகளின் மேல் தங்கள் ஆதிக்க ஆசையை நிறைவேற்றிக் கொள்வதிலே ஆசிய மக்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று அமெரிக்கா எதிர் பார்க்குமானல் அது 1வீண் ஆசையேயாகும்.

ஆசியாவின் கோரிக்கை

ஆசியா இன்றைக்கு விரும்புவது கம்யூனிஸமேயல்ல; ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து விடுதலையைத் தான் விரும்புகிறது என்பதை ஸ்டீவன்சன் உணர்ந்ததாகவே தெரியவில்லை. சீன, இந்தியா போன்ற நாடுகள் பாரம்பரியமாகவே நாகரிகச் சிறப்பு வாய்ந்தவை. நமக்குத் தேவையான சமுதாய அமைப்பை நிர்மாணித்துக் கொள்ள நமக்குத் திறமையுண்டு. "அமெரிக்கப் பிராண்ட் ஜனநாயகத்தைப்போல அது இல்லாமல் இருக்கலாம். ஆனல் அது நிச்சயமாக 'பலாத்கார' கம்யூனிசம் அல்ல. இந்தியாவின் பாரம்பரியம் சாத்வீக தர்மத்தில் ஊறிப்போனது. இதுவே இந்நாட்டின் தனிச் சிறப்பு. வாழ்க்கையின் குறிக்கோளே அறம், அன்பு அமைதி என்ற அடிப்படைக் கொள்கையுடையவர்கள் நாம். நம் மத்தியில் ஹைட்ரஜன் குண்டு, அணுகுண்டு போன்ற கொலைக் கருவிகளுக்கு இடமேயில்லை. நிர்மூலம் செய்யக்கூடிய இம்மாதிரி படுகொலைக் கருவிகளின் மூலம் நிரந்தரமான, செழுமையான சமாதானத்தை நிலைநாட்ட முடியாது என்பது நமக்குத் தெரியும். இத்தகைய ஆயுதங்களை அமெரிக்காவானலும் சரி, ருஷ்யா ஆனலும் சரி, யார் உபயோகித்தாலும் நமக்கு ஒன்றுதான். இன்று நமக்கு அவசியத் தேவையெல்லாம், கொடும் நாசகார ஆயுதங்களை கைவிடுவதற்கான துணிவும், நாடுகளிடையே சமாதான முறையில் நல்லுணர்வை வளர்க்கும் ஆர்வமுமேயாகும். அணுகுண்டின் அடிப்படையில் அமைந்துள்ள அமெரிக்க ஜனநாயகத்தை ஆசியா விரும்பி வரவேற்கிறது என்று ஸ்டீவன்சன் கருதுவரானல் அவர் நிச்சயம் ஏமாந்து போகப் போகிருர். கொரியா போர்க்களத்தில் அமெரிக்கர்களின் கைகளில் படிந்த இரத்தத்தின் ஈரம் இன்னும் உலரவில்லை. இங்கிலேயில் பலாத்காரத்தின் மூலமே சோவியத் நாடுகள் சிருஷ்டிக்கப்பட்டன என்று அமெரிக்கா எடுத்துக் கூறிக்கொண்டிருப்பதில் எவ்வித பிரயோஜனமுமில்லை. இருதரப்பாரின் கைகளுமே அந்நியரின் இரத்தத்தில் ஊறி வழிந்து கொண்டிருப்பதில் ஒருவரைப் பற்றி ஒருவர் குறை கூறுவதில் என்ன பயன்? சமாதானத்தின் பாதுகாவலர்கள் என்று கூறிக்கொள்ளும் இந்தப் போலிகள் அந்நிய நாடுகளிலிருந்து மரியாதையாக மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு வெளியேறி தங்கள் நாடுகளில் ஒழுங்காக ஆக்க வேலைகளில் ஈடுபடுவார்களானல் அதுவே அவர்கள் உலகத்திற்குச் செய்யும் மிகப் பெரிய நன்மை என்பதை உணரட்டும். தன் மனைவியுடன் உள்ள சண்டையைத் தீர்த்துக் கொள்ள யாருமே அயலாரை அழைக்க விரும்ப மாட்டார்கள். ஆகவே உண்மையிலேயே ஸ்டீவன்சனுக்கு சமாதானத்தில் அக்கறை இருக்குமானல், அமெரிக்கா தன் நடவடிக்கைகளைத் தன் நாட்டின் எல்லைக்குள்ளேயே நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று தன் அரசாங்கத்திற்கு யோசனை கூறட்டும். அதுதான் சிறந்த வழி.

"அமெரிக்கா சரியான பாதையிலேயே செல்கிறது: கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளைத் தன்னுடைய போக்கால் வலிமையுள்ளதாகவும், பத்திரமாகவும் நம்பிக்கையுடனும் வாழச் செய்கிறது" என்றெல்லாம் ஸ்டீவன்சன் கூறுகிறார். இது வீண் பிரமையன்றி வேறில்லை. ஸ்டாலின் உலக அரங்கிலிருந்து மறைந்தது சமாதானத்திற்கான வாய்ப்பு அதிகமாகிறது என்று அவர் எதிர்பார்க்கிறார். அப்படிப்பட்ட சமாதானம் கணப்பொழுதுதான் இருக்கும். நிலைத்து நிற்காது. ஏனென்றால் மாறியிருக்கும் சூழ்நிலைக்கேற்ப தங்களைத் தாங்களே மற்றவர்கள் சரிப்படுத்திக் கொள்ள முனைவார்கள். துவேஷம், பொறாமை, பேராசை ஆகியனவைகளில் உலகம் மூழ்கியிருக்கும் வரை சமாதானம் நிலைபெற முடியாது. இந்த விரும்பத் தகாத குணங்கள் நமது எதிரிகளின் ஏகபோக உரிமை என்று எண்ண வேண்டாம். நம்மை நாமே ஆத்ம விசாரணை செய்து கொள்ள வேண்டும். உலக சமாதானம் நிலைபெறும் ரீதியில் நம்முடைய வெளிநாட்டுக் கொள்கையை திருத்தியமைத்துக் கொள்ள வேண்டும்.

தலைமைப் பதவியா ?

ஒரு கையில் பேனாவை வைத்துக் கொண்டு மற்றொரு கையில் அணு குண்டையும் வைத்துக் கொண்டு ஆத்திரமூட்டும் வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டும் சமரஸம் பேசுவதாகப் பாவனை செய்வதெல்லாம் சுத்த சுயம் பிரகாசமான நயவஞ்சகமன்றி வேறில்லை. அமெரிக்காவின் சோவியத் எதிர்ப்பு பிரசாரங்களும் ஐ. நா. வைத் திரையாக உபயோகித்துக் கொண்டு அவர்கள் மற்ற நாடுகளைத் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்ளுவதும் ஸ்டீவன்சன் நினைப்பதைப் போல அமெரிக்காவின் சமரச மனப்பான்மையைக் காட்டவில்லை. அமெரிக்கா கண்டிப்புடனும் தீவிரமாகவும் பேசுகிறது; ஆனால் அந்த நேரத்தில் தங்களுக்குச் சாதகமான நாடுகளுக்கு பண உதவி செய்கிறது; ஆட்களை அனுப்பி ஒத்தாசை செய்கிறது; ஆதலால் அமெரிக்காவின் அற்புதம், மகத்துவம் மகோன்னதம் பற்றி மக்கள் அன்புடனும், வியப்புடனும் அனுதாபத்துடனும் நோக்குகிறார்கள் என்று அவர்கள் எண்ணிக் கொள்வது தங்களைத் தாங்களே திருப்தி செய்து கொள்வதைத் தவிர வேறில்லை. உலகத்தின் தலைமைப் பதவி தங்கள் மீது திணிக்கப்பட்டிருப்பதாக ஸ்டீவன்சன் கற்பனை செய்து கொள்ளுகிறார். உண்மை யென்னவென்றால் வறுமையும் பட்டினியும் தாண்டவமாடும் உலகத்தில் இவர்கள் தங்கள் பைநிறைய பணம் கலகலக்க உல்லாச பவனி வருகிறார்கள். இதற்குப் பெயர்தானா உலகத்தின் தலைமைப் பதவி? இல்லை. இது மற்றவர்களை அடிமைப்படுத்தும் முயற்சியன்றி வேறில்லை.

தப்புக் கணக்கு

ஏகாதிபத்தியங்களைச் சோஷலிசம் துரத்தியடித்துவிடும் என்ற பயம்தான் இன்றைய உலகத் தொல்லைகளுக்கெல்லாம் மூல காரணம். குறிப்பாக மக்களின விழிப்புணர்ச்சியும் அரசியலில் தங்களுக்குள்ள அதிகாரத்தை அவர்கள் உணர்ந்திருப்பதுவுமே இதில் முக்கியமான அம்சங்கள். கோடிக் கணக்கான மக்களை நிரந்தரமாக முட்டாள்களாக நாம் வைத்திருக்கமுடியாது. ஸ்டீவன்சன் கண்களுக்கு எது நம்பிக்கையின் ஒளியாகத் தெரிகிறதோ அது உண்மையில் உலகத்திற்கு அபாய அறிவிப்பாகும். "பார்மோசா சமாதானத்தின் அரணாகவும் பசுபிக் பிராந்தியத்தின் பந்தோபஸ்து முகாமாகவும் ஆகவேண்டும்" என்று அவர் விரும்புகிறார். மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டு சுயமதிப்பு ஏதும் இல்லாத, அமெரிக்காவால் தூக்கி வைக்கப்பட்டுப் பாராட்டப்படுகிற ஒரு அற்பமைனாரிட்டி தகராறைக் கிண்டிக் கிளரிவிடும் ஒரு அம்சமாகவே இருக்க முடியும்.

"வியாபாரம்தான் உயிர்; பெரிய கைத்தொழில் வியாபார நாடுகளும், அவைகளின் நலனும் நமது பந்தோபஸ்துக்கு அவசியமானவை" என்றும் அவர் கூறுகிறார்.

ஸ்டீவன்சனின் சித்தாந்தத்தில் உள்ள அபாயத்தை இச் சொற்கள் நமக்கு தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. சென்ற இரண்டு உலக மகா யுத்தங்களும் நமக்கு எதைப் புலப்படுத்துகின்கின்றன. மார்க்கெட்டுகளுக்கான போட்டாபோட்டிதான் இரண்டு உலக யுத்தங்களைத் தோற்றுவித்தது என்பதைத் தானே. உலக மார்க்கட்டையெல்லாம் தன் கைவசம் கொண்டு வந்தால் உலகில் நிரந்தரமாகச் சமாதானத்தை நிலை நிறுத்திவிடலாம் என்று நினைப்பதைப் போன்ற அபத்தம் வேறொன்றுமில்லை. வர்த்தகம் என்பது ஒரு சில தொழில் முதலாளிகளுக்கு ஜீவனகை

இருக்கலாம். ஆனால் நிர்பந்தம் மூலம் அந்த சரக்குகளை இதர பாமர மக்கள் மேல் திணிப்பது மூன்றுவது உலக யுத்தத்திற்கு வித்தாகவே யிருக்கும் "இந்தோ - சீன யுத்தத்தைப் பொருத்தே தென் கிழக்கு ஆசியாவின் பந்தோபஸ்து இருக்கிறது" என்ற அவருடைய விஷமத்தனமான அறிக்கை நமக்கு வியப்பையே அளிக்கிறது. யுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு பந்தோபஸ்தை ஏற்படுத்துவது எப்படி? கள்ளிச் செடியிலிருந்து மாம்பழம் கிடைக்கும் என்று யாராவது எதிர்பார்ப்பார்களா? உலகத்தை யெல்லாம் சுற்றிப் பார்த்த பிறகும் கூட ஸ்டீவன்சனின் கண் திறக்கப்படவில்லை. எந்த அளவு விஷய ஞானத்தோடு அவர் அமெரிக்காவை விட்டுப் புறப்பட்டாரோ அந்த அளவில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. தங்கள் நாட்டோடு அமெரிக்கர் தங்கள் ஜோலிகளைக் கவனித்துக் கொண்டு இருந்தாலே உலக சமாதானம் விரைவில் வந்துவிடும். எண்ணற்றவர்களை அடிமைப்படுத்தும் ஒரு சிலரின் ஆவேசம் இன்று உலகத்திற்கு வேண்டவே வேண்டாம். ஒவ்வொரு தேசமும் தனக்குத் தேவையானவற்றையே உற்பத்தி செய்து கொள்வதோடு திருப்தியடைய வேண்டும். சுயதேவைப் பூர்த்தியே குறிக்கோளாக இருக்க வேண்டும். மற்றவர்களை விடத்தான் தான் பிரதானம் என்று அமெரிக்கா எவ்வளவுக் கெவ்வளவு தன்னைப் பிரமாதப்படுத்திக் கொள்ளுகிறதோ அவ்வளவுக்கு அமெரிக்கா உலகத்திற்கு ஒரு தொல்லையாகவேயிருக்கும். அமெரிக்காவுக்கு உண்மையில் சமாதானத்தில் ஆர்வம் இருக்குமானால் அவர்கள் கொரியா, இந்தோ—சீனு, மத்திய கிழக்கு நாடுகள் இவற்றின் பிரச்னைகளைத் தீர்ப்பதாகப் பாசாங்கு செய்யாமல் தயவு செய்து தங்கள் நாட்டின் எல்லையோடு அவர்கள் நிற்கட்டும். அவரவர் பிரச்னைகளை அவரவர்களே தீர்த்துக் கொள்ளட்டும். இதில் அமெரிக்கர் தயவு ஒன்றும் தேவையில்லை

சமாதானத்தின் பேரால் அமெரிக்கர்களுக்கு, நாம் விடும் வேண்டுகோள் ஒன்றே ஒன்றுதான் 'அமெரிக்கரே தயவு செய்து மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு உங்கள் நாட்டுக்குக் கப்பல் ஏறுங்கள். இதுதான் சமாதானத்தை ஏற்படுத்தும் ஒரே ஒரு வழி" ★

சக்தி காரியாலயம்

புத்தக வியாபாரம்

115 E, மோபரிஸ் ரோடு, சென்னை-14

ராஜாஜி, டி. கே. சி., கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர், ஸ்ரீ வையாபுரிப் பிள்ளை, ஸ்ரீ ஆர். பி. சேதுப் பிள்ளை, ஸ்ரீ வே. சாமிநாத சர்மா, டாக்டர். மு. வரதராசன், ஸ்ரீ மு. அருணசலம், ஸ்ரீ அண்ணதுரை, கவிஞர் பாரதிதாசன், கல்கி, 'லக்ஷ்மி', க. சந்தானம், வ. ரா., புதுமைப் பித்தன், டால்ஸ்டாய், உ. வே. சாமிநாதய்யர் எழுதிய நூல்களும், மற்ற உயர்தரமான தமிழ் நூல்களும் எங்களிடம் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கும், லைபெரரிகளுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் நல்ல கமிஷன் உண்டு.

விலைப்பட்டியலுக்கு எழுதுங்கள்.

ஜீவிய சரித்திர ஆராய்ச்சி :

சுய சரிதம்

வெ. சாமிநாத சர்மா

அரசியல், மதம், இலக்கியம், சமுதாய நலன் இப்படி ஏதோ ஒரு துறையில், என்றும் நிலைத்திருக்கக் கூடிய சில அரிய காரியங்களைச் சாதிக்கிறவர்கள் ஒரு சிலரே. இவர்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலையும், இவர்களை அடிக்கடி நினைவு கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தையும் பூர்த்தி செய்து வைப்பதே ஜீவிய சரித்திரம். இவர்களை ஓவியனோ, சிற்பியோ, தங்கள் கற்பனைத் திறனால் உருவப்படுத்திக் காட்டலாம். ஆனால் இந்த உருவம், காலக்கறை பட்டுத் தேய்ந்தோ மாய்ந்தோ போய்விடலாம். ஆனால் இவர்களைப் பற்றி நன்கு எழுதப்பட்ட ஜீவிய சரித்திரமோ இவர்களை என்றென்றும் வாழ வைத்துக் கொண்டிருக்கும். மற்றும் ஓவியனோ, சிற்பியோ சமைத்த உருவம், இவர்களுடைய உடலமைப்பையும், முகத் தோற்றத்தையுமே நமக்குக் காட்டும். ஆனால் லட்சணம் வாய்ந்த ஒரு ஜீவிய சரித்திரம், இவர்களுடைய உள்ளத்தை நமக்குத் திறந்து காட்டும்; அந்த உள்ளத்தில் பொங்கியெழுந்து உணர்ச்சிகளில் நம்மை மிதக்கச் செய்யும்.

இலக்கியப் பயிர் செழுமையுற வளர்வதற்கு, இந்த ஜீவிய சரித்திரம் ஒரு சிறந்த உரம். இது பெரும்பாலும் உரை நடையாகவே திகழ்வது. காவியங்களிலோ, நாடகங்களிலோ என்னென்ன விதமான உணர்ச்சிகளை நாம் அனுபவிக்கிறோமோ, அந்த உணர்ச்சிகளில் பலவற்றையும், சிறந்ததொரு ஜீவிய சரித்திரத்தில் நாம் அனுபவிக்கலாம். அது மட்டுமல்ல, நாமே பல அனுபவங்களைப் பெறலாம். பிறருடைய அனுபவங்களிலிருந்து, நாம் சுயமாக அனுபவியாமல் அநேக அனுபவங்களைப் பெற்றுப் பயன்பெற ஒரு ஜீவீய சரிதம் உதவி செய்கிறது.

ஜீவிய சரித்திரத்தை எழுதுவதற்குச் சில நியமங்கள் உண்டு. யாரைப் பறறி நாம் எழுதுகிறோமோ அவருடைய உருவத்தைப் பின்னணியிலும், அவருடைய குணஞ் செயல்களை முன்னணியிலும் வைத்துக் காட்ட வேண்டும். குணஞ் செயல்களிலும், குணத்திற்கு முதலிடமும், செயலுக்கு இரண்டாவது இடமும் கொடுததுப் பேசவேண்டும். வருங்காலத்தவருக்கு சுவை தரக்கூடிய வகையிலும், பாடங் கற்பிக்கின்ற முறையிலும், வழிகாட்டியாயிருக்கின்ற ரீதியிலும் ஜீவிய சரித்திரம் இருக்கவேண்டும். அல்லன செய்து அழிந்து பட்டோரின் வாழ்க்கை வரலாறுகள், அல்லன செய்யாமலிருக்குமாறு எச்சரிக்கை செய்கின்றன; அப்படியே நல்லன செய்து மக்களின் மதிப்பிலே உயர்ந்து நின்றோரின் வாழ்க்கை வரலாறுகள், நற்செயல்களில் ஈடுபடுமாறு தூண்டுகின்றன; நற்செயல்கள் புரிவதற்கு வழிகாட்டிகளாகவும் இருக்கின்றன.

இங்ஙனம் வருங்காலத்தவருக்கு நல்ல படிப்பினையாயிருக்கும் வண்ணம் ஒரு ஜீவிய சரித்திரம் இருக்கவேண்டுமானால், அதன் நடை எக்காலத்தவரும் படித்து அனுபவிக்கக் கூடியதாயிருக்க வேண்டும். காலத்திற்கும் சூழ்நிலைக்கும் தகுந்தபடி பாஷையின் போக்கும், எழுத்து நடையும், படிப்பவர்களின் சுவையும் மாறுதலடைந்து போகக்கூடும். இந்த மாறுதலுக்குட்படாத நடையில் எழுதப்படுகின்ற ஜீவிய சரித்திரம்தான் சிரஞ்சீவி இலக்கியமாகத் திகழும்.

யாருடைய ஜீவியசரித்திரத்தை எழுதுகிறோமோ அவரிடத்தில் குணங்களும் குறறங்களும் கலந்திருக்கலாம். அப்பொழுது, அவருடைய குணங்களை வலியுறுத்திக் காட்டியும், குற்றங்களைக் கூடிய மட்டில் குறைத்துக் காட்டியும் எழுதவேண்டும். குற்றங்குறைகளை மட்டும் எடுத்துக்காட்டி எழுதப்படும் ஜீவிய சரித்திரம் அருவருப்பையே கொடுக்கும். எழுதும் ஆசிரியர், எவ்வளவு திறமை வாய்ந்தவராயிருந்தாலும், எவ்வளவு அழகான பாஷையில் எழுதினாலும், எவ்வளவு நாசூக்காக அந்தக் குற்றங் குறைகளை சுட்டிக் காட்டினாலும், அவர் எழுத்து அல்ப ஆயுளுடையதாகவே இருக்கும்.

ஜீவிய சரித்திரம்எழுதுவது ஒரு கலை. அக் கலையைப் பற்றி ஒரு அருமையான ஆராய்ச்சி இக்கட்டுரை. இது.

சரி; யாரைப்பற்றி எழுதப்படுகின்றதோ, அவரிடத்தில், எழுதுகின்ற ஆசிரியருக்கு, உறவு காரணமாகவோ, அவரிடமிருந்து பெற்ற சில சலுகைகள் காரணமாகவோ, இப்படி ஏதோ ஒரு சொந்தக் காரணத்திற்காக, விசேஷ பக்தியோ, மரியாதையோ ஏற்பட்டிருக்கலாம். இதற்காக அவருடைய குணங்களை மிகைப் படுத்திக் காட்டியும், குற்றங்குறைகளை அடியோடு மறைத்துக் காட்டியும் எழுதுதல் கூடாது. அப்படி எழுதப்படுகின்ற ஜீவிய சரித்திரமும் நீடித்து வாழமுடியாது. குணமோ, குற்றமோ ஓர் அளவுக்குட்பட்டே ஜீவிய சரித்திரத்தில் இடம் பெறுதல் வேண்டும்; பிற்காலத்தவருக்குப் படிப்பினையாயிருக்கும் வண்ணமும் சொல்லப்பட வேண்டும்.

மற்றும், சொல்லப்படுகின்ற பொருள் எவ்வளவு உயர்ந்ததாயிருந்த போதிலும், சொல்லுகின்ற முறை சரியாக இல்லாவிட்டால் அந்த உயர்ந்த பொருளும் தாழ்ந்த பொருளாகி விடும். அதே மாதிரி, சொல்லப்படுகின்ற பொருள், எவ்வளவு இழிவுடையதாயிருந்த போதிலும், சொல்லுகின்ற முறை மிகத் தெளிவாயிருந்தால்கூடப்பயனில்லை. சொல்லுகின்ற முறையினால் சொல்லப்படுகின்ற பொருள் உயர்ந்து விடாது. எனவே சொல்வதும் சொல்லப்படுவதும் ஒரே மாதிரி மேன்மையுற்றிருக்க வேண்டும்.

ஜீவிய சரித்திரம் எழுதும் ஆசிரியர், யாரைப்பற்றிஎழுதுகிறாரோ அவருடைய சம காலத்தவராக இருக்கலாம்; அல்லது பிற்காலத்தவராக இருக்கலாம். எக்காலத்தவராக இருந்த போதிலும், எழுதப்படுகின்றவருடைய வாழ்க்கையோடு ஒன்றுபட்டவராயிருக்க வேண்டும். அவரைப் பற்றி ஏற்பட்டுள்ள ஏடுகள் அனைத்தையும் பரிசிலனை செய்து பார்ப்பதோடு அவருடைய வாழ்க்கையிலும் புகுந்து பார்க்க வேண்டும். எப்படி ஒரு நடிகன், தான் எடுத்துக் கொண்ட பாத்திரத்தைத் திறம்பட நடிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், நடிக்கின்ற காலம் வரையில், அந்தப் பாத்திரமாகவே ஆகிவிடுகின்றானோ அது போல், ஜீவிய சரித்திரத்தை எழுதுகின்ற ஆசிரியர், எழுதப்படுகின்றவராகவே, எழுதுகின்ற காலம் வரையில் ஆகிவிடவேண்டும். அப்பொழுதுதான், அந்த ஜீவிய சரித்திரம் நிகழ் காலத்தைக் கடந்து நிற்கும்.

ஒருவருடைய ஜீவிய சரித்திரம், அவருடைய பிற்காலத்தில் தான் எழுதப்பட வேண்டுமென்றும், அப்பொழுதுதான் அதனை நிறைவுடைய ஜீவிய சரித்திரமென்று சொல்ல வேண்டுமென்றும் கூறுவர் சிலர். இதனைப் பொது நியதியாகக் கொள்ளலாமாயினும், ஒரு சிலர் விஷயத்தில், அவர் இருக்கின்ற காலத்திலேயே அவரைப் பற்றி எழுதப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுவதுண்டு. உதாரணமாக, மகாத்மா காந்தி விஷயத்தில் இந்த அவசியம் ஏற்பட்டுவிட்டது. இதற்குக் காரணம், அவருடைய வாழ்க்கை செறிந்த வாழ்க்கையாயிருந்ததுதான். இப்படி ஒரு சிலருடைய வாழ்க்கை வரலாறுகள், அவர்களுடைய காலத்திலேயே வருமானால், அவற்றை வரவேற்க வேண்டும்.

மேனாட்டைப் பொறுத்த மட்டில், ஜீவிய சரித்திரம் எழுதுவதற்கு வழி காட்டிச் சென்றவன் கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ப்ளுட்டார்க் என்ற கிரேக்க அறிஞன். இவனுடைய உரை நடையும் சொல்லுகின்ற முறையும் இன்றளவும் போற்றப்பட்டு வருகின்றன.

தமிழில், லட்சணத்தோடு கூடிய ஜீவிய சரித்திரங்கள் ஒரு சிலவே யென்று சொல்ல வேண்டும். இவையும் சமீப காலத்தனவே. இவற்றுள், மகா மகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையர் வெளியிட்ட அவரது ஆசிரியராகிய ஸ்ரீ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் சரித்திரமும், ஸ்ரீ. கி. சந்திரசேகரன் அவர்கள் எழுதிய அவரது தந்தையார் ஸ்ரீ. வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்களின் ஜீவிய சரித்திரமும் குறிப்பிடத்தக்கன.

ஜீவிய சரித்திரத்தின் ஒரு கிளையே சுய சரிதம். ஜீவிய சரித்திரத்தில், எழுதுகின்றவரும் எழுதப்படுகின்றவரும் வேறு வேறாயிருக்கின்றனர். சுய சரிதத்திலோ இருவரும் ஒருவராகவே இருக்கிறார். சுய சரிதத்தில், ஒருவர், தன்னைத்தானே காணவேண்டும்; தன்னைத் தானே விமர்சனம் செய்து கொள்ள வேண்டும். இது கடினமான காரியமென்பதில் ஐயமில்லை. ஆனால் இதை வெற்றிகரமாகச் சாதித்திருக்கின்றனர் அறிஞர் பலர்.

சுயசரிதம் எழுத ஒருவரைத் தூண்டுவன யாவை? இதுகாறும் நடத்தி வந்த வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்து அதைக் காட்டிலும் மேம்பட்ட வாழ்க்கையை நடத்த வேண்டுமென்ற ஒருவருடைய ஆவல், அவரை சுய சரிதம் எழுதுமாறு தூண்டலாம். அல்லது,

மாசு மறுவற்ற தன்னுடைய வாழ்க்கையைத், தன்னுடைய சம காலத்தவர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையே யென்ற வருத்த மேலீட்டால், பிற்காலத்தவராவது அறியட்டும் என்ற எண்ணத்துடன் ஒருவர், தன் சொந்த சரித்திரத்தை எழுதி வைத்துப் போகலாம். அல்லது, மற்றவர்கள் என்ன கருதிய போதிலும், தான் செய்த செயல்கள் யாவும் நியாயமானவை யென்று சாதிக்கும் நோக்கத்துடன் ஒருவர் சுயசரிதம் எழுதலாம். அல்லது, சென்ற கால வாழ்க்கையைக் நினைவு படுத்திப் பார்த்துக் கொள்வதில் சிலருக்கு மகிழ்ச்சி; அந்த மகிழ்ச்சிக்காக சிலர் சுயசரிதம் எழுதலாம். அல்லது, தான் வாழ்க்கையில் கண்ட அனுபவங்கள், மற்றவர்களுக்குப் பயன் படட்டும் என்ற நோக்கத்துடன் சிலர் சொந்த சரித்திரத்தை எழுதலாம். அல்லது, தன்னுடைய சூழ்நிலையில் வெறுப்புக் கொண்ட ஒருவர், தன்னிலே தான் இன்புறும் நோக்கத்துடன், தன் சொந்த சரித்திரத்தை எழுதி அதில் ஆறுதல் காணலாம். அல்லது, தான் அடைந்திருக்கிற புகழையோ, வகித்து வருகிற பதவியையோ ஆதாரமாக வைத்துக்கொண்டு மேலும் பொருள் சேர்க்க வேண்டுமென்ற வியாபார நோக்குடன் ஒருவர் சுயசரிதம் எழுதலாம்.

நோக்கம் எதுவாயிருந்த போதிலும், எழுதுவது பிறர்க்குப் பயன் படுமாயின், பிறருடைய வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொடுப்பதாயின் அந்த அளவுக்கு அதனை, அந்தச் சுயசரிதத்தைப் பாராட்டவே வேண்டும்.

சுயசரிதமென்பது, சமீப காலத்தில் வழங்கப் பட்ட பெயரென்றே சொல்ல வேண்டும். முற்காலத்தில் ஆண்ட அரசர்களும் வாழ்ந்த பெரியார்களும், தங்களைப் பற்றி ஞாபகக் குறிப்புகள் எழுதிவைத்துப் போயிருக்கின்றனர். ரோம சக்கரவர்த்திகளில் சிலரும், மொகலாய மன்னர்களில் சிலரும் எழுதிவைத்துப் போயிருக்கும் ஞாபகக் குறிப்புகள், இவர்களுடைய சுயரூபத்தை ஒருவாறு வெளிப்படுத்திக் காட்டுகின்றன; இவர்களுடைய மனோ நிலையை மட்டுமல்ல, இவர்களுடைய காலத்து நிலையையும் ஒருவாறு உணர்த்துகின்றன.

இன்னும், தங்களுடைய அறிவைப் பெருக்கிக் கொள்வதற்காகவோ, வியாபார நிமித்தமாகவோ, அரசாங்க தூதர்களாகவோ பல்வேறு நாடுகளில் சுற்றுப் பிரயாணஞ் செய்தவர்கள், தாங்கள் கண்டவற்றையும் கேட்டவற்றையும் குறிப்புக்களாக எழுதிவைத்துப் போயிருக்கின்றனர். இந்த யாத்திரைக் குறிப்புகள் மூலமாகவும் இவர்களுடைய அனுபவங்கள் வெளிப்படுகின்றன. பேஹியான், ஹுயூன்ஸாங், டாவர்னியர், பெர்னியர், மார்க்கோ, போலோ: இப்படி அநேகர் எழுதிவைத்துப் போன குறிப்புக்களைப் பார்த்தால் இந்த உண்மை புலனாகும்.

மற்றும் காவியங்களென்ன, நாடகங்களென்ன, இப்படிப் பல நூல்கள் வாயிலாகவும், அறிஞர்கள், தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

மேனாட்டைப் பொறுத்தமட்டில் சுயசரித மென்பது, இலக்கியத்தின் தனிப் பகுதியாகப் பிரிந்து நிலைத்தது கி. பி. பதினெட்டாவது நூற்றாண்டிலிருந்து தான். அதற்குப் பின்னரே நல்லவை என்று சொல்லக்கூடிய சில சுயசரிதங்கள் வெளிவந்திருக்கின்றன. இந்த இடத்தில் மகாத்மா காந்தியின் சுயசரிதமும் பண்டித ஜவஹர்லால் நேருவின் சுயசரிதமும் குறிப்பிடத்தக்கன. இவையிரண்டும் ஆங்கில இலக்கியத்தை வளம் படுத்தியிருக்கின்றன வென்று நாம் பெருமையோடு சொல்லிக் கொள்ளலாம்.

தமிழிலக்கியத்தில், சுய சரிதத்திற்குத் தனியிடம் ஏற்பட்டது மிகச் சமீப காலத்தில் தான். பண்டைய நூல்களில் ஆங்காங்கு வரும் சில குறிப்புக்களைக் கொண்டு, ஒரு சிலருடைய உள்ளத்தை நாம் ஒருவாறு திறந்து காண முடிகிறது. உதாரணமாக,

> "என்னை முன் நில்லன்மின் தெவ்விர் பலர்
> என்னை முன்னின்றும் கல்லின்றவர்"

என்ற திருக்குறளின் மூலம், ஒருவன் தன்னுடைய வீரத்தை நமக்கு அறிமுகப் படுத்திக் காட்டுகிறான். இன்னும்,

> "சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
> யாண்டுளனோ வெனவினவுதி என்மகன்
> யாண்டுளனாயினும் அறியேனோரும்
> புலி சேர்ந்து போகிய கல்லளைபோல
> ஈன்ற வயிறோ இதுவே.

என்ற புறநானூற்றுப் பாடல் மூலம் ஒரு தாய், தன் வீரத்தை மாண்புறப் புலப்படுத்திக் காட்டி நம்மைத் துணுக்குறச் செய்கிறாள். இங்ஙனம் சுயசரிதத்தின் சிறு சிறு அமிசங்கள், ஆங்காங்குப் பண்டைய நூல்களில் நட்சத்திரங்கள் போல் ஒளி விட்டுக் காட்டுகின்றன.

மகா மகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையரவர்கள், தமிழ் ஆராய்ச்சித்

துறையில், பிற்காலத்தவருக்கு வழிகாட்டியாயிருந்தது போல், சுயசரிதத்தை எழுதும் விஷயத்திலும் வழிகாட்டியாயிருக்கிறார். இவருடைய "என் சரிதம்" லட்சணம் வாய்ந்த சுய சரிதம் என்று துணிந்து கூறலாம். இதன் மூலம் சென்ற நூற்றாண்டில் தமிழ் நாட்டில் வாழ்ந்த பலதுறை அறிஞர்களை நாம் சந்திக்கிறோம். அவர்களோடு சல்லாபமும் செய்கிறோம். ஐயரவர்கள், நிகழ்ச்சிகளைச் சொல்லும்முறை வியக்கத்தக்கது. ஒரு சில வரிகளில் ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறார். ஆனால் அது நமது உள்ளத்தைக் அப்படியே உலுக்கி விட்டு விடுகிறது. உதாரணமாக, தம் ஆசிரியர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் உயிர் நீத்ததை எப்படி வருணிக்கிறார் பாருங்கள். —"திடீரென்று அவரது தேகத்தில் உள்ளங்கால் முதல் உச்சி வரையில் ஒரு துடிப்பு உண்டாயிற்று. மூடியிருந்த கண்களில் வலக்கண் திறந்தது. அவ்வளவுதான். அதே சமயத்தில் அந்த நல்லுயிர் புகுவதற்கு வாயிலும் திறந்தது போலும். அவர் மூச்சு நின்றபோதுதான் அவருடைய தமிழுணர்ச்சி நின்றது. திருவாசகம் என் கையிலிருந்து நழுவியது. கண்ணிலிருந்து நீரருவி புறப்பட்டது.

ஸ்ரீ திரு. வி. கலியாண சுந்தர முதலியாரவர்களின் "வாழ்க்கைக் குறிப்புகளு"ம் நாமக்கல் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளை அவர்களின் "என் கதை"யும் குறிப்பிட வேண்டிய சுய சரிதங்களாகும். ஸ்ரீ முதலியார் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் மூலம், பெசண்டம்மையார் தலைமையில் நடைபெற்ற ஹோம் ரூல் கிளர்ச்சி, தொழிலாளர் இயக்கத்தின் தோற்றம், திலகர் பெருமானின் சேவை இப்படிப் பல அரசியல் விஷயங்கள் நமக்குப் பரிச்சயமாகின்றன.

சுயசரிதம் எழுதுவதற்குத் தகுதி பெற்ற பெரியோர் பலர் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் சரிதத்தை எழுதி, தமிழ் மொழியை வளம் படுத்த வேண்டியது அவசியமாகும்.

(சென்னை அகில இந்திய ரேடியோவில் 14-7-1953 ல் பேசியது. நிலையத்தாரின் அனுமதியுடன் வெளியிடப் பெறுகிறது.) ★

சென்ற காலத்தைப் பற்றிய அறிவு

மந்திரஜபம் ஒரு முக்கியமான விஷயம். மனிதர்கள் தங்கள் சொல்லுக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது என்று நம்பிக்கையோடு இருந்திருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு அடையாளம்

— மாக்சிம் கார்க்கி

மனித குலம் சிருஷ்டித்துள்ள சகல செல்வங்களையும் பற்றிய ஞானத்தைத் தேடிக் கொள்பவனே கம்யூனிஸ்டாக முடியும்

— லெனின்

கம்யூனிஸ்ட் கோஷங்களை மட்டும் அறிந்து கொண்டால் போதும்; கம்யூனிஸ்ட் சித்தாந்தங்களின் முடிந்த முடிவுகளைப் பற்றி மட்டும் அறிந்தால் போதும்; சகல அறிவுக் துறைகளைப் பற்றியும் தெறிந்து கொள்ளவேண்டிய அவசியமில்லை, என்றெல்லாம் நினைப்பது தவறாகும். சகல அறிவின் பின் விளைவாகவே கம்யூனிசம் தோன்றியது.

— லெனின்

இன்றைய சமூக நாடகங்கள்

சில சமூதாய நாடகங்களில் கலைஞன் ஒருவன் தோன்றுவன் — ஆம் கதாநாயகன் தான். அவன் கனவு காண்பான். உன்மைக் கலைஞன் அல்லவா? பிறகு வாழ்வு கலைக்காகவா, வாழ்வதற்காகவா, தான் வாழப் பிறந்தவனா, அவள் (அவள்தான் கதாநாயகி) வாழாமல் இருக்கப் பிறந்தவளா என்பன போன்ற அடிப்படைகளில் அடிபட்டு 'வாழ்க' 'வீழ்க' என்ற வீரச்சிலம்பம் சுழற்றி ஆவேசப் பேச்சை அள்ளி வீசுவான். பிறகு காதலியின் கைக்குள்ளே அல்லது சதிகாரச் சாவின் வாய்க்குள்ளே ஒடுங்கிவிடுவான். இது இன்றைய சமூதாய நாடகம். இதில் எவ்வளவு புதுமை இருக்கிறது. நீங்களே சொல்லுங்கள்.

— அ. சீனிவாச ராகவன்

வைராக்கியம்

—[எம். சுப்ரமணியன்]—

இலுப்பூர் என்ற கிராமம் செங்கல்பட்டு ஜில்லாவைச் சேர்ந்தது. செங்கல்பட்டு ஜில்லா என்றாலே வானம் பார்த்த ஜில்லா என்று தான் சொல்லுவார்கள். இந்த ஜில்லாவில் ஆறுகள் இருந்தாலும், அதில் தண்ணீர் என்பதை பலமான மழை பெய்தால்தான் காணலாம். இந்த ஆறுகள் தண்ணீரைக் காணும் போது, விவசாயிகளுக்கு இந்தத் தண்ணீர் உபயோகமாக இருக்காது; விவசாயிகளுக்கு அவசியமான காலங்களில் ஆறுகளில் தண்ணீர் இருக்காது. எனவே இங்குள்ள விவசாயிகளுக்கு தங்களுடைய உழைப்பின் மீதே, நம்பிக்கை கிடையாது. தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு மாதம் பிறந்தால் சம்பளம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆபீஸில் வேலை செய்பவர்களுக்கும் மாதம் பிறந்தால் சம்பளம். விறகு உடைப்பவனுக்கும் மண் சுமப்பவனுக்கும் கூட மாலையானதும் கூலி இருக்கிறது. ஆனால் இந்த இலுப்பூர் விவசாயிகளுக்கோ பயிர்த்தொழிலில் அப்படிப் பலன் கிடைக்குமென்ற நம்பிக்கை கிடையாது. ஏனெனில், காலா காலத்தில் பருவ மழை பெய்வதில்லை. பச்சைப்பசேலென்று பயிர்கள் கர்ப்பிணியாக இருக்கும் சமயங்களில்கூட தீய்ந்து விடுவதும் உண்டு.

இந்த இலுப்பூரில் இரண்டு இலுப்பூர் உண்டு. ஒன்று, மேல் இலுப்பூர், மற்றொன்று கீழ் இலுப்பூர்; திசையைக் காரணமாகக் கொண்டு இப்படிப் பெயர்கள் வழங்கி வருகின்றன. மேல் இலுப்பூருக்கும் கீழ் இலுப்பூருக்கும் வித்தியாசம் சுமார் நான்கு பர்லாங்கு தூரம்தான் இருக்கும்.

இக் கிராமங்களில் நிலச்சுவான்தார்கள் என்கிற குட்டி ஜமீன்தார்கள் கிடையாது. எல்லாம் ரயத்துவாரி பட்டாதார்கள்தான். இக்கிராமங்களில், அதிக பட்சம் ஒருவருக்குப் பதினைந்து ஏக்கரா நிலத்துக்குமேல் இருக்காது. குறைந்த பட்சம், நிலமே இல்லாமல் கூலிவேலைகள் செய்யும் விவசாயிகள், ஒப்பந்தத்தின் மீது சரிபாதி மகசூல், குத்தகைக்கு வேலை செய்பவர்கள் முதல், அரைக்கால், கால், அரை, ஒரு ஏக்கரா என்று பதினைந்து ஏக்கரா வரை உடைய நிலப் பட்டாதாரர்கள் இக்கிராம வாசிகள்.

இவர்கள் தங்கள் பிரச்னையைப்பற்றி ஒரு சமயம் ஆராயத் தொடங்கினார்கள். இனியும் வானத்தைப் பார்த்த பிழைப்பு கூடாது; ஏரியை விஸ்தரித்துக் கரையை உயர்த்தி அதில் மழை காலத்தில் தண்ணீரை நிரப்பிக்கொள்ள வேண்டு

ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதில்லை. விட்டுக் கொடுக்கும் மனோபாவம் என்பதே கடுகளவுகூடக் கிடையாது, சாதாரணமாக ஆரம்பிக்கிற பூசல், சூரைக் காற்றுப்போல் கிராமிய வாழ்வையே மாற்றிவிடுகிறது. இன்றையகிராமங்களே எப்படி கட்சிப் பிரதி கட்சி பேசி ஒற்றுமை குலைந்து கிராமக்கட்டுக் கோப்பையே தகர்க்கிறது என்பதை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது இக்கதை

மென்று மேல் இலுப்பூர், கீழ் இலுப்பூர் கிராமவாசிகள் சேர்ந்து இந்த யோசனையைச் செய்தார்கள். இந்த யோசனையை சர்க்காருக்கும் தெரியப்படுத்தினார்கள். சர்க்காரும் இவர்கள் யோசனையை உடனே இரண்டாண்டு காலத்திற்கெல்லாம் பரிசீலனை செய்து பதில் அனுப்பினார்கள். அதில் "ஏரிக்கரையை உயர்த்தவோ அல்லது விஸ்தரிக்கவோ சர்க்காருக்கு தடையில்லை. ஆனால் ஏரிக்கு தண்ணீர் வருங்கால் உண்டா? அப்படி இல்லையென்றால் இப்போது இருக்கும் ஏரியே மழைக்காலத்தில் நிரம்பினால் போதும்" என்று பதில் எழுதியிருந்தார்கள்.

இந்த கிராம வாசிகளுக்கு சர்க்கார் உணர்த்திய பிறகுதான் தெரிந்தது, ஏரிக்கு வருங்கால் இல்லையென்று. இது பற்றி இந்த இரண்டு ஊராரும் கூடிப் பேசினார்கள். பிறகு ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

அதாவது, இந்த கிராமங்களுக்கு இரண்டு மைல் தூரத்தில் ஒரு பெரிய கால்வாய் ஓடுகிறது. மழைக் காலத்தில் அந்தக் கால்வாயில் நிறைய தண்ணீர் ஓடும். எனவே, அந்தக் கால்வாயில் மதகு ஒன்று கட்டி, ஏரியில் வந்து சேரும்படியாக அங்கிருந்து ஒரு கிளைக்கால்வாய் வெட்டி விட்டால் போதுமான தண்ணீர் ஏரிக்குக் கிடைத்து விடும் என்று தீர்மானித்தார்கள். இந்த யோசனையையும் சர்க்காருக்கு தெரியப்படுத்தினார்கள். சர்க்காரிடமிருந்து ஒன்றரை வருடத்தில் பதில் கிடைத்தது. என்ன பதில் எழுதி இருந்தார்கள் தெரியுமா? "சர்க்காருக்குப் பணம் இல்லாததால் இப்போது கால்வாயை வெட்டித்தர இயலாது, நீங்களே சொந்தச் செலவில் கால்வாயை வெட்டிக் கொண்டால், சர்க்கார் ஏரிக்கரையை மட்டும் உயர்த்திக் கொடுத்து விடும். ஆகவே முதலில் கால்வாயை வெட்டி முடித்த பிறகு, ஏரிக்கரையை உயர்த்த சர்க்காருக்கு மனுப்போடுங்கள்" என்று எழுதியிருந்தார்கள்.

இந்தப் பதிலைக்கேட்ட இக்கிராம வாசிகள் வருத்தப்படவில்லை.

தாங்களாகவே கால்வாயை வெட்டிக் கொள்வதில் முனைந்தார்கள். கால்வாய் மேல் இலுப்பூர் வழியாக வந்து, கீழ் இலுப்பூர் ஏரிக்கு வரவேண்டும். இது போலவே மேல் இலுப்பூரில் தாங்கல் என்ற சிறிய ஏரி இருக்கிறது. அந்த ஏரியில் தண்ணீர் நிரம்பினால் மேல் இலுப்பூர் விவசாயத்திற்குப் போதும். இந்தக் கால்வாயில் வரும் தண்ணீர் முதலில் மேல் இலுப்பூர் ஏரியை நிரப்பி விட்டுத்தான் கீழ் இலுப்பூர் ஏரிக்கு வரும். இதற்கெல்லாம் உடன்பட்டுத்தான் இந்த இரண்டு கிராம வாசிகளும் சேர்ந்து கால்வாயை வெட்டினார்கள். கடும் உழைப்பின் பேரில் சுமார் ஆறு மாத காலத்தில் இரண்டு மைல் தூர கால்வாயை வெட்டி முடித்து விட்டார்கள். கால்வாயை வெட்டி முடித்து விட்ட பிறகு சர்க்காருக்குத் தெரியப்படுத்தினார்கள். சர்க்காரும் உடனே ஏரிக்கரையை உயர்த்தியும் விஸ்தரித்தும் கொடுத்தார்கள்.

மேல் இலுப்பூராரும் கீழ் இலுப்பூராரும் வேறு வேறு ஊராக இருந்தாலும் பரஸ்பரம் அன்யோன்யமாய் ஒத்துழைத்து ஒரு பெரிய காரியத்தை—கால்வாயை வெட்டும் பிரம்மாண்டமான காரியத்தை — சாதித்து விட்டதாலோ, அல்லது கால்வாயை வெட்டி முடித்ததும் உடனே இரண்டொரு மாதங்களில் ஏரிக்கரையை சர்க்கார் உயர்த்திக் கொடுத்து விட்டதாலோ—அந்ந வருஷம் பலமான மழை பெய்தது. 'கலகல' வென்று பெருக்கெடுத்தோடும் ஆற்றைப் போல் புதிதாக வெட்டிய கால்வாயில் தண்ணீர் வழிந்தோடிக் கொண்டு ஓடி வந்து, மேல் இலுப்பூர் ஏரி, கீழ் இலுப்பூர் ஏரி ஆகிய இரண்டையும் நிரப்பி விட்டது.

இந்த ஏரிகள் இப்போது பார்ப்பதற்கு சமுத்திரம் போல் காட்சி அளித்தன. இனி, இரண்டு மூன்று வருஷங்களுக்கு மழை பொழியாவிட்டாலும்கூட இந்த இரண்டு கிராமங்களில் மட்டும் வயல்களில் நல்ல சாகுபடியாகும். இந்த கிராமவாசிகள் இப்போது நம்பிக்கையோடு—இன்று விதைத்தால் அறுவடை நிச்சயம் என்ற நம்பிக்கையோடு வயல்களில் வேலை செய்தார்கள்.

இந்த இரண்டு கிராமங்களையும் பார்த்து, மற்ற கிராமத்தார்கள் பொருமைப்பட ஆரம்பித்தார்கள். "லக்ஷ்மி கடாக்ஷம் இந்த கிராமங்களுக்குத்தான் கிட்டி இருக்கிறது" என்று சொல்லிக் கொள்வார்கள். எங்கும் எப்போதும் பச்சைப் பசேலென்ற பயிர்களையும், தங்க நிறமான முற்றிய கதிர்களையும் பார்க்கும் பக்கத்து ஊர்க்காரர்கள் அடடா, 'நாம் இந்த கிராமத்திலே நிலம் வாங்கி இருந்தால்...? இந்த ஊரிலே ஒரு நான்கு ஏக்கரா நிலம் இருந்திருந்தால்...? என்று ஏங்குவார்கள். தவிர, இந்த இரண்டு கிராமங்கள் மட்டும் செழிப்பானதற்குக் காரணம் என்ன, இவர்களைப் போல் சர்க்காரை எதிர்ப்பார்க்காமல்

தங்கள் கையே தங்களுக்குதவி என்று தங்கள் கிராமத்தை வளமாக்க நாமும் ஏன் பாடு பட்டு உழைக்கக் கூடாது என்று நினைக்கமாட்டார்கள்; செய்யவும் மாட்டார்கள். மேலும் இவர்கள் இந்த இலுப்பூர் கிராமங்களிலே ஒரு ஏக்கரா நிலம் விலைக்குக் கிடைக்காதா என்று எதிர் பார்ப்பார்கள். ஆனால் ஒரு ஏக்கராவுக்கு ஒரு லக்ஷம் ரூபாய் விலை கொடுத்தாலும் தங்கள் நிலங்களை விற்று விடத் துணியமாட்டார்கள் இந்த இலுப்பூர் வாசிகள்.

இவர்களைப் பார்த்து மற்ற கிராமவாசிகள் பொருமைப் படக்கூடிய மற்றொரு முக்கிய அம்சம் என்னவென்றால்—மேல் இலுப்பூர், கீழ் இலுப்பூர் என்கிற இந்த இரண்டு கிராமத்தார்களும், ஊர்ப் பெயரில் ஒற்றுமை இருப்பது போல், உள்ளம், உழைப்பு, பலன் இவைகள் போன்றவைகளிலும் ஒற்றுமையாக இருந்து வாழ்வதுதான்.

இந்த இரண்டு கிராமத்தாருக்கும் இடையே எதிலும் வேற்றுமை உண்டாகக்கூடாது என்று வண்ணார், நாவிதர், கருமார், தச்சர் போன்ற கிராமத் தொழிலாளர்களைக்கூட இரண்டு ஊராருக்கும் பொதுவாகவே வேலைசெய்ய அமர்த்திக் கொண்டார்கள். சர்க்கார் உத்தரவால் இந்த கிராமங்கள் தனித் தனி கிராமமாக இருந்தும், அவைகளைக் கவனியாமல் இரண்டு கிராமத்தார்களும் இணைந்தே இருந்தார்கள். ஆனால்ஒன்று; இந்த இரண்டுகிராமங்களுக்கு நாட்டாண்மைக்காரர்கள் மட்டும் இருவராகவே இருந்தார்கள். மேல் இலுப்பூர் கிராமத்திற்கு சம்பா நாய்க்கர் என்பவரும் கீழ் இலுப்பூர் கிராமத்திற்கு வெம்புலி நாய்க்கருமாகக் 'கிராமத் தலைமை பீடத்தை அலங்கரித்தார்கள்.

இந்த இரண்டு கிராமங்களின் ஒற்றுமையையும், இவர்கள் சர்க்காரை எதிர் நோக்காமல் சுய முயற்சியில் விவசாயத்தை நல்ல முறையில் நடத்தி உணவு உற்பத்தியைப் பெருக்குவதையும் கண்ட சர்க்கார், புளகாங்கிதம் அடைந்து இந்த இரண்டு கிராமங்களுக்கும் "சபாஷ்" பட்டம் கொடுத்தார்கள். மேலும் இந்த இலுப்பூர் கிராமவாசிகளின் உதாரணத்தைப் பின் பற்றுமாறு மாகாணம் பூராவும், ஏன் இந்தியா பூராவும் பிரசாரம் செய்தார்கள். அரசாங்கத்தார். சர்க்காரின் உணவு உற்பத்தி விளம்பரங்களில் இலுப்பூர் கிராமத்தின் உதாரணத்தை விளக்கி அதன்படி உற்பத்தியைப் பெருக்குங்கள் என்ற விளம்பரம் செய்தார்கள்.

இவ்வளவு புகழ் வாய்ந்த இந்தக் கிராமத்து மக்களின் நிலை உலகத்தார் பார்த்து அனுதாபப்படும் நிலைமைக்கு வந்து விட்டதென்றால், இக் கிராமத்தை அறிந்த யாவரும் திடுக்கிட்டுத்தான் போவார்கள்.

★

கீழ் இலுப்பூரில் துர்க்கை அம்மன் கோவில் ஒன்று இருக்கிறது. இந்தக் கோவிலுக்கு மேல் இலுப்பூர், கீழ் இலுப்பூர் ஆக இரண்டு கிராமத்தின் பொதுப் பணம் சுமார் ஆறாயிரம் ரூபாய் வரை சேர்ந்திருந்தது.

இந்தப் பணம் பூராவும் கீழ் இலுப்பூர் நாட்டாண்மைக்காரர் வெம்புலி நாய்க்கர் வசமே இருந்தது. இவர் நெல்மிஷின் ஒன்று போட்டுபுதிதாக வியாபாரம் ஆரம்பித்தார். இது மேல் இலுப்பூராருக்கு இவர்மீது சந்தேகத்தை தூண்டிவிட்டது; துர்க்கை அம்மன் பணத்தைக் கொண்டுதான் வியாபாரம் செய்கிறார் இவர் என்று திட்டமாக நம்பினார்கள். எனவே இந்த மேல் இலுப்பூர் வாசிகளில் சிலர், தங்களூர் நாட்டாண்மைக்காரரான சம்பா நாய்க்கரிடம் இது பற்றி புகார் செய்தார்கள்.

"நாட்டாரே, இந்த வெம்புலி நாய்க்கர் மிஷின் கிஷின் போட்டு தடபுடலா பணத்தை வாருகிறாரே இவருக்கு ஏது இம்மாத்தம் பணம்?" என்று ஒருவர் கேட்டார்.

இதற்குள் மற்றொருவர் "இது தெரியாதா? எல்லாம் கோவில் பணம்தான்" என்று அலட்சியமாகப் பதில் கூறினார். "ஆமாம் இருக்கும் இருக்கும்...சொந்தத்திலே முழுசா ஒரு காணி நிலம் கூட இல்லாத மனுஷனுக்கு பின்னே இம்மாத்தப் பணம் எங்கிருந்து வந்துடும்ன்னே" என்று வியாக்யானம் செய்தார் பொன்னு நாய்க்கர் என்பவர்.

இப்படி பலர் பலவாறாக, ஆனால் ஒரே முகமாக, கூறுவதைக் கேட்ட நாட்டார் சம்பா நாய்க்கரும் "ஏன் இருக்கக் கூடாது?" என்ற சந்தேகக் கேள்வியை தமக்குத் தாமே கேட்டுக் கொண்டார்.

பிறகு, தம் ஊராரிடம் சம்பாநாய்க்கர், "கீழ் ஊர்நாட்டாரிடம் இந்தப்பணத்தை இப்பவே கேட்டு வாங்கி வருகிற ஆடி மாதம் அம்மனுக்குக் காப்பு கட்டிவிடணும் என்ன சொல்றீங்க?" என்று கேட்டார். "ஆமாம்......சீக்கிரம் அம்மனுக்கு செய்யறதுதான் நல்லது" என்று ஒருவர் ஆமோதித்தார். இவரைத் தொடர்ந்து அவ்வூரார் பலரும் ஆமோதித்

தார்கள். "சரி வாங்க போவோம்... போய் வெம்புலி நாய்க்கரையும் அவ்வூராரையும் கண்டு விஷயத்தைச் சொல்லுவோம்" என்று கிளம்பினார் நாட்டார் சம்பா நாய்க்கர். அவரைப்பின் தொடர்ந்துப் பலர் சென்றனர். கிராமத்தில் கூட்டம் போட்டார்கள். அவ்வூர் நாட்டாண்மைக்காரரர் வெம்புலி நாய்க்கரை அழைத்தார்கள். இவரை, மேல் இலுப்பூர் நாட்டார் சம்பா நாய்க்கர் கேட்டார்; "ஏனண்ணா, நம்ப அம்மன் கோவில் பணம் எவ்வளவு சேர்ந்திருக்கு? வருகிற ஆடி மாதம் அம்மனுக்குக் காப்பு கட்டி பொங்கல் இடனும்னு தீர்மானிச்சிருக்கோம். என்ன சொல்றீங்க?"



இதற்கு வெம்புலி நாய்க்கர் தொண்டையை கனைத்துக்கொண்டு சொன்னார்; "அம்மனுக்கு பொங்கலிடுவதில் எனக்கொன்றும் ஆக்ஷேபணை கிடையாதுங்க, பணமும் ஆறுபிரத்து சொச்சம் சேர்ந்து இருக்குது. இந்தப் பணத்தைவியாபாரத்திலே போட்டு இருக்கிறேன். அதனாலே அம்மன் விழாவை அடுத்த வருஷம் ஆடியிலே வெச்சிக்கலாம்னு யோசனை. என்ன சொல்றீங்க?" இதைக்கேட்டு மேல் இலுப்பூர் வாசிகள் ஒருவரோடு ஒருவர் குசுகுசு வென்று காதோடு காதாக ஏதோ பேசிக்கொண்டார்கள். அதில் ஒருவர் தங்கள் நாட்டார் சம்பா நாய்க்கரிடம் காதோடுசொன்னார்; 'கேட்டீங்களா? நாங்க சொன்னது சரியாப் போச்சா?

மேல் இலுப்பூர் நாட்டார் சம்பாநாய்க்கர் தொண்டையை அதட்டும் தோரணையில் கனைத்துக் கொண்டார். பிறகு நிமிர்ந்து உட்கார்ந்து "ஆமாங்க...கோயில் பொதுப்பணத்தை, இப்படி எங்களையெல்லாம் கலக்காமே...உங்கபாட்டுக்கு இப்படி செய்தது, சில பேருக்கு பிடிக்கல்லே, அதனாலே இந்த வருஷமே அம்மனுக்கு நடத்துவதை நடத்திடனும்னு...என்னாங்க?" என்று வெம்புலி நாய்க்கரை மீண்டும் வலியுறுத்திக் கேட்டார்.

வெம்புலி நாய்க்கர் தம் கொத்தமல்லிக் கத்தை மீசையை தடவிக்கொண்டே 'நீங்க சொல்றது வாஸ்தவம் தானுங்க... ஆனால் இப்போ என்னிடம் தம்பிடிகூட இல்லீங்களே...எல்லாம் கட்டிடத்திலும் மிஷினிலுமாபோட்டிருக்கேன்...அதான் பார்க்கிறேன்......" என்று தயக்கத்தோடு கூறினார்.

இவர் இப்படிக் கூறியதும் மேல்இலுப்பூர் வாசியான ஒரு படபடத்த பேர்வழிக்குக் கொஞ்சம் அதிகமாகவே கோபம் வந்து விட்டது.

"யார் அப்பன் வீட்டு பணத்தை கையாண்டுங்க...அதெல்லாம் முடியாதுங்க இப்பவே பணத்தை எண்ணி வெச்சிடனும்" என்று கண்டிப்பாகக் கூறினார்.

உடனே இந்தப் பேர்வழியை, "டேய், மாசி, நாங்க இருக்கிறோம் பெரியவங்க. நாங்க பேசிக்கிறோம். நீயேண்டா இதிலே தலையிடுறே?" என்று அதட்டினார் சம்பா நாய்க்கர்.

இவரைத் தொடர்ந்து பலரும் அந்த ஆசாமியின் படபடப்பை அடக்கினார்கள்.

"சரிதாங்க இனிமே நான் பேசினா ஏண்டா கழுதேன்னு கேளுங்க" என்று சொல்லிவிட்டு அந்த இடத்திலிருந்து சர சர வென்று எழுந்து சென்று ஒரு புளிய மரத்தடியில் போய் கொஞ்சம் ரோஷமாகவே உட்கார்ந்தார்.

வெம்புலி நாய்க்கர் தம் கணக்கு புஸ்தகத்தை, மேல் இலுப்பூர் நாட்டாரிடம் காட்டி, "இதோ பாருங்க...நான் கோயில் பணத்தை அம்மன் பேராலேயே வரவு வைச்சிருக்கேன். வட்டியும் அசலுமா அடுத்த வருஷத்திலே திருப்பிக் கொடுத்திடறேனுங்க என்னங்க?" என்று நயமாகவே கூறினர்.

இவர் கூறுவது நியாயமாகவே தோன்றியது இவர் ஊரான கீழ் இலுப்பூர் வாசிகளுக்கு. இவரிடம் இந்த ஊராருக்கு அதிக நம்பிக்கை உண்டு; நாணயஸ்தர் என்ற மரியாதையும் உண்டு. அதனல் இவர் எதைச் சொன்னலும் அப்படியே நம்புவார்கள் இலுப்பூர் வாசிகள்.

ஆனல் மேல் இலும்பூர் வாசிகளோ, "அதெல்லாம் முடியாதுங்க...இன்னைதுங்க இது...கணக்காம் வட்டியாம் இதெல்லாம் யாருக்குங்க வேணும். இப்போது பணம்தான் வேணுங்க" என்று மேல் இலுப்பூர் வாசியான அவசர குடுக்கை கிழம் ஒன்று துள்ளியது. இக் கிழவரைத் தொடர்ந்து "அதாங்க... நம்ப ஊர் பணம் நம்ப கிட்டவே இருந்தால் இந்த வம்பெல்லாம் ஏன் வருகுதுங்கோ..." என்று அழுத்தமாகக் கூறினர் ஒருவர். மற்றொருவர், தங்கள் ஊர் நாட்டார் சம்பா நாய்க்கரைப் பார்த்து "நாட்டாரே! நம்ப ஊரிலே மட்டும் கோயில் இல்லையா என்ன? நம்ப காளியம்மனுக்கு, நம்ப சாப்பு கட்டினல் போச்சு...நம்ப தெய்வத்தை உட்டுட்டு அசலூர் தெய்வத்தை கும்பிடுவதிலே என்னங்க புண்ணியம்" என்று விதம் பிரித்துப் பேசினர்.

இவர்களுடைய ஏகோபித்த அபிப்ராயத்தைக் கேட்ட சம்பா நாய்க்கரும் "ஆமாங்க பணத்தை இப்பவே கொடுத்துடுங்க...இப்பவே அம்மனுக்கு, செய்வதை செய்துடுவதுதானுங்க நல்லது" என்று முடிவாக அழுத்தமாகக் கூறிவிட்டார். இந்த மேல் இலுப்பூரார் இப்படி விதம் பிரித்து, உங்களூர் சாமி, எங்கள் ஊர் சாமி என்று பேசுவதைக் கேட்ட கீழ் இலுப்பூர் வாசிகளுக்கு கோபம் வந்துவிட்டது. இவர்களில் ஒருவர், தங்கள் ஊர் நாட்டார் வெம்புலி நாய்க்கரைப் பார்த்து "என்னங்க, அவங்க பணத்தை கடாசிடுங்க...அவுங்க சாமியை அவுங்களே தாராளமாக கும்பிட்டுகிடட்டும்" என்று கோபமாகக்கூறினர். இவரைத் தொடர்ந்து "ஆமாங்க அவங்க இவ்வளவு சொல்லியும் எடுத்துக்கிலேன்ன நாம் என்னங்க பண்றது. இப்போ அவுங்க பணத்தை மட்டும்ன கொடுத்துவிடுங்கோ, நம்போ அடுத்த வருஷம் அம்மனுக்கு பூசை நடத்திக்கலாம்" என்று யோசனை கூறினர் ஒருவர்.

"அதாங்க நல்லது. அவங்களுக்கு ஏனுங்கோ நம்மாலே கஷ்டம்" என்று பக்குவமாக கூறினர் ஒருவர்.

இப்படியே கீழ் இலுப்பூர் வாசிகள் பலரும் கூறவே, வெம்புலி நாய்க்கருக்கும் இவர்கள் சொல்வதுபோல் பணத்தைக் கொடுத்து விடுவதுதான் நல்லது என்று தோன்றியது:

ஆனல் பணம்...

பக்கத்தில் உள்ள பட்டியூர் என்ற கிராமத்து சிறிய பணக்காரர் ஒருவருக்கு நெல்மிஷினை அடமானம் வைத்து மொத்தப் பொதுப் பணத்தில் பாதிப் பணம் மூவாயிரத்து சொச்சத்தை மேல் இலுப்பூராரிடம் கொடுத்து விட்டார் வெம்புலி நாய்க்கர்.

அவர்களும் பணம் வந்ததே போதும் என்று தடபுடலாகத் தங்களூர் காளியம்மனுக்கு விழா நடத்த ஏற்பாடு செய்தார்கள். இந்த ஏற்பாட்டில் கீழ் இலுப்பூராரை அவர்கள் கலந்து பேசவே இல்லை. ஆனல் விழா நடத்தும்போது மட்டும் மரியாதைக்காக இவர்களை வந்து கூப்பிட்டார்கள்.

ஆனல் கீழ் இலுப்பூர் வாசிகளோ, நம்மை மதிக்காமல் அவ்வளவு கண்டிப்பாகப் பிரிந்து போய்விட்டவர்களுடைய விழாவுக்கு போகக்கூடாதென்று கட்டுப்பாடாக அவர்கள் விழாவுக்குப் போகாமலேயே இருந்துவிட்டார்கள்.

மேல் இலுப்பூரார்—காளியம்மனுக்கு வெகு விமரிசையாகக் காப்பு கட்டுதல் விழா நடத்தினர்கள். பொங்கல் இடப்பட்டு, ஆடுகள் கோழிகள் பலியிடப்பட்டன. இரண்டு நாள் தெருக்கூத்து; முதல் இரவு கர்ணன் சண்டை, இரண்டாம் இரவு பதினெட்டாம் போர்!

இந்த கூத்துக்கும் காளி பூஜைக்கும், பக்கத்து சுற்றுபுறங்களிலுள்ள கிராமத்து ஜனங்களெல்லாம் திரண்டு, வந்தனர். வந்த ஜனங்களெல்லாம், காளியம்மன் பூஜையைப் பற்றியும் தெருக்கூத்தைப் பற்றியும் பேசிக்கொண்டதைவிட, இந்த இரண்டு கிராமங்களும்—இணைபிரியாமல் ஒன்று சேர்ந்து உழைத்து கிராமத்தைச் செல்வம் கொழிக்கும் பூமியாக உண்டாக்கியதையும் கிராமங்கள் பிரிந்து விட்டதையும் பற்றியே அதிகமாகப் பேசிக்கொண்டார்கள்.

இவர்கள் இவ்வளவு அமர்க்களமாக காளியம்மன் திருவிழா நடத்தியதைக் கண்ட கீழ் இலுப்பூர் கிராம வாசிகளுக்கு ரோஷம் பிறந்துவிட்டது.

இந்த ஊர் நாட்டாண்மைக்காரர் வெம்புலி நாய்க்கருக்குத்தான் அதிகமாக ரோஷம் கிளம்பிவிட்டது. தன்னை அவமானப்படுத்தி, தன் ஊரையே அவமானப்படுத்திய மேல் இலுப்பூரார் பொருமைப் படும்படியாக, இவர்களை விட இன்னும் அமர்க்களமாகத் துர்க்கை அம்மனுக்கு பூஜை நடத்த வேண்டுமென்று துடிதுடித்தார். இந்த கிராம வாசிகள் பலரும், இப்போதே அம்மனுக்கு விழா நடத்த வேண்டும் என்று அவசரப்பட்டார்கள்.

'எனவே, அம்மன் விழாச்செலவுக்காக, வெம்புலி நாய்க்கர். அடமானம் வைத்திருந்த நெல் மிஷினை ஏற்கனவே அடமான வைத்துக் கொண்டிருந்தவருக்கே விற்றுவிட்டார்! துர்க்கை அம்மனுக்கு வெகு விமரிசையாக விழா நடத்த ஏற்பாடு செய்தார்கள். மேல் இலுப்பூராராவது இவர்களை மரியாதைக்காக விழாவுக்கு வந்து அழைத்தார்கள். இவர்கள் அதுகூட அவர்களை அழைக்கவில்லை; அவர்களை அவமானப்படுதத்தி வெட்கப் படும்படியாக விழா நடத்துவதில் முனைந்தார்கள்.

அவர்கள், விழாவுக்கு சாதாரண பறைமேளம் தான் வைத்தார்கள்! இவர்களோ, தஞ்சாவூர் பாண்டு வாத்தியமும் உயர்ந்த நாதஸ்வர கச்சேரியும் வைதது விழா நடத்தினார்கள். இவைகள் போதாதென்று சுற்றுபுறங்களிலுள்ள கிராமங்களில் இருக்கும் அத்தனை பறைமேளங்களையும் வைத்து முழக்கினார்கள்.

அவர்கள் சாதாரண மத்தாப்பு பாணம் மட்டும்தான் உபயோகித்தார்கள். இவர்கள் பெரிய பெரிய வெடிகளை வெடித்து, விண்ணும் மண்ணும் அதிரச் செய்துவிட்டார்கள். மேலும் வான வேடிக்கை வைத்து இரவைப் பகலாக்கினார்கள் சில நிமிஷங்களுக்கு.

அவர்கள் இரண்டு நாள் கூத்து நடத்தினார்கள். இவர்களோ, பத்து நாள் தெருக்கூத்து வைத்து, இடைவிடாமல் இரவில் கூத்து பார்த்தவர்களை ஒரு மாதம் வரைத் தூக்கத்திலிருந்து எழுந்திருக்காதபடி செய்துவிட்டார்கள். இப்படி ஏட்டிக்குப் போட்டியாக தடபுடலாகச் செய்தார்கள்.

இந்த நிகழ்ச்சி மேல் இலுப்பூராருக்கு இவர்கள் மீது துவேஷத்தை வளர்த்தது! 'பணம் இல்லை, ஆகவே அடுத்த வருஷம் அம்மனுக்குப் பூஜை நடத்தப் போகிறோம்' என்று சொன்னவர்கள், நாம் பிரிந்து வந்துவிட்ட பிறகு நமக்குப் போட்டியாக இவ்வளவு அட்டகாசமாக அம்மனுக்குப் காப்பு கட்டினார்களே; இவர்களுக்குப் பணம் எங்கிருந்து வந்ததாம்... அதுவும் இவ்வளவு அமர்க்களமாகச் செய்ய பணம் ஏது? இவர்கள் நம் ஊராரை மோசம் செய்து இப்படி நடத்தினார்கள்'' என்று எண்ணினார்கள் மேல் இலுப்பூர் வாசிகள். இவர்கள் கண்ட இடங்களெல்லாம் "நாங்கள் கீழ் இலுப்பூராரை நம்பினோம்; எங்களை மோசம் செய்துவிட்டார்கள்" என்று தூஷணையாகப் பிரசாரம் செய்தார்கள். மேலும், 'மரியாதைக்காக அவர்களை நாம் கூப்பிட்டோம்; ஆனால் அவர்கள் நம்மை மதித்து கூப்பிடவில்லை பார்த்தனையா?...எவ்வளவு திமிர்...மண்டை கர்வம் பிடித்தவர்கள்; என்று திட்டவும் ஆரம்பித்தார்கள்.

இப்படி இவர்களுடைய போட்டா போட்டி, துவேஷம, காய்ச்சல், பொருமை, ஒருவருக்கொருவர் புரிந்துக் கொள்ளாமை, வாய்ச்சண்டை, இவைகள் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வந்தது.

இவர்களுடைய விரோதத் தன்மையைக் கண்ட மற்ற பக்கத்து கிராமத்தார்கள்—இவர்களின் ஒற்றுமையையும் பொன் விளையும் நிலங்களையும் கண்டு பொருமைப் பட்டவர்களெல்லாம்...இப்போது கைக்கொட்டிச் சிரிக்க ஆரம்பித்தார்கள்.

ஆனால் இந்த இரண்டு கிராமத்தாரும், யாருடைய சிரிப்பையும் பரிகாசத்தையும் பொருட்படுத்தவில்லை. ஒரு லட்சிய வாதியைப் போல, தங்கள் காரியமே பெரிது என்று வைராக்யத்துடன் போட்டா போட்டிப் போர் முனையில் இறங்கினார்கள். வண்ணார், நாவிதர், கருமார், தச்சர் போன்ற உப தொழிலாளர்கள் இதுவரை இரண்டு கிாமத்திற்கும் பொதுவாகவே இருந்து வந்தார்கள். இப்போது இரண்டு கிராமத்திற்கும் வெவ்வேறு உபதொழிலாளர்களை நியமனம் செய்துக் கொண்டார்கள். இப்படி, இவர்களுடைய விரோத மனப்பான்மை, வைராக்கியம் இன்னும் பலப்படத் தொடங்கியது.

ஒரு நாள், வயல் வெளியில் மேல் இலுப்பூர் வாசியான வெள்ளை நாய்க்கன் என்பரைக் கிழ் இலுப்பூர் வாசியான் தொப்புளான் நாயக்கன் என்பவர் அடித்துவிட்டார். அடி அவ்வளவு

88898

பலம் இல்லையானாலும், இந்தச் சம்பவம் இந்த இரண்டு கிராமங்களின் தலைவிதியையே மாற்றிவிட்டது.

உண்மையில் இவர்கள் இரண்டு பேருக்கும் உள்ள தனிப்பட்ட குரோதத்தினாலேயே சண்டை போட்டுக்கொண்டார்கள். மேல் இலுப்பூர் வெள்ளை நாய்க்கன் வயல் பக்கத்தில் கீழ் இலுப்பூர் தொப்பளான் நாய்க்கன் வயல் ஒன்று இருந்தது. வெள்ளை நாய்க்கன் என்பவர் தன் வயலில் அண்டை வெட்டி தொப்பளான் நாய்க்கன் வயலில் போட்டுக்கொண்டே போனார்—அதாவது, இருவர் வயல்களுக்கும் இடையே இருக்கும் வரப்பை, தொப்புளான் நாய்க்கன் வயல் பக்கம் நகர்த்தி விட்டு, இவருடைய நிலத்தில் இரண்டு அல்லது மூன்று அங்குலம் நிலம் வெள்ளை நாய்க்கன் ஆக்ரமித்து கொண்டான் என்பது தொப்புளான் நாய்க்கன் புகார். இதே புகாரை வெள்ளை நாய்க்கன் என்பவரும் தொப்புளான் நாய்க்கன் மீது செய்தார். வாக்குவாதம் முற்றிக் கைகலந்து விட்டார்கள்.

இவர்கள் இருவருடைய குரோத உணர்ச்சியால் ஏற்பட்ட கைகலப்பு, இவர்களுடைய ஊர் ஒன்றோடொன்று கைகலக்கும்படி நேரிட்டு, விட்டதென்றால்—இதுதான் துக்கப்பட வேண்டிய சம்பவம்.

வயலில் உதைபட்டுக் கொண்ட மேல் இலுப்பூர் வெள்ளை நாய்க்கன் அங்கிருந்து ஊருக்கு ஓடினார். நாட்டாண்மைக்காரர் சம்பா நாய்க்கரிடமும் மற்ற ஊர் ஜனங்களிடமும் "ஐயோ, என்னை கீழ் ஊரான் அடித்து விட்டானே!" என்று கோவென அழுது முறையிட்டார். இவருடைய நிலையைக் கண்டு அவ்வூர் மக்கள் மனம் கொதித்தார்கள். 'கீழ் ஊரான்களை இனிச் சும்மா விடக்கூடாது; இப்படி விட்டுக்கினே போன நாளைக்கு நம் எல்லோரையும்தான் அடிப்பானுங்க...வாங்க போயி அவுங்களை உதைத்துக் கட்டலாம்" என்று துடிதுடித்தார் சிறுமணி நாய்க்கன் என்ற அவ்வூர் புல்தடுக்கி பயில்வான்.

"ஆமாம்......ஒருத்தனை அடித்தாலென்ன ஊரையே அடித்தாலென்ன? எல்லாம் ஒன்றுதான்...அந்தப் பசங்களை லேசில் விடக்கூடாது" என்று துள்ளினார் ஒரு ஐம்பது வயது பாலகுமாரன்.

கையில் கிடைத்த பொருள்களுடன் யுத்த சன்னத்தர்களாக போர் முரசு கொட்டி கிளம்பிவிட்டனர். கையில் கிடைத்த அரிவாள், தடி கத்தியும் ஊரே போருக்குத் தயாராகி விட்டது.

"என்ன நாட்டாரே! சும்மா நிக்கிறீங்க. புறப்படுங்க" என்று நாட்டாரை அதட்டினார் ஒருவர்.

நாட்டார் சப்பா நாய்க்கருக்கு இது பெரிய அதிர்ச்சியை உண்டாக்கிவிட்டது. தன்னைச் சட்டை செய்யாமலேயே தன் ஊர் போர் வீரர்கள், கத்தியும் கபடாவுமாக நிற்பதைக் கண்ட இவருக்கு மயக்கமே வந்துவிடும்போல் தோன்றியது. இவருக்கு ஏற்கனவே கத்தி, ரத்தம் என்றாலே ஒரே நடுக்கம். அவருடைய உடல் நடுங்கத் தொடங்கி விட்டது. "டேப் கொஞ்சம் பொறுங்கோடா...அந்த ஊராரைக் கூப்பிட்டு விசாரிப்போம்...பிறகு..." என்று இவர் தட்டுத் தடுமாறிச் சொல்லி முடிப்பதற்குள் "அடே நாட்டாரும் மாச்சு, கீட்டாரு மாச்சு...வாங்கடா போகலாம்; இந்த பயந்தாங் கொள்ளி இப்படித்தான் பேசும்...ஹூம்.. ஹூம்... புறப்படுங்க" என்று வேஷ்டியை இழுத்துக் கட்டினார் மணக்கத்தை என்ற போர்வழி. இவர்களுடைய ஆர்ப்பாட்டத்தைக் கண்ட நாட்டாருக்கு இந்தப் படை எங்கே தன் மீதே திரும்பிவிடப் போகிறதோ என்று பயந்தார். பிறகு துணிச்சலுடன் கூறினார்:

"சரி, புறப்படுங்கடா"

இப்படி சொல்லிவிட்டு இவர் அந்த இடத்திலேயே முழங்காலிட்டு உட்கார்ந்துக் கொண்டார்.

மேல் இலுப்பூர் பட்டாளம் கீழ் இலுப்பூர் மீது பாய்ந்தது. இது கீழ் இலுப்பூர் வாசிகளைத் திடுக்கிடச் செய்துவிட்டது. இவர்களும் ஆக்ரமிப்பாளர்கள் மீது தங்கள் எதிர்ப்பைக் காட்டிக்கொண்டார்கள். கையில் கிடைத்ததெல்லாம் இவர்களுடைய ஆயுதம்தான். தடி, கல், மண், சட்டிபானை, ஒரு சில கத்தி இவைகளெல்லாம் இவர்களுடைய போர்க் கருவிகள். பெண்களெல்லாம் "ஐயோ குய்யோ" என்று அலறி ஒப்பாரி வைத்துவிட்டார்கள்.

முன் எச்சரிக்கை இல்லாமல்—யுத்தப் பிரகடனம் செய்யாமல் இப்படித் திடீரென்று அவர்கள் தாக்கவே, இவர்களும் மூர்க்கத்தனமாக அவர்களைத் தாக்கினார்கள்.

இரு தரத்தாருக்கும் நல்ல அடி. ஒருவருக்கு மண்டையில் காயம். ஒருவருக்கு மூக்கிலே ரத்தம், ஒருவருக்குக் குடுமி

அபேஸ்! ஒருவருக்கு ஒரு பக்கத்து மீசை காணேம். ஒருவருக்கு கையில் வெட்டு. இப்படி ஒருவருக்கொருவர் ரத்தத்தைப் பறிமாறிக் கொண்டார்கள். அதிகமாக அடிபட்டுக் கொண்டவர்கள் வீரப் புலிபோல் பாய்ந்துவந்த மேல் இலுப்பூர் வீரர்கள்தான். இவர்கள் ரத்தம் ஒழுக ஒழுக ஓட்டம் எடுத்தார்கள். இவ்வளவு கலாட்டாவும் ஒரு சில நிமிஷங்களில் நடந்துவிட்டது.

சொல்லிக் கொள்ளாமல் ஓட்டம் எடுக்கும் மேல் இலுப்பூர் வீரப் புலிகளைப் பார்த்து, கீழ் இலுப்பூர் நாட்டார் வெம்புலி நாய்க்கர் உறுமினர்: "டேய் அயோக்கியப் பசங்களா! உங்களைப் பார்க்கிறேண்டா ஒரு கை" என்று முஷ்டியை உயர்த்திச் சபதம் செய்தார்.

இவருடைய கொத்தமல்லி கத்தை மீசைதான் ஒரு பக்கத்தில் காணேம். எதிரிகளில் யாரோ ஒரு போர் வீரன் தான் இவருடைய ஒரு பக்க மீசையைத் தகர்த்தெறிந்துவிட்டு வெற்றிகரமாக பின்னோக்கி ஓடி இருக்கிறன். இந்த அடிதடிச் சண்டை காலையில் நடந்தது. மாலைக்குள் தாலுக்கா போலீஸ் பட்டாளம் இந்த இரண்டு கிராமத்தையும் சூழ்ந்து கொண்டது. இவ்வூர் மூன்சீப் போலீசுக்கு புகார் செய்யுமுன், மேல் இலுப்பூரிலிருந்து ஒருவர் சென்று புகார் செய்து இருக்கிறர். உடனே கீழ் இலுப்பூர் வெம்புலி நாய்க்கரும் புகார் செய்தார்.

புகார் செய்தவர்கள்—சும்மா இருந்தவர்கள், சண்டை போட்டவர்கள் கிழம் குட்டி எல்லோரையும்—இரண்டு கிராமத்தாரையும் லாரிகளில் ஏற்றி ஸ்டேஷனுக்குக்கொண்டுவந்து விட்டனர் போலீசார்.

ஆடு மாடுகள் அடைபட்டிருப்பது போல், போலீஸ் ஸ்டேஷன் கொட்டடியில் எல்லோரும் அன்றிரவு அடைக்கப் பட்டிருந்தார்கள். இந்த இடத்தில் இரண்டு ஊராரும் ஒற்றுமையாகத் தான் இருந்தார்கள். கீழ் இலுப்பூர் நாட்டார், மேல் இலுப்பூர் நாட்டாரை முறைப்பார். உடனே தலையைத் தாழ்த்திக் கொள்வார் மேல் இலுப்பூர் நாட்டார். இப்படியே இரண்டு பக்கத்தினரும் பரஸ்பரம், "உன்னுலே நான் கெட்டேன்: என்னுலே நீ கெட்டாய்" என்று பள்ளிச் சிறுவர்கள் குற்றம் இழைத்தால் உபாத்தியாயரிடம் முட்டி தோப்பளம் போடுவார்களே! அதுபோல இருந்தது இவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்ட பார்வை.

போலீசாரிடம் இவர்கள் என்ன பாடு பட்டார்கள் தெரியுமா? மரியாதை என்பதே போலீஸ் அகராதியில் கிடையாது என்பது இவர்களுக்கு எப்படித் தெரியும்?

அந்தந்த கிராமத்து மக்கள் நாட்டார் என்று மதிப்போடு அழைக்கும் பெரிய மனிதர்களை போலீஸ் அதிகாரி "டேய் சாட்டான்...மூஞ்சியைப் பாரு; குறவன் மாதிரி. நீதான்டா மேல் இலுப்பூர் நாட்டான். அப்போ இந்த சண்டையெல்லாம் உன்னுலேதானே?" என்று அதட்டி போலீஸ் மரியாதையோடு கேட்டார்.

மேல் இலுப்பூர் நாட்டாரான ஸ்ரீமான் சம்பா நாய்க்கர் இவர் நடுநடுங்கிப் போனர். போலீஸ் என்ருலே இவருக்கு ஏற்கனவே பயம். அதிலும் போலீஸ் அதிகாரியே தன்னை மிரட்டும்போது இவருக்கு எப்படி இருக்கும்? "இல்லே சாமி...இந்த பசங்க..." என்று தட்டுத் தடுமாறி பயந்து இரண்டொரு ஓட்டைச் சொற்களை உதிர்த்தார். அதற்குள் போலீஸ் அதிகாரி "சட், டாமெட்! மூடு வாயை" என்று ஆங்கில வார்த்தையைக் கலந்து சட்டுபுட்டு என்று அசட்டவே நாட்டார் ஓவென அழுதே விட்டார்.

ஒரு பக்க மீசைக்கார கீழ் இலுப்பூர் நாட்டார் வெம்புலி நாய்க்கரைப் பார்த்து போலீஸ் அதிகாரி மிரட்டும் தோரணையில் கேட்டார்: "எங்கே உன் ஒரு பக்கத்து மீசை" இந்த கேள்விக்கே வெம்புலிநாய்க்கர் வெலவெடத்துப் போனர். மீசையை தடவிப் பார்த்

துக்கொண்டே "மீசைங்களா... யாரோ மேல் ஊர் ஆசாமி பிச்சிப்பூட்டானுங்க" என்று அழுமாட்டாத குறையாகச் சொன்னார். போலீஸ் அதிகாரிக்கு சிரிப்பு வந்துவிட்டது; சிரிப்பை அடக்கிக்கொண்டு மேலும் கேட்டார்: "நீதான் கீழ் இலுப்பூர் நாட்டாரே... சரி. இந்த சண்டைக்குத் தலைவன் நீதான்". "இல்லீங்க... மேல் ஊரார்தானுங்க கூட்டமாகச் சேர்ந்து வந்து எங்களை அடிச்சாங்க... நாங்க அப்புறம் தாங்க அவுங்களை அடிச்சோம்" என்று தழதழக்கும் குரலில் நடுக்கத்துடன் கூறினார் வெம்புலி நாய்க்கர்.

இப்படி விசாரணை முடிந்த பிறகு, மறுநாள் காலையில் மாஜிஸ்ரேட்டிடம் இந்த இருதரப்பாரையும் ஆஜர்படுத்தினர்கள்.

இவர்கள் வழக்கை விசாரித்த மாஜிஸ்ரேட், சில புத்திகளைச் சொல்லி இரண்டு பக்கத்தாரையும் விடுதலை செய்துவிட்டார் பிறகு. இந்த இரண்டு ஊராரும் சுடுகாட்டுக் களை வடியும் முகத்தை தொங்கவிட்டுக்கொண்டு ஊருக்கு வந்தார்கள்.

அக்கிரமமாக வந்து தாக்கிப மேல் இலுப்பூராருக்கு தண்டனை வாங்கித் தரவேண்டும் என்பது கீழ் இலுப்பூரார் ஆத்திரம் கலந்த ஆசை. மேலும் அவர்களைச் சும்மாவிட்டுவிட்டால் நம்மை மதிக்கமாட்டார்கள் என்ற வைராக்யத்தோடு அவர்கள் மீது வழக்குத் தொடுத்தார்கள். மேல் இலுப்பூராரும் "உங்களுக்குத் திமிர் இவ்வளவு இருந்தால் எங்களுக்கு எவ்வளவு இருக்கிறது என்று காட்டுகிறோம்" என்று சவால் விட்டு எதிர்வழக்கு தொடுத்தார்கள்.

இந்த வழக்கு சுமார் இரண்டு வருஷம் நடந்தது. இதனால் ஏற்பட்ட செலவு கீழ் இலுப்பூராருக்கு பத்தாயிரம் ரூபாய்; மேல் இலுப்பூராருக்கு பதினைந்தாயிரம் ரூபாய். ஆனால் வழக்கின் முடிவு என்ன தெரியுமா?

"வழக்கு பொதுவாகத் தள்ளுபடி செய்யப்பட்டது" நிலங்களை அடகு வைத்துத்தான் இந்த இரண்டு கிராமத்தார்களும் வழக்கு நடத்தினர்கள். அதே நேரத்தில் இவர்களுடைய வக்கீல்கள், ஏற்கனவே அடமானம் வைத்துவிட்டிருந்த நிலங்களை, பங்களாக்களை, மீட்டுக்கொண்டார்கள்.

பக்கத்திலிருக்கும் மற்ற கிராமத்தார்கள் இந்த ஊரில் நிலம் கிடைக்குமா?" என்று ஏங்கி இருந்தவர்களுக்கே இவர்கள் நிலங்களை அடமானம் வைத்து வழக்குக்குச் செய்தார்கள். கீழ் இலுப்பூரார் திடுக்கிடும்படியாக, மேல் இலுப்பூரார் வைராக்கியத்துடன் மற்றொரு யுத்தப் பிரகடனம் செய்தார்கள். அதாவது, இந்த இரண்டு கிராமத்தாரும் சேர்ந்து வெட்டிய கால்வாய் மேல் இலுப்பூராருக்கு சொந்தமான நிலத்தில் வெட்டப்பட்டு இருக்கிறதாம். அதனால் கீழ்பக்கமாக வரும் கால்வாயை தூர்க்கும் திருப்பணியில் இறங்கிவிட்டார்கள். கால்வாயை இப்படி கீழ் பக்கம் தூர்த்தவிடுவதால் கீழ் இலுப்பூர் ஏரிக்கு இனித் தண்ணீர் கிடைக்காது. ஆனால், மேல் இலுப்பூர் ஏரிக்கு தண்ணீர் கிடைக்கும். இந்த தைரியத்தோடு தான், மேல் இலுப்பூரார் "கீழ் இலுப்பூராரை ஒரு கைபார்க்க வேண்டும்; அவர்கள் கொட்டத்தை அடக்க வேண்டும்" என்று வைராக்யம் செய்துக்கொண்டு இப்படிப்பட்ட வேலையெல்லாம் செய்யத் தொடங்கினர்கள்.

கிராமத்தின் ஜீவநாடியான இந்தக் கால்வாய் தூர்க்கும் சம்பவம் கீழ் இலுப்பூராருக்கு இன்னும் ஆத்திரத்தைக் கிளப்பியது. அவர்களை உதைப்பதைவிட சர்க்காரின் துணை நாடுவதுதான் நல்லது என்று கருதி சர்க்காருக்கு இந்த அடாவடிச் செயலை தெரியப்படுத்தினர்கள். இதற்கு சர்க்கார் கொடுத்த பதில் இவர்களை இன்னும் கஷ்டத்தில் ஆழ்த்திவிட்டது. அதாவது "மேல் இலுப்பூராருக்கு சொந்தமான இடத்தில் கால்வாய் வருமேயானல்...? அதில் சர்க்கார் நேரிடையாகத் தலையிட முடியாது. இதற்கு சட்டத்தின் உதவியை நாடுவதுதான் உசிதம்" என்று சர்க்கார் பதில் கொடுத்திருந்தார்கள். ஆகவே கீழ் இலுப்பூரார் சர்க்கார் யோசனைப்படி வழக்கு தொடுத்தார்கள். மேல் இலுப்பூராரும் எதிர் வாதாடினர்கள்.

இந்த வழக்கு தாலுக்கா கோர்ட்டில் மூன்று வருஷங்கள நடந்த பிறகு "சட்டப்படி மேல் இலுப்பூராருக்கு சொந்தமான இடத்தில் கால்வாய் வருவதால், அந்த இடத்தில் கால்வாயை எப்படியும் உபயோகித்துக்கொள்ள அவர்களுக்கு உரிமையுண்டு" என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த தீர்ப்பைக் கேட்ட கீழ் இலுப்பூர் வாசிகள் மனம் சோர்ந்து போனார்கள். நாட்டு வக்கீல் என்ற சில தரகர்களும் வக்கீலும் சேர்ந்து "வழக்கை, ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் பண்ணுங்க... அதில் வெற்றி நிச்சயம்" என்று

தூண்டினர்கள். இவர்களும் "பணம் பெரிதா? வைராக்யம் பெரிதா?" என்று சர்ச்சை செய்து பணம் எவ்வளவு செலவானாலும் சரி. அப்பில் செய்து ஒரு கை பார்க்க வேண்டியது தான் என்று அப்பீலும் செய்தார்கள். இந்த கோர்ட்டில் ஏகப்பட்ட பணச் செலவில் வழக்கு நடந்தது. முடிவாக இந்தக் கோர்ட்டாரும் கீழ் கோர்ட் தீர்ப்பை ஊர்ஜிதம் செய்தார்கள். இது இவர்களுக்கு பெரிய ஏமாற்றத்தை அளித்தாலும், வைராக்யம் மட்டும் குறையவில்லை. முன்னைவிட இப்போ தான் வைராக்யம் உச்சநிலையில்சென்று விட்டது. ஏனெனில் இரண்டு கோர்ட்டுகளிலும் முகத்தில் கரியைப்பூசிக்கொண்டதால் எதிரிகள் இவர்களை நையாண்டி செய்து கேவலமாகப்பேச ஆரம்பித்தார்கள். இதை இவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஆகவே, "கிராமமே அழிந்தாலும் சரி," என்ற வைராக்யத்தோடு ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள். இந்த கோர்ட்டில் வழக்கு சுமார் நான்கு ஆண்டுகள் வரை நடந்தது. பிறகு, தீர்ப்பு, இவர்களுக்கு— கீழ் இலுப்பூராருக்கு சாதகமாகவே முடிந்தது. ஆனல் இவர்களுக்கு சாதகமாக முடிந்த சந்தோஷம் இருந்தாலும்— தங்கள் வைராக்யம் வெற்றி அடைந்துவிட்டது என்ற பெருமிதம் இருந்தாலும், ஒருபுறம் பெரிய வருத்தம் இவர்களுக்கு இல்லாமல் இல்லை.

இந்த மூன்று கோர்ட்டிலும் செலவான பணம் பூராவும், ஏற்கனவே கிரிமினல் வழக்கு செலவுக்காக அடமானம் வைக்கப்பட்டிருந்த நிலங்களையெல்லாம் விற்றுத்தான் செலவு செய்தார்கள். வழக்கு சாதகமாக முடிந்துவிட்டது. பழையபடி கால்வாய் தண்ணீர் ஏரிக்கு வரும். ஆனல், உழுது பயிரிட நிலம் கிடையாது. "வட்டிக்கு கடன் வாங்கி அட்டிகை செய்து, பிறகு அட்டிகையை விற்று வட்டியை கொடுத்த" கதையாக முடிந்துவிட்டது இவர்கள் கதையும். நிலம் போனலும்; பரவாயில்லை. கிராமமே போனலும் பரவாயில்லை— எங்கேயாவது கூலி வேலை செய்து பிழைத்து விடலாம்; தங்களுடைய, லட்சியம்— வைராக்யம் நிறைவேறி விட்டதே அதுவே இவர்களுக்கு பரம திருப்தியாகப் போய்விட்டது. இப்போது இவர்கள் மேல் இலுப்பூராருக்கு சவால் விடுத்தார்கள். "நம்பகிட்டே உங்க பத்திரம் செல்லாதப்பா... வாலை சுற்றி வைத்துக் கொள்ளுங்கள். இனி வாலை நீட்டினல் அவ்வளவுதான்... ஆமாம்..." என்று கேலியாகவும் கண்டிப்பாகவும் கூறினர்கள்.

இது மேல் இலுப்பூராரின் வைராக்யம் சுப்ரீம் கோர்ட்டுக்குள்ளேயும் சென்றுவிட்டது. இவர்கள் "விட்டேனு பார்" என்று கீழ்க்கோர்ட் ஆதாரங்களைவைத்துக்கொண்டு ஹைக்கோர்ட் தீர்ப்பை ஆக்ஷேபித்து சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள்.

இந்த அப்பீல் இரண்டு வருஷங்கள் நடந்தபிறகு ஐக்கோர்ட் தீர்ப்பை ரத்து செய்து இவர்களுக்கு— மேல் இலுப்பூராருக்கு சாதகமாக தீர்ப்பளித்தார்கள் சுப்ரீம் கோர்ட்டார். ஆனல், சாதகமான தீர்ப்பு கிடைத்ததே தவிர, இவர்களுக்கும் உழுது பயிரிட நிலம் கிடையாது. இவர்களும் நிலங்களையெல்லாம் விற்றுத்தான் சுப்ரீம் கோர்ட் வரை வழக்காடினர்கள். "வைராக்யத்தை நிலைநாட்டி விட்டோம்" என்ற திருப்தி தான் இவர்களுடைய ஆஸ்தி. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வெளியாகும் இரண்டொரு தினங்களுக்கு முந்தியே கீழ் இலுப்பூரார் தங்கள் கிராமத்தைவிட்டு, பிழைப்புத் தேடி நகரங்களுக்குச் சென்றுவிட்டார்கள். வைராக்யத்தை காட்டிக்கொள்ள ஒரு எதிரி இல்லாததால் அப்போதே மற்றொரு எதிரியின் வைராக்யம் செத்துவிட்டது.

பிழைப்பைத்தேடி மேல் இலுப்பூராரும் கீழ இலுப்பூராரைப் பின்பற்றி நகரங்களுக்குச் செல்ல புறப்பட்டார்கள். இவர்கள் இரண்டு தரத்தாரும் தங்கள் தங்கள் கிராமங்களை விட்டு வெளியேறிய காட்சி கல் மனதையும் உருக்கச் செய்துவிடும்; அவ்வளவு பரிதாபகரமான காட்சி. சிறு குழந்தை போல் வளைந்து வளைந்து ஓடிவரும் அந்தக் கால்வாயை இந்த இரண்டு கிராமத்தார்களும், காதலியை விட்டு காதலன் பிரியும் போது பார்க்கும் பார்வை என்று கவிஞர்கள் வர்ணிக்கிருர்களே, அதுபோலத்தான் ஒரு முறை பார்த்துவிட்டு கிராமத்தைவிட்டு வெளியேறினர்கள்.

வைராக்யத்தின்— சட்டத்தின் முன் இடிந்து தகர்ந்த இரண்டு கிராமங்களின் பரிதாபகரமான வாழ்க்கையைக் கண்டு கண்ணீர் உகுப்பதுபோல் அந்தக் கால்வாயில் உள்ள சிறிய ஓடையில் தண்ணீர் சலசலவென்ற ஓசை இல்லாமல் அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. ★

தொட்டிகளில் காய்கறிச் சாகுபடி

எஸ். சுந்தரம்

வீட்டுக் கொல்லைகளிலும் சுற்றிலுமுள்ள காலி இடங்களிலும் காய் கறி சாகுபடி செய்தல் நடை முறையில் இருந்து வருகிறது. வீட்டின் பின்புறமோ அல்லது அண்மையிலோ தோட்டம் அமைக்க இடவசதி இல்லாதவர்கள் குறிப்பாக பட்டணவாசிகள் சொந்தக் காய்கறி சாகுபடி செய்ய இயலவில்லையென வருந்த வேண்டியதில்லை. ஏனெனில், தொட்டிகளில் பூஞ்செடிகளையும் குரோட்டன்ஸ் செடிகளையும் வளர்ப்பது போலஅவைகளுக்கு பதிலாக காய்கறிச் சாகுபடி செய்யலாம். நிலத்தில் காய்கறி பயிர் செய்வதைவிட தொட்டிகளில் காய்கறி பயிர் செய்தல் கஷ்டமாகத் தோன்றலாம். ஆனால் தொட்டிகளில் பயிராகும் காய்கறிகளால்நாம் அடையக் கூடிய நன்மைகள் பலவாகும்.

ஜன்னல்களில் தொட்டிகள்

தொட்டி யென்றால் மண்தொட்டியை மாத்திரம் குறிப்பிடுவதல்ல; பழைய வாளி, ஜாதிக்காய்ப் பெட்டி முதலியவைகளையும் தொட்டிக்கு பதிலாகப் பயன்படுத்தலாம். ஜன்னல்களில் தொட்டிகள் வைத்து அவைகளில் காய்கறி பயிரிடுதல் நிலத்தில் பயிரிடுதலைவிட மலிவானதாக இருத்தல் வேண்டும். ஆகையால் ஆழமான தொட்டிகளையே ஜன்னல்களில் வைக்க வேண்டும். ஜன்னல் தொட்டிகளில் போடப்படும் மண், எரு, நிலத்தில் வைத்து காய்கறி சாகுபடி செய்யப்படும் தொட்டிகளில் போடுவதைவிட அதிகப்படியாக இருக்க வேண்டும். இவ்வாறு அதிகமண், எரு முதலியன வைத்தால் மட்டுமே பயிர்களுக்கு எற்படும் பாதகங்களைத் தவிர்த்தல இயலும். ஆகவே, ஜன்னல்களிலும் பலகணிகளிலும் வைக்கப்படும் தொட்டிகள் குறைந்தபட்சம் ஒரு அடி ஆழமும், சற்று அகலமும் கொண்டிருப்பதுடன், ஜன்னல்க் கதவுகளை எளிதில் மூடும்படி, ஜன்னல் தளத்தில் செம்மையாக வைக்கத் தகுந்தபடி இருத்தல் வேண்டும். தொட்டிகளைத் தேர்ந்தெடுக்கும் போது அவைகளின் அடித்தளத்தின் நடுப்பகுதி சற்று மேடாக இருக்கிறதாவென்று பார்க்க வேண்டும். வாளி, பெட்டி முதலியவைகளைத் தொட்டிகளுக்குப்பதிலாக உபயோகப்படுத்தினால் அடியில் தண்ணீர்ப் போக்குக்குத் துளைகள் செய்ய வேண்டும். துளைகள் இருந்தால் தான் தொட்டிக்குள் காற்றுப்புக முடியும்.

மண், எரு, நிரப்புதல்

வளமுள்ள தோட்ட மண்ணையாவது அழுகிய இலைகளால் தயாரிக்கப்பட்ட ‘‘சம்போஸ்ட்’’ உரத்தையாவது தொட்டியில் நிரப்ப வேண்டும். முதலில் ஒரு அங்குல கனத்திற்கு ஓட்டுச் சல்லிகளை

‘கெட்டும் பட்டணம்சேர்’ என்றபழமொழிக் கேற்ப நாள்தோறும் மக்கள் பட்டணத்தைப்படையெடுத்து வருகின்றனர். கொல்லைப் புறத்தில் காய்கறிகள் பயிர் செய்ய வாய்ப்பு பட்டண வீடுகளில் கிட்டுவதில்லை. பட்டண வாழ்க்கையிலும் காய்கறித் தோட்டங்களுக்கு இடமுண்டு என்கிறார் இக்கட்டுரையாளர், அனுபவசாத்தியமான யோசனைகளைக் கூறுகிறார். காரியாம்சத்தில் காட்டுவது உங்கள் பொறுப்பு.

தொட்டியின் அடியில் போட்டு பிறகு மண் நிரப்புதல் வேண்டும். பின்பு, மாட்டுச்சாணம் அல்லது ஆட்டுச்சாணத்தை அரை அங்குல கண்களுள்ள சல்லடையில் சலித்தபிறகு தொட்டியில் போட்டு நிரப்ப வேண்டும். மண்ணையும் மாட்டு எருவையும் சேர்த்துச் சலித்து ஓட்டுச் சல்லிகளின் மேல் போட்டு, தொட்டியின் விழும்புக்குக் கீழ் ஒரு அங்குலம் வரை நிரப்புதல் வேண்டும்.

விதைப்பு

பலவகையான காய்கறிச் செடிகளை தொட்டியில் பயிர் செய்யலாம். சிறு விதைப் பயிர்களை முதலில் தட்டுகளில் தெளித்து, முளை கண்ட பின் நாற்றுகளைப் பிடுங்கி தொட்டியில் நடவு செய்தல் வேண்டும். செடிக்குச் செடி தக்க இடைவெளி விட்டு நடவேண்டும். பெரு விதைப் பயிர்களுக்கு இந்த முன்னேற்பாடு தேவையில்லை; வித்துக்களை நேரடியாகவே, தக்க இடைவெளி விட்டு ஊன்றி விடலாம். செடிவகைகளையும் அவைகளின் வளர்ச்சியையும் பொருத்து செடிக்குச் செடி இடைவெளி இருத்தல் வேண்டும்.

கத்தரி, வெண்டை முதலிய விதைகளுக்கிடையே ஒரு அடி தூரம் இருக்கலாம். தக்காளி நாற்றுகளை 9 அங்குல இடைவெளி விட்டு நடவேண்டும். செடிகளுள்ள தொட்டியில் வெளிச்சம் நன்றாய்ப் படும்படி தொட்டியை வைக்க வேண்டும். கூடுமானால் தினந்தோறும் நான்கு மணி நேரமாவது சூரிய வெளிச்சம் செடிகளின் மீது படுமாறு தொட்டியை வைக்க வேண்டும். சூரிய வெளிச்சம் படாவிடில், செடிகளின் வளர்ச்சி தடைப்படும்.

பின் பராமரிப்பு

தொட்டியிலுள்ள மண் ஒருபோதும் வரண்டு விடாமலிருக்குமாறு, மிகக் கவனத்துடன் தொட்டிக்குத் தண்ணீர் விட வேண்டும். ஆனால் தொட்டி எப்போதும் தண்ணீரில் ஊறிக் கொண்டு இருக்கலாகாது.

செடிகள் தொட்டியில் இருக்கும்வரை அவைகளுக்குப் போதுமான உணவு தொட்டியிலுள்ள மண்ணிலிருந்து கிடைக்கும். என்றாலும், செடிகளின் வளர்ச்சி தடைப்படுவதாகத் தெரிந்தால் எருவை நீர் வடிவத்தில் ஊற்றுதல் முறையாகும். விவசாய இலாகா அலுவலகங்களிலாவது அல்லது கூட்டுறவுசங்கங்களிலாவது கிடைக்கும் அமோனியம் சல்பேட்டை சிறிது வாங்கி தண்ணீரில் தாராளமாகக் கரைத்து ஊற்ற, செடிகளின் வளர்ச்சி அதிகமாகும். தொட்டியிலுள்ள 'கம்போஸ்ட்' எருவிலிருந்தாவது மண்ணிலிருந்தாவது களைகள் முளைக்கலாம். அவைகளை அவ்வப்போது களைந்து எறிந்துவிட வேண்டும். தொட்டியின் மேல் பகுதியிலுள்ள மண்ணை அடிக்கடி கொத்திவிட வேண்டும். இவ்வாறு கொத்திவிட்டால் கட்டி முட்டிகள் உடைந்து போகும்; தவிர, தண்ணீரும் நன்றாய் இறங்கி, கழிவுநீர் சரிவர வெளிப்படும்.

நோய் பூச்சிகள்

வீடுகளில் உள்ள நிலைமையில் தொட்டியில் பயிர் செய்தால், காய்கறிச் செடிகளில் பூச்சி விழுதலும் நோய் தாக்குதலும் ஏற்படுவதுண்டு. இவைகளைத் தடை செய்ய, சிறிது மயில்துத்தக் கலவையையோ (போர்டோமிக்ஸர்) அல்லது தண்ணீரில் கரைக்கப்பட்ட பொடாஸியம் பெர்மாங்கனேட்டையோ பீச்சாங்குழல் மூலம் செடிகளுக்குத் தெளித்தல் வேண்டும். நோய் பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லையானால் விவசாய இலாகா உறுப்பினர் யோசனையைக் கேட்டுத்தக்க மருந்தைத் தெளிக்க வேண்டும்.

பயிர் அறுவடையான பின்பு தொட்டிகளிலுள்ள மண்ணைக் கொட்டிவிட்டு, உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் நன்றாகத் தேய்த்துக் கழுவி, நோய்த் தடை செய்ய தக்க மருந்தை தண்ணீரில் விட்டுக் கழுவவேண்டும். இவ்வாறு கழுவிய பிறகே தொட்டியை மறுமுறை காய்கறி பயிர் செய்யப் பயன்படுத்த வேண்டும். கொட்டப்பட்ட மண்ணை மீண்டும் பயன்படுத்தலாகாது.

ஒரு வீட்டிற்குள் அல்லது அறைக்குள் இருக்கும் காற்றைவிட, வெளியிலுள்ள காற்று வரட்சியாக இருக்கும். மேலும், நாள்தோறும் தொட்டிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவதால், அறையில் தட்பம் மேலும் அதிகமாயிருக்கும். தவிர செடிகளிலிருந்து குளிர்ந்த வாயு வெளிப்படும். இந்நிலையில், காளான் நோய்கள் வெகு எளிதில் செடிகளில் பரவக்கூடும். சில செடிகள் மட்டுமே வைத்துப் பயிரிடுவோர்களுக்கு நோயால் ஏற்படும் நஷ்டம் மிகுதியானது. ஆகையால், மேற்கூறிய ஒழிப்பு முறைகளைக் கையாளவேண்டியது இன்றியமையாதது.

செய்ய வேண்டாதவை:

தொட்டிகளில் பயிர் செய்யப்படும் காய்கறிகள் நல்ல பலனளிப்பதில்லை யென சிலர் புகார் செய்வதுண்டு. அதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆகவே, ஜன்னல், பலகணிகளில் தொட்டிகள் வைத்து சாகுபடி செய்வோர்கள் சில முன்னெச்சரிக்கைகளைக் கையாள வேண்டும்.

விதைகளை நெருக்கமாக விதைத்தலாகாது—தொட்டியில் குறைவான மண் தான் இருப்பதால் அதிக விதைகளுக்கு வேண்டிய உணவு கிடைக்காது. அன்றியும் நெருக்கத்தில் வளரும் செடிகள் நன்கு வளர முடியாது; பலனளிக்கவும் முடியாது. ஆகவே, செடிகள் வளர்ச்சியின் வேகத்தை எண்ணிப் பார்த்து அவைகளின் இயற்கைத் தன்மையையும் கவனித்தல் வேண்டும்.

நாற்றுக்களை நீளமாக வளரவிடலாகாது—வீடுகள் மேலே வேயப்பட்டிருப்பதால், வீடுகளில் முளைக்கும் நாற்றுக்கள், இயற்கையாக சூரியனையும் வெளிச்சத்தையும் நாடி, நீளமாகவும் மெல்லியதாகவும் வளரும். இந்நிலையைத் தவிர்க்க, செடிகளை சூரிய வெளிச்சம் அதிகமாகப்படும் இடத்தில் வெகு நேரம் வைத்திருக்க வேண்டும்.

காலங்கடந்து நாற்று நடலாகாது—தொட்டிச் செடிகளை அளவு கடந்து வளரவிடலாகாது. சிறு விதைகள் விதைத்து தட்டுகளில் வளர்த்த நாற்றுக்களை சாலா காலத்தில் நடவேண்டும். இல்லாவிடில், செடிகள் அளவிலும் பருமனிலும் நாம் எதிர்பார்க்கும் முறையில் வளரா.

வேர்கள் சேதப்படலாகாது—நாற்றுப் பிடுங்கி நடும்போதும், களைக்கொத்தும் போதும் வேர்கள் பழுதடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வேர்கள் சேதப்பட்டால் செடிகள் நாசமடையும்; தொட்டியில் பயிராகும் செடிகள் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு வளரும். ஒரு செடியை அதன் இச்சையாக வளரவிடா விட்டால், புது வேர்களைவிட அதனால் முடியாது. ●

★ ★ ★

ஐயங்கார் ஒருவர் அச்சகத்திலிருந்து வெளியே வந்தார். வாசல் திண்ணையில் வ. ராவும் நானும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். ஐயங்காரின் கையில் ஏராளமான பஞ்சாங்கங்கள். அவர் ஒரு ஜோதிட சாஸ்திரி. பஞ்சாங்கம் கணிப்பவர். தம்முடைய பஞ்சாங்கம் அச்சானதும், சில பிரதிகளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார். அவரோடு வந்த மற்றொருவர் வ. ராவை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். உடனே ஐயங்கார் ஒரு பஞ்சாங்கத்தை எடுத்து வ. ரா வுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்.

"ஓய்! வாங்கிக்க மாட்டேன். பெரியவாளுக்கு இந்த மாதிரி கொடுக்கப்படாது. சாஷ்டாங்கமாகக் காலில் விழுந்து நமஸ்காரம் பண்ணிப்பிட்டுச் கொடுக்கணும்" என்றார் வ. ரா.

ஐயங்கார் தயங்கினார்.

"ஏன் ஓய், என்னைக் காலில் விழுந்து கும்பிடப்படாதோ?" என்றார் வ. ரா.

ஐயங்கார் சாஷ்டாங்கமாய் விழாவிட்டாலும், தலையைச் சற்று அதிகமாகக் குனிந்து வணங்கிவிட்டு, பஞ்சாங்கத்தைக் கொடுத்தார். "பரவாயில்லை" என்றுசொல்லி வாங்கிக் கொண்ட வ. ரா.,

"ஓய், உடம்பில் அது என்னதுங்காணும்? என்று கேட்டார்.

"எது?"

"குறுக்கே ஓர் நூல் போட்டிருக்கிறீரே ..."

"யக்ஞோபவீதம்"

"அதை எதுக்காகப் போட்டிருக்கிறீர்?"

ஐயங்கார் ஒரு பதிலும் சொல்லுவதற்கின்றி நின்றார். வ. ரா. மறு நிமிஷத்தில், "கழட்டி தூரப் போடும் ஓய். அது போட்டால் தான் பிராமணன் என்று தெரியுமோ? சீசீ. இது வேண்டாம்" என்று அருவருப் போடும், படபடப்போடும் சொன்னார்.

"ஏதோ பெரியவாளின் ஆசாரத்தை அனுசரித்து..."

"அப்படியானால் நான் பெரியவனில்லையோ? ஏன் ஓய்?" என்று வெடுக்கென்று கேட்டார். வ. ரா.

ஐயங்கார் பாடு எக்கச் சக்கமாகிவிட்டது. கடைசியில் ஒருவாறு சமாளித்துக் கொண்டு தப்பிவிட்டார்.

—கு. அழகிரிசாமி

பரி பாடலில் நகைச் சுவை

எஸ். வையாபுரி பிள்ளை

நாம் அனைவரும் நாடகங்களுக்குச் சென்று பார்த்திருக்கிறோம். அவற்றில் 'ராஜ பார்ட்', 'ஸ்திரீ பார்ட்' முதலிய எத்தனையோ பாத்திரங்கள் வருகின்றன. அவையெல்லாவற்றையும் மறந்து விடுவோம். நாடகத்தில் அமைந்த கதைகளும்கூட மனத்தில் தங்குவதில்லை. ஆனால், நாடகத்திற்கு உயிரளித்து அதைக் காணவரும் மக்களையெல்லாம் களிப்புக் கடலில் மூழ்கச் செய்கிற ஒரு பாத்திரதை நாம் எளிதில் மறப்பதில்லை. அப்பாத்திரம் யாது என்றால், 'விதூஷகன் பார்ட்' என்பதுதான்.

விதூஷகன் நடிப்பு மேடையில் தோன்றியதும், நாடகக் கொட்டகை ஒரே ஆரவாரிப்பும் குதூகலமுமாயிருக்கும். அவனது உருவத்தைப் பார்த்தவுடனே அவன் இன்னான் என்பது தெரிந்துவிடும். 'அஷ்டவக்ரம்' என்று சொல்வார்கள், உருவத்தில் அத்தனை கோணல்கள். உருவத்திற்கேற்ற உடை. ஒவ்வொரு கைப்பக்கமும் ஒவ்வொரு நிறம். எத்தனையோ பல நிற ஒட்டுக்கள். ஒரு சில விதூஷகர்களுக்கு எட்டு மாதத்துச் சூலிகள்போல வயிறு புடைத்துத் தள்ளியிருக்கும். தலையில் அவர்கள் அணிந்திருக்கும் 'குல்லா' ஒரு தனி ரகத்தைச் சார்ந்தது. இவர்களுடைய் பார்ட்டுக்கு ஏற்றபடியே அதுவும் இருக்கும்; சுமார் ஓரடியுயரத்தில் எட்டுப் பட்டங்களோடு, அடிப்பக்கம் விரிந்து மேற்பக்கம் கூம்பி அமைந்தது இக்குல்லா. இதிலும் பல நிறங்களும் காணப்படும். விதூஷகனது நடையும், பாவனையும் அவனது உருவத்தோடு ஒத்தவைதான். காலொரு பக்கம் கையொரு பக்கமாகவும், சில காலங்களில் நொண்டியாகவும், சில காலங்களில் நேராகவும், சில காலங்களில் பிறரைப் பரிகாசஞ் செய்யும் முறையாகவும் இவை தோற்றம் அளிக்கும். இவனுடைய பேச்சோ கேட்க வேண்டியதில்லை. மக்களை விலாவெடிக்கச் சிரிக்குமாறு செய்து, அவர்களை எப்போதும் ஆனந்தக் கடலில் அவன் சொற்கள் அமிழ்த்திவிடும். இக்காலத்தில் உண்மையான விதூஷகனை நாடக மேடையில் காண முடிவதில்லை. அவனையும் நாகரிகப்பேய் பிடித்துக் கொண்டது. 'பாருங்கள் களிகூருங்கள்' என்ற விளம்பரத்தில் களிகூரும் அம்சத்தில் ஒரு பெரும்பகுதி மறைந்துவிட்டது.

> "பரிபாடலில் ஒரு சில இடங்களில் அமைந்துள்ள நகைச்சுவையை உணர்தல் அருமை. அதன் சுவையை ஊன்றி உணர்வது நமது நகைச் சுவையை மிகுதிப்படுத்தும், நமது வாழ்க்கை இன்பத்தைப் பெருகச்செய்யும்"

இவ்வாறு உருவம், நடை, உடை, பாவனை, பேச்சு முதலியவற்றில் விநோதமாயமைந்த இந்த விதூஷகனைப்போன்றதே 'பரிபாடல்' என்னும் செய்யுள் வகை. பரிபாடல் இன்னதென்று தற்காலத்தில் அறிந்து கொள்ளுதல் மிக அருமை- அது ஒரு நூற்பெயர் என்றுதான் பொதுப்பட அறிவார்கள். ஒரு செய்யுள் என்று பலரும் அறியமாட்டார்கள். தமிழில் வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்ற நால்வகைப் பாக்களே உண்டு. இந்நால்வகைப் பாக்களாலும் இயன்று பல அடிகளையும் பெற்று வருவது பரிபாடல். பல நிறத்தில், பல அளவில் அமைந்திருக்கும் விதூஷகனுடை போல, இப்பரிபாடலில், பெரும்பாலும் எல்லா வகையான செய்யுள் வகைகளும் காணலாம். தொல்காப்பிய உரைகாரரான பேராசிரியர் 'பரிபாடல்' என்பது பரிந்து வருவது; அஃதாவது கலியுறுப்புப் போலாது பல அடியும் ஏற்றுவருவது' என்று இச் செய்யுள் வகையை விளக்கினர். இங்கே பரிதல் என்பதற்குக் 'குறிப்பிட்ட ஒரு நிலையின்றி நிகழ்தல்' என்று பொருள்படும். இதனால் இச்செய்யுள்வகை கலிப்பாவின்பின் வளர்ச்சி என்பது விளங்கும். இந்தப் பரபரப்பும் நகைப்பூட்டுவதற்கு ஏற்றதே. பல நிறங்களும் கொண்ட உடைபோல, இச் செய்யுளிலும் பலவகை ஓசைகளும் புலப்படுகின்றன. இவ்வோசைகளும் நகைச் சுவையை விளைக்கின்றன. விதூஷகன் சங்கீதம் பயிலத் தொடங்கினால் எவ்வளவு விநோதமாயிருக்கும்! எவ்வளவு நகைத்து மகிழ்வதற்கு இடமாயிருக்கும்! பரிபாடலின் கலவையழகோடு அதற்குப் பண்ணும் கலந்துவிட்டால், அதன் கலவையழகு மிக மிக மேம்பட்டு நகைச் சுவையின் பேரெல்லையைத் தொட்டுவிடுமல்லவா? இதனை உணர்ந்தவர்கள் போல, இசையாளர்கள் இதற்கு இசையும் ஊட்டியிருக்கிறார்கள். பரிபாடல் நூலில் ஒவ்வொரு செய்யுளின் இறுதியி

னும் அதற்கு இசைவகுத்தவர் இன்னர் என்பது குறிக்கப்பட்டுள்ளது.

ஓடியா வுள்ளமொடு உருத்தொருங் குடனியைந்து
இடியெதிர் கழறுங் காலுறழ் பெழுந்தவர்
கொடியறு பிறபு செவிசெவிடு படுபு
முடிகளதிரப் படிநிலே தளர
நனிமுரல் வளே முடியழி பிழிவு
தலேயிறுபு தாரொடு புரள
நிலேதொலேபு வேர்நூர் மடல் (II, 36)

முதலிய அடிகளைப் பண்ணேடு பாடி விட்டால் எத்தனை நகைப்பாக இருக்கும்! அறுபு, இறுபு, படுபு என்பன போன்ற புகரவீறறு வினையெச்சங்கள் இப்பரிபாடலுக்கு ஒரு தனி நகைச்சுவையைத்தான் கொடுக்கின்றன!

இவ்வகைச் செய்யுட்கள் அடங்கிய ஒரு நூலைத்தான் தற்காலத்தில் பரிபாடல் எனக் கூறுகிறோம். பரிபாடல் சுமார் கி. பி. 8-நூற்றுண்டில் தோன்றி, சங்ககாலத்து நூலென்று பிற்காலத்தவரால் கருதப்பட்ட ஒரு நூல். இதில் எழுபது செய்யுட்கள் இருந்தன.

திருமாற் கிருநான்கு; செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டு; காடுகாட் கொன்று—மருவினிய
வையை யிருபத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடற் றிறம்.

என்ற ஒரு பழைய வெண்பாவினல் இன்னின்ன பொருள் பற்றி இந்நூற் செய்யுட்கள் அமைந்தன என்பது புலப்படும். திருமால் பற்றி 8-ம், முருகக் கடவுள் பற்றி 31-ம், காடுகிழாள் என்ற கொற்றவை பற்றி 1-ம், வையைக் குறித்து 26-ம், மதுரை பற்றி 4-ம் ஆக எழுபது செய்யுட்கள். இவற்றுள் தற்போது நமக்குக் கிடைத்துள்ளவை முதலிலிருந்து தொடர்ச்சியாகவுள்ள 22 பாடல்களும், உரைகளில் அகப்பட்ட 2 முழுப் பாடல்களும், ஒரு சில உறுப்புக்களுமேயாம். நூல் முழுதும் நமக்குக் கிடைக்கவில்லை.

விதூஷகன் எந்தப் பொருளைப் பற்றிப் பேசினலும் அவனது பேச்சுக்களில் நகைப்பு வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும். அதைக் கேட்பவர்களுக்கு எப்பொழுதும் மகிழ்ச்சி மேன்மேலும் விளைந்து கொண்டே இருக்கும். இவ்வாறே பரிபாடலுக்கு உரியவையாகக் கருதப்பட்ட பொருள்களை, அப்பாடல்கள் விவரிக்கும் இடங்களிலும் நகைப்பும் மகிழ்ச்சியும் மேன்மேலும் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. அப் பொருள்களைப் பற்றி,

மலேயே யாறே ஊரென் றிவற்றின்
நிலேபெறு மரபின் நீங்கா தாகும்

என அகத்தியனர் கூறியுள்ளாராம். இவைகளை வர்ணிக்கும் நெறியில் விதூஷகனது தொழிலில் ஒரு முக்கியமான அம்சத்தைப் பரிபாடலும் மேற்கொண்டுள்ளது. நாடகத்தில் வரும் கதாநாயகனது காதல் விஷயங்களில், விதூஷகன் அந்தரங்க காரியதரிசியாய் நின்று அவனுக்குத் துணைபுரிகிறுன். இவ்வாறு துணைபுரியுமிடத்திலும் அவன் பார்ப்போருக்கு நகைப்பு ஊட்டுகிறுன். பரிபாடலும் காதல் விஷயங்கள் பற்றியதுதான். 'காமங் கண்ணிய நிலைமைத் தாகும்' என்பது அதன் இலக்கணம். அவற்றில் வரும் அந்தரங்க நிகழ்ச்சிகளை எல்லைமீறுது நின்று கூறி அதனைக் கற்போருக்கு நகைப்பு ஊட்டுகிறது. இச்செய்யுள் வகை காம மொழிந்த பிற பொருள் பற்றி வரும என்றேனும், இசைப்பாட்டு என்றேனும் தொல்காப்பியர் கூறவில்லை.

இப்பரிபாடற் செய்யுட்கள் காமம் பற்றி வரும் என்பதனல், இதிலே சிருங்காரம் எனப்படும் உவகைச் சுவையை எதிர்பார்க்கலாம். ஒரு சில செய்யுட்கள் தெய்வங்கள் பற்றி வருதலால், பக்திச் சுவையும் உளதாகலாம். ஆனல், நகைச் சுவையை இச்செய்யுட்களில் நாம் எதிர்பார்க்கமாட்டோம். எனினும், சிருங்காரச் சுவையுள்ள இடங்களில், நகைச் சுவையும் அடிப்படையில் அமைந்திருக்க இயைபு உண்டு. இரண்டு சுவைகளும் கலந்து வரும் காட்சிகள் நமக்குப் பெருங் களிப்பை விளைக்கும் அல்லவா?

ஆனல், இக்கலவைக் காட்சிகளை அனுபவிப்பது அவற்றை நேரில் நின்று பார்ப்பவர்களுக்கு மட்டுமே எளிதில் முடியும். காலத்தாலும் இடத்தாலும் தூரத்தேயுள்ள நமக்கு அவற்றைக் கண்டுகொள்ள 'பாவனை' என்ற தூரதர்சினியின் உதவி வேண்டியதிருக்கிறது. இக் கருவியால், காட்சிகள் பலவும் நமது கண்முகப்பில் மிக அணுகி நிகழ்பவைபோலத் தோன்றி விடும். அவற்றிற்கு முன்னும் பின்னும் நிகழ்ந்தவற்றை எளிதில் ஊகித்துக் கொள்ளலாம். அவற்றின் சூழ்நிலைகளை எளிதிற் கண்டு கொள்ளலாம்; குறிப்பு மாத்திரமாயுள்ள விஷயங்கள் மிகமிகத் தெளிவாய்ப் புலப்பட்டுவிடும். காட்சிகளின் ஸம்பூர்ணமான தோற்றத்தைக் கண்டதும், நமது மனம் களிப்பினல் பொங்கியெழும். சில காட்சிகளால், நமது முகம் புன்னகை தவழ்ந்து நெகிழ்ந்து நிற்கும்.

வேறு சில காட்சிகளால் முகமானது கதுப்பு நெகிழ்ந்து தாழ்ந்து, இதழ் மலர்ந்து, பற்கள் தோன்ற ஒளிவிட்டு இலகும். இன்னும் சில காட்சிகளால் விலா வெடிக்குமாறு ஆரவாரித்துக் குலுங்கக் குலுங்கச் சிரித்துவிடுவோம்.

இனி, நகைப்பு நிரம்பிய காட்சிகள் ஒருசிலவற்றை நோக்குவோம்.

வையை நதியைப் பற்றி நாம் அறிவோம். தற்காலத்தில் அதன் மணற் பரப்பிலே அங்கங்கே நீரோடைகள் செல்வதைப் பார்க்கிறோம்; அதன் பரப்பு முழுவதும் நீர்நிரம்பி நாம் பார்ப்பது மிகமிக அரிதாகும். முன்காலத்தில் அப்படியல்ல. எப்பொழுதும் நீர்நிரம்பி இந்நதி பாய்ந்து சென்றது. 'வையையென்னும் பொய்யாக் குலக்கொடி' என்று சிலப்பதிகாரம் கூறியுள்ளது. இந்நதி உற்பத்தியாகும் மலையில் மழை பெய்துவிட்டால், கேட்கவும் வேண்டுமா? நதி இரு கரையும் புரண்டு பெருகிவரும். வெள்ளப் பெருக்கானது, பலவகை மலரின் மணம், மரக்கொம்பிலிருந்து உதிர்ந்த கள்களின் இனிய மணம், காய்ந்து கிடந்த பூமியிலே புது மழையால் உண்டாம் நறிய மணம் முதலியன கமழ பேராரவாரத்துடன் விரைந்து பாய்ந்து வரும். நதிப் போக்கில் இரண்டு கரையிலுமுள்ள ஊர்களில், வெள்ளம் வருவதைத் தெரிவித்துப் பறையொலி கேட்கும். இவ்வொலியோடு, சல தாரைகளில் நீர் களகள வென்று ஒலித்தோடுகின்ற அரவமும் மக்களை உறக்கத்தினின்று எழுப்பிவிடும். அதிவிடியற்காலை. ஆண், பெண், என்ற இரு பாலரும் வெள்ளப் பெருக்கைப் பார்ப்பதற்கும், அதில் நீராடிக் களிப்பதற்கும் ஒருவரினொருவர் முந்தி விரைந்து செல்கிற ஒரு காட்சி.

குதிரை வண்டியென்று எண்ணி, உறக்க மயக்கத்தால் குதிரைகளை மாட்டு வண்டியில் பூட்டினர் சிலர். வேறு சிலர் மாட்டு வண்டியென்று எண்ணி, மாடுகளைக் குதிரை வண்டியில் பூட்டினர். குதிரைக்குரிய சேணம் முதலியவற்றை யானைகளுக்கு அமைத்தனர். யானைகளை அலங்கரிக்க எண்ணியவர்கள், அதற்கு நேரமில்லாததாலும் தாம் முந்திச் செல்ல வேண்டும் என்ற நினைப்பினாலும், அவற்றை யாதோர் அலங்காரமுமின்றியும் தாம் உட்கார்வதற்கு ஏற்ற மெத்தையின்றியும் ஊர்ந்து செல்லலாயினர். பெண்களுக்குரிய மாலை வகைகளை ஆடவர் அணிந்தனர்; இங்ஙனமே ஆடவர்க்குரிய மாலை வகைகளைப் பெண்கள் அணிந்தனர். இவ்வாறாக, ஒருவர்க்கு முன்னால் ஒருவர் போக வேண்டுமென்று விரும்பிப் போட்டியிட்டுக் கலந்தடித்துக் கொண்டு விரைந்துச் சென்றனர் (பக். 147, வரி 15—26.)

ஒன்றோடொன்றொவ்வா இச்செயல்களும், இருபாலாரது மயக்கவுணர்ச்சிகளும், விரைந்து செல்வதால் நேரிடும் தடுமாற்றமும் நாம் எண்ணி நோக்கிய அளவில் நமக்கு நகைப்பு உண்டாகிறது.

வையைக் கரையில் வேறோரிடத்துக்குப் போவோம். இங்கே ஆண்களும் பெண்களும் நீராடிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

திடீரென்று ஒரு சப்தம் கேட்டது. ஒருவன் வாழைத்தண்டினால் அமைத்த மிதப்புக் கருவியைப் பற்றிக் கொண்டு, சிறிது ஆழத்திற்போய், நீந்தி நீராடினான்! அப்பொழுது அவன் காதலி, தனது தாய் தோழிகளுடன், நீராடுவதற்காகச் சிறிது தள்ளி நின்று கொண்டிருப்பதைக் கண்டான். கண்டதும், தனது நெஞ்சைப் பறிகொடுத்தான். மிதப்பிற் கைப்பிடி நெகிழ்ந்தது; நீர்ப்பெருக்கு அவனை இழுத்துச் செல்லத்தொடங்கிற்று. தனது காதலி நிற்குமிடத்தில் தங்கிக் கொள்ளலாமென்று கருதினான். ஆனால், பெருக்கின் வேகம் அவனை அவ்வாறு தங்கவிடவில்லை; மேலும் இழுத்துச் சென்றது. இதனைக் கண்டு அவன் காதலி அவன் நின்று நீராடுமிடத்துக்குத் தானும் சென்று நின்று கொள்ளலாம் என்று நினைத்து, நீரிற் குதித்து அவனைப் பின்தொடர்ந்தாள். அவள் தாய் இதனை அறியாது, 'தனியாய் நீந்தி நீராடாதே; தோழியருடன் சேர்ந்து நீரிலிறங்கி நீராடு' என்று கூக்குரலிட்டாள் (பக். 92, வரி 106—114).

இந்தக் கூக்குரல்தான் செவியில் தாக்கியது. மகளது நோக்கத்தையும் சூழ்ச்சியையும் அறியாது ரகசியக் காதலைப் பகிரங்கமாக்கிய தாயினது அறியாமையை நினைக்க நினைக்க நமக்குக் களிப்புப் பெருகுகிறது!

நதிக்கரையில் பிறித்தோரிடத்திற்குச் செல்வோம். இங்கே ஒரு சிறு பூசல் நடந்துகொண்டிருக்கிறது.

ஒருவன் தன் மனைவியுடன் நீராடிக் கொண்டிருந்தான். அவன் கழுத்திலே அணிந்திருந்த மாலை, நீரில் மூழ்கிக் குளிக்கும்போது கழன்று நீரில் மிதந்து சென்றது. சென்று, சிறிது தூரத்தில் குளித்துக் கொண்டிருந்த வேறொருத்தியின் கூந்தலிற் சிக்கி, அதிலே சூட்டப்

பெற்றதுபோற் கிடந்தது. இதனை மனைவி கண்டு, 'இம்மாலை எனக்கு உரியது; என்னிடம் தந்துவிடு' என்று பூசலிட்டாள். மாலையைச் சூடியிருந்த கூந்தலழகி, 'வையை நீரானது என்னிடம் இதனைக் கொண்டுவந்து சேர்த்து, எனக்கும் இதனோடு உறவுண்டு என ஒற்றறிந்ததுபோற் காட்டிக்கொடுத்து விட்டது. இந்த மாலையை அது நோவும்படி உதிர்த்து எறிந்துவிட மாட்டேன். என்னிடமிருந்தால் இதன் அழகு போய் விடவா செய்யும்?' என்று பதில் கூறினாள். பின்பு, 'இந்த நதிக்கு எனது ரகசியம் தெரிந்துவிட்டது ஒரு வியப்புத்தான் என்று நகைத்தாள் (பக். 170, வரி 34—60).

இந்த நகைப்பின் ஒலி நமது காதிற் படவே, அதன் காரணமாகிய பூசலைத் தெரிந்து, ஒருத்தியின் அமைதியும் சினமும், கையுமெய்யுமாய்ப் பிடிப்பட்ட கணவன் எங்கே பார்ப்பது என்று தெரியாது வெட்கி முகங் கவிழ்ந்து நிற்கும் நிலையும் நோக்கி, நமது மனம் உள்ளூர நகைக்கின்றது.

இனி, கரையின் வேறோர்பக்கத்திற்குப் போவோம். இங்கே ஓர் ஊடற் காட்சி வெளிப்பட நிகழ்கிறது.

ஒருத்தி ஊடற் கோபத்தோடு வையையில் இறங்கி நீராடினாள். கணவனும் உடனின்று நீராடினான். அவளது மனத்தின் வெப்பம் நீரின் குளிர்ச்சியாலும் தணிந்தபாடில்லை. பின், கணவன் உடன் தொடர்ந்து வரக் கரையேறி, ஈரத்தைத் துவர்த்தி உடை மாற்றியதும், அருகிலிருந்த மதுக்குப்பியையெடுத்துக் குளிர் மாறுவதற்காக மது அருந்தினாள். முற்காலத்தில் மதுவிலக்குப் பிரசாரம் இல்லையென்று தோன்றுகிறது! முன் சிறிது வெளுப்பாகி ஆம்பல் பூப்போலிருந்த அவள் கண் இப்போது நன்றாகச் சிவப்பேறிவிட்டது. இக்கண்ணழகைக் கண்டு மோகித்து நின்ற கணவன் பற்பல காதற் பாட்டுக்களைப் பாடி அவள் உள்ளத்தை நெகிழ்த்தி ஊடலைத் தணிவிக்க முயன்றான். இப்படி அவன் பாடியது சிறிது தூரத்தே தள்ளி நின்றுகொண்டுதான். அருகில் வந்தால், என்ன நேரிடும் என்று அவனுக்குத் தெரியும். அவன் பக்கத்தில் நின்ற வேறொருத்தி இப்பாடல்கள் தன்னைக் குறித்தன என்று எண்ணி, அவன் அருகில்வர முயன்றாள்! அவ்வளவில் கணவனது உடம்பெல்லாம் நடுங்கிற்று. தனது மனைவியே தனக்குத் தஞ்சமென்றுணர்ந்து அவளருகிற் சென்றான். அவள் இன்னும் அதிகமாகக் கோபிப்பாள் என்று நினைத்தவுடன், உடம்பெல்லாம் 'கிடுகிடு' என்று நடுநடுங்கியாடத் தொடங்கியது. முன்னமேயே ஊடல் தீராத மனைவி இப்போது மிகவும் சினந்தாள். அங்கே நின்ற பெண்கள் பலரும் பார்த்துக்கொண்டிருக்க, தனது மாற்றாளாகக் கருதியவளோடுள்ள பகையைத் தன் கணவன் மீது காட்டினாள். அவன் நிலத்தில் விழுந்து பணிந்தான். அப்பொழுதும் சினமாறாது ஊடினாள் (பக். 52, வரி 61—76).

ஆண் தன்மைக்கு மாறாகக் கணவனிடங்கண்ட ஏழைத் தன்மையும், பெண்-தன்மைக்கு மாறாக மனைவியிடங்கண்ட அதிகார தோரணையும், இடையில் நிகழ்ந்த காதற் பிழைபாடும், பார் முன்பு நாணமின்றித் தன் கணவனை அவமதி செய்தும் அதனைச் சகித்து நின்ற அவனது பொறுமையும், நம்மை மெய்குலுங்கச் சிரிக்க வைக்கின்றன. கணவனது நடுக்கத்தை நினைக்குந்தோறும் நமது நகைப்பிற்கு எல்லையே இல்லாமற் போய்விடுகிறது.

நாம் வேறிடங்களுக்குச் செல்வோமானால், வேறு வகையாகவும் சுவை வெளிப்படுகிறது. அங்கே பெண்கள் கூட்டத்தைக் காணவில்லை. வேறு யார் காட்சியளிக்கிறார்கள்? நீராடுதற்கு அதிகாலையில் வந்த அந்தணத் திருமேனிகள் நீராடாது நின்றனர். கைகால் சுத்தஞ் செய்வதற்கு வந்த வேறு சில அந்தண மூர்த்திகள் வையை நீரைத் தொடுதலும் செய்யாது நின்றனர். பல் விளக்க வந்த அந்தணர் சிலர், பல் விளக்கியும் வாய் கழுவாது நின்றனர். இவர்களனைவரும் வையைப் பெருக்கு நீரைப் பார்த்த வண்ணமாய் நின்றார்கள். நீராடாதவர் வையையில் நீரோடு கலந்து கள்ளும் வருகிறதென்று கருதினர். ஈக்கள் மொய்த்தது இதற்குச் சான்று. நீரைத் தொடாதவர் வையையில் ஆடவரும் பெண்டிரும் அணிந்த வாசனைத் திரவியங்கள் கலந்து வருகிறதென்று எண்ணினர். நல்ல வாசனை இதற்குச் சான்று. வாய் கழுவாதவர் வையையில் இனிய வாசனைத்தைலம் கலந்து வருகிறதென்று நினைத்தனர். நீர் வழுவழுப்பாயிருந்தது இதற்குச் சான்று (பக். 171, வரி 58—63).

இந்த அந்தணர்களுடைய அலாதியான பரிசுத்தத்தையும், அவர்கள் ஐயங்கொண்டு யாரேனும் ஒருவர் முந்தி இக்கருமங்களைச் செய்தால், பின் தாம் செய்யலாம் என்று எண்ணி நிற்கின்ற

லேயும் நமக்கு அளவற்ற நகைப்பை விளைக்கின்றது.

இப்பொழுது வையையை அணிசெய்யும் மதுரையை அடுத்துள்ள பரங்குன்றுக்குச் செல்வோம். அங்கே மலையின் மீது ஒரு கூத்து நிகழ்கிறது. ஒருத்தி தன் கணவன் ஒலிக்கும் உடுக்கைக்கு ஏற்க ஆட முயன்றாள். அவளது நெற்றியிலிருந்து கண்ணின் கடைவிழியோடு சேர்த்து அலங்கரித்த ஒரு பூமாலை, அவிழ்ந்து வீழ்ந்த அவளது கூந்தலோடு அசைந்து ஆடியது. அவள் கண்கள் சிவந்து தோன்றின. கள்ளுண்ட மயக்கத்தால் அவள் தள்ளாடித் தள்ளாடி ஆடினாள். இடையிற் கட்டிய அவளது ஆடை சிறிது நெகிழ்வுற்றது. அவள் மார்பிலணிந்திருந்த முத்துமாலை ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு புறமாக ஒதுங்கித் தொங்கியது. அவளது ஆடை அசைந்தது; அணிகலன்கள் அசைந்தன; அவளும் அசைந்து அசைந்து ஆடினாள். அறிவயர்ந்து தன்வசமிழந்து பலவகை அலங்கோலங்களுடன் நிகழும் கூத்தும் இடையிடையே அறிவு வந்து பெண்மையியல்போடு பொருந்த ஆட வேண்டும் என்ற முயற்சியும் தம்முள் மாறுபட்டது. இக்காட்சியும் மிக்க நகை விளைப்பதாயுள்ளது (பக். 159, வரி 57—63).

இவ்வாறாக உள்ளன பரிபாடலிற் காணும் நகைப்புக் காட்சிகள். பொதுப்பட நோக்கினால், எங்கெல்லாம் பொருத்தமின்மை அல்லது முரண்பாடு (incongruites) காணப்படுகிறதோ, அங்கெல்லாம் நகைப்பு விளைதற்கு இடமுண்டு. இப் பொருத்தக் கேடுகள் பல வாறாக நிகழலாம். இரு பொருள்படுஞ் சொற்களும், மரபு தவறிய சொல் வழக்கும், தவறான உயர்சொல் வழக்கும், தவறான இழிசொல் வழக்கும், தவறான மொழி பெயர்ப்புக்களும் பொருத்தமின்மையால் நகைப்பின் நிலைக்களமாய் அமைகின்றன. இங்ஙனமே பரிகாச உரையாடல்கள், வர்ணனைகள் முதலியனவும் நகைப்பின் காரணங்களாகும். பரிகாசக் கவிதைகள் (parodies) பற்றியும் நகைச்சுவை சிறந்து விளங்குவதுண்டு. பாரதியின் குயில் பாட்டு இதற்கு ஓர் சிறந்த உதாரணம். இவையெல்லாம் படிப்படியாய் உயர்ந்த தரத்தன. இதற்கு மேற்பட்ட தரத்தில் நிகழ்ச்சிகளின் பொருத்தமின்மையால் நகைச்சுவை விளையும். பரிபாடலில் ஏகதேசமாகக் காணும் நகைச்சுவை இந்த இனத்தைச் சார்ந்ததே. இதனினும் மேம்பட்டது நகைப்பு விளைக்கவல்ல பாத்திரங்களைச் சிருஷ்டித்தல். இதனைக் குணத்தால் விளையும் நகைச்சுவை (Humouor of character) என்னலாம். இவை எல்லாவற்றினும் மேம்பட்டது மக்கள் வாழ்விலே அமைந்து கிடக்கும் பொருத்தமின்மைகளை உள்ளூர உணர்தலால் புலப்படும் நகைச்சுவையாம். இந்த நகைச்சுவை மனிதனது பெருமிதத்திற்குத் தக்க மாற்று மருந்து. அடிப்படையில் சீரியவுள்ளத்தோடு உண்மைகளை யுணர்ந்து, வெளிப்படையில் பரிகாச மனப்பான்மையோடு அவற்றைக் கருதி நோக்குவதுதான் நகைச்சுவை யென்று ஓர் ஆங்கில அறிஞர் இலக்கணம் வகுத்தார். (Thinking in fun while feeling in earnest). இது மிகவும் உண்மையாம்.

பரிபாடலில் ஒரு சில இடங்களில் அமைந்துள்ள நகைச்சுவையை உணர்தல் அருமை. அதன் சுவையை ஊன்றி உணர்வது நமது நகைப்புச் சுவையை மிகுதிப்படுத்தும். நமது வாழ்க்கை இன்பத்தையும் பெருகச் செய்யும்.

நகைப்புச் சுவையைத் தரந்தரமாய்ப் பிரித்தலும், அதற்கு நுட்பமாய் ஆராய்ந்து இலக்கணம் வகுத்தலும் எல்லாவற்றைக் காட்டிலும் நமக்குப் பெருநகைப்பு விளைக்கிறதல்லவா! ★

★

திராவிடரா ? — தமிழரா ?

"தமிழருக்குத் 'திராவிடர்' என்று சிலர் மற்றொரு பெயர் கூறுகிறார்கள். திராவிடர் என்ற பெயர் தமிழருக்கு ஆரியர் சூட்டியது. இதை வைத்துக் கொண்டு திராவிட நாடு வேண்டுமெனக் கூப்பாடு போடுவது தம்மைத்தாமே இழிவு செய்வதாகும். திராவிடம் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? திரு - விடர் என்றால் பரம போக்கிரிகள் என்று பொருள். தமிழர்களாகிய நாம் கேவலம் பரம போக்கிரிகளா ? திராவிடர் என்ற இழி பெயர் தமிழருக்கு வேண்டவே வேண்டாம் ...சரித்திரம் காணாத காலம் முதல் சிறந்து விளங்கிய தமிழர்கள் பரம போக்கிரிகள் என்ற பெயரைக் கொண்டிருக்க வேண்டுமா ?

—நாவலர் சோமசுந்தர பாரதியார்

மொழிவழி ராஜ்யம்

எஸ். ராமகிருஷ்ணன்

மொழிவழி மாகாணங்களை அமைக்கவேண்டுமென்று ஆர்த்தெழும் மக்களின் இயக்கத்துக்கு ஆட்சியாளரால் அணைபோட முடியவில்லை. ஆந்திர மாகாண அமைப்புக்கு அவர்கள் வேண்டாவெறுப்பாக ஒப்புக்கொண்டதே அதற்குச்சான்று. மொழிவாரி மாகாண கோஷத்தை ஒப்புக்கொள்வதுகிணறுவெட்ட பூதம் புறப்பட்டகதையாகுமென்று ஹைதராபாத்காங்கிரஸில் பண்டிதநேருவே பிரகடனஞ் செய்தார்; எனினும், அதே காங்கிரஸ் பிரதிநிதிகளின் மகாசபையில் அந்தப் பிரச்னையில் ஒரு குருக்ஷேத்திரப் போராட்டமே நடந்தது. இப்பொழுது கூட, மொழிவாரி மாகாணக் கிளர்ச்சியில் காங்கிரஸ்காரர்கள் கலந்து கொள்ளக் கூடாதென்று காரியக் கமிட்டி கட்டளை பிறப்பித்திருக்கிறது; எனினும்,காங்கிரஸ் தலைவர்களில் பலரே மொழிவாரி மாகாண இயக்கத்தில் பகிரங்கமாகக் கலந்து கொள்கின்றனர். நாகபுரியில் மகாராஷ்டிர காங்கிரஸ் தலைவர்களில் பலர்கூடி, பம்பாயிலும் மகாராஷ்டிரத்திலும் ஹைதராபாத்திலும் பிளவுபட்டுக் கிடக்கும் மராத்தி தாயகத்தை ஒன்றுபடுத்த வேண்டுமென்று முடிவு செய்திருக்கின்றனர். கன்னட மாகாண காங்கிரஸ் கமிட்டியும், கன்னட மக்களின் மாகாணம் அமைய வேண்டு மென்று கோருகிறார்கள். விசால ஆந்திரா அமைய வேண்டு மென்ற கோஷத்தை ஏகாதிபத்திய வெறிக்கு உதாரணமாகப் பண்டித நேரு கண்டித்த போதிலும், ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டியே அந்த கோஷத்தை ஆதரிக்கிறது. ஆம்! மொழிவாரி மாகாண கோஷம் கம்யூனிஸ்ட் கோஷம் மட்டுமல்ல; இடதுசாரிக்கட்சிகளின் கிளர்ச்சியாக மட்டும் குறுகியிருக்கவில்லை; விரிந்து பரந்த மக்களின் ஆதரவைப்பெற்று, ஆளும் கட்சியிலேயே எதிரொலித்து வருவது; விருப்பு வெறுப்பில்லாதவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டிய வெள்ளிடையுண்மையாகும்.

> மொழிவாரியாக இந்தியாவைப் பிரிப்பதால், இந்திய ஐக்கியம் சீர்குலைந்து விடும் என்று இந்திய பிரதமர் நேரு கூறுகிறார். இது உண்மையா ? இல்லையென்று தக்க ஆதாரங்களுடன் இக் கட்டுரை மறுக்கிறது.

இந்தியாவின் ஒற்றுமைக்கு உலை வைத்து விடுமென்று கூறி, பண்டித நேரு மொழிவாரி மாகாணக் கோரிக்கையை ஆட்சேபிக்கிறார். இதைக் கேட்கும் பொழுது, இந்திய ஒற்றுமையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் அக்கறை கொண்டிருந்தார்களோவென்று ஐயம் தோன்றுகிறது. ஏனெனில், இன்றைய இந்தியாவின் மாகாண அமைப்பு அவர்களுடைய சிருஷ்டி. சில பல சமஸ்தானங்களை ஐக்கியப்படுத்தி புதிய மாகாணங்களை சிருஷ்டித்ததைத் தவிர, காங்கிரஸ் ஆட்சி எந்த வகையான மாறுதலையும் ஏற்படுத்தவில்லை!

நம் தேசத்தை அடிமைப்படுத்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள், நமது மொழிகளையும் பண்பாட்டையும் நசுக்க விரும்பினார்கள்; ஜனநாயக இயக்கத்தைக் குலைக்க விரும்பினார்கள்; எனவே அவர்கள் தான்தோன்றித்தனமாக பன்மொழி மாகாணங்களை நிறுவினார்கள்; இடைஇடையே மன்னர்களின் யதேச்சாதிகாரம் தலைவிரித்துத் தாண்டவமாடும் சமஸ்தானங்களை அமைத்தார்கள். இதைத்தான் மகாத்மா காந்தி, இந்தியாவை நிரந்தரமாகச் சின்னபின்னப்படுத்திய தீவினை" என்று கண்டித்தார். பாரதநாட்டின் படத்தைப்பார்த்தால், காந்திஜியின் கண்டனத்தை நாம் புரிந்து கொள்ளமுடியும்.

பாரதத்தின் தென்மேற்குப் பகுதியில் இருப்பது கேரள நாடு; மேற்கே அரேபியக்கடல், கிழக்கே மேற்குத்தொடர்ச்சி மலை; இவற்றுக்கு இடையேயுள்ள கேரள நாட்டில் 120 லட்சம் மலையாளி மக்கள் வசிக்கிறார்கள். ஆனால் கேரள நாடு ஒருமாகாணமாக அமைக்கப்படவில்லை. சென்னை மாகாணத்திலுள்ள மலபார் ஜில்லாவிலும், நீலகிரிஜில்லாவின் பகுதியிலும் தென்கன்னட ஜில்லாவின் பகுதியிலும் ஐம்பது லட்சம் மலையாளிகள் வாழ்கிறார்கள். மற்றும் 70 லட்சம்

மலையாளிகள் 12 லட்சம் தமிழர்களுடன் திருவாங்கூர் கொச்சியில் வாழ்கிறார்கள்.

பாரதத்தின் தென்மேற்கு நிலமே தமிழகம். மூன்று கோடித் தமிழர்களில் 12 லட்சம் பேர் திருவாங்கூர் கொச்சியிலிருப்பதைக் குறிப்பிட்டோம்; புதுவையிலும் காரைக்காலிலும் பிரெஞ்சுக் காலடியில் பதறும் தமிழர்கள் நீங்கலாக, மற்றவர்கள் சென்னை ராஜ்யத்தில் வாழ்கிறார்கள்.

திருவாங்கூரும் கொச்சியும் ஒன்றாக இணைந்ததால் ஒரு பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டதாக ஆட்சியாளர் கூறினார்கள். ஆனால் திருவாங்கூர் ராஜா, ராஜப் பிரமுகராகி விட்டார்; திருவாங்கூர் கொச்சி மன்னர்களின் குடும்பங்களுக்கு வருஷத்துக்கு 40 லட்சம் ரூபாய் படி அளக்கிறோம். தவிர, திருவாங்கூர்-கொச்சி அமைப்பு, மொழிவாரி மாகாண அமைப்புக்கு உதவவில்லை. தமிழர்களும் மலையாளிகளும், சென்னை திருவாங்கூர் ராஜ்யங்களில் பிளவுபட்டுக் கிடக்கிறார்கள்.

கேரளத்துக்கு வடக்கேயிருப்பது கன்னடம். கன்னட நாடும் கன்னட மக்களும் சென்னை, பம்பாய், ஹைதராபாத், மைசூர் ஆகிய நான்கு மாகாணங்களில் துண்டாடப்பட்டுள்ளனர். இரண்டு லட்சம் ஜனத்தொகையுள்ள ஸி. பிரிவு ராஜ்யமான குடகும் கன்னட நாட்டின் பகுதி தான்.

தென்னாட்டின் இன்னொரு தேசிய இனம் ஆந்திரர்களாகும். புதிதாகப் பிறந்திருக்கும் ஆந்திர மாகாணத்தில் இரண்டு கோடி ஆந்திரர்கள் வசிக்கிறார்கள்; ஒரு கோடி ஆந்திரர்கள் 50 லட்சம் மகாராஷ்டிரர்களுடன் 25 லட்சம் கன்னடியர்களுடனும் ஹைதராபாத் ராஜ்யத்தில் வசிக்கிறார்கள்.

இவ்வாறாக, தென்னாட்டின் நான்கு தேசிய இனத்தினரான தமிழர்களும் மலையாளிகளும் கன்னடியர்களும் ஆந்திரர்களும், தான் தோன்றித் தனமாக சிருஷ்டிக்கப் பட்ட மாகாணங்களில் பிளவு பட்டுக்கிடக்கிறார்கள்.

சென்னை ராஜ்யத்துக்கு வடக்கே பன்மொழி மாகாணமான பம்பாய் இருக்கிறது. அந்த மாகாணத்தின் தென் கோடிப் பகுதியில் கன்னடியர்கள் வசிக்கிறார்கள்; கன்னட ஜில்லாவிற்கு வடக்கே மகாராஷ்டிரர்கள் வசிக்கிறார்கள். மராத்திகளின் தொகை 2 கோடி 20 லட்சமாகும்; அவர்களில் பாதிப் பேர் பம்பாயில் வசிக்கிறார்கள்; 35 லட்சம் பேர் ஹைதராபாத்தில் வசிக்கிறார்கள்; 60 லட்சம் பேர் மத்திய மாகாணத்தில் உள்ளனர். போர்ச்சுகீசியரின் பேயாதிக்கத்துக்கு உட்பட்ட கோவாவும் மராத்தி தேசத்தின் பகுதியே. இந்திய சரித்திரத்தில் மராத்தி மக்களின் பங்கு மகத்தானது; பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு எதிராக உறுதியாகப் போராடியவர்கள் அவர்கள். ஆனால் ஆகஸ்ட் பதினைந்தைக் கொண்டாடி ஆறாண்டுகளான பின்பும், அவர்களுடைய தாயகம் ஒன்றுபடவில்லை.

பம்பாய் மாகாணத்தில், மராத்தி பிரதேசத்துக்கு வடக்கே குஜராத்திகள் வாழும் பகுதி இருக்கிறது. குஜராத்திகளின் தாயகமும் சிதறுண்டிருக்கிறது; பம்பாய் மாகாணத்தின் பகுதியிலும், சௌராஷ்டிராவிலும் கட்ச் சமஸ்தானத்திலும் குஜராத்தி மக்கள் பிளவுபட்டிருக்கிறார்கள்.

பம்பாய் மாகாணத்துக்கு வடமேற்கே இருப்பது மத்திய மாகாணம் இதன் ஜனத் தொகையில் மூன்றில் ஒருவர் மகாராஷ்டிரர்கள்; மலைப் பிரதேசங்களில் கோண்டுகள் என்ற பூர்வ குடிகள் வாழ்கிறார்கள். மத்திய மாகாண மக்களில் பாதிப்பேர் ஹிந்துஸ்தானிகள்.

ஏகாதிபத்திய வாதிகளின் துண்டாடும்கொள்கையிலிருந்து ஹிந்துஸ்தானும் தப்பவில்லை. 1857-ம் ஆண்டு சிப்பாய் புரட்சியில் ஹிந்துஸ்தானிப் படை வீரர்களும் விவசாயிகளும் வகித்த பாத்திரம் சாமான்யமானதா? கங்கை நதி சமவெளியில் ஏகாதிபத்தியக் கோட்டை கொத்தளங்களெல்லாம் லங்கா தகனம் செய்யப்பட்டதல்லவா? அதற்காக, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் பழி வாங்கினார்கள்.

வங்காள விரிகுடாக் கரையோரமாக, சென்னைக்கு வடக்கே யிருப்பது ஒரிஸ்ஸா. அதன் ஜனத்தொகை ஒண்ணரைக் கோடி; அவர்களில் 50 லட்சம் மக்கள் ஆதிவாசிகள். மேலும் வடக்கே சென்றால், வங்கத்தின் தொழில் நகரமும் கலாச்சார நடுநாயகமுமான கல்கத்தாவை அடைகிறோம். இந்தியாவின் கலைவளம் நிறைந்த சமூகங்களில் ஒன்று வங்க சமூகமாகும். விடுதலைப் போராட்டத்தின் நடுநாயகமாக வங்கம் விளங்கி வந்திருக்கிறது. எனவே, ஏகாதிபத்திய வாதிகள் வங்காளத்தை விசேஷத் தாக்குதலுக்கு உட்படுத்தினார்கள். 1906-ல் வங்காளத்தை இரண்டாகத் துண்டு

போட்டது ஏகாதிபத்தியம். ஆனால் தேசியப் புயலின் உக்ரத்தைக் கண்டு அஞ்சிய ஏகாதிபத்தியம் பின்வாங்கியது. ஆனால் 1947-ல் நிகழ்ந்த 'அதிகார மாற்றத்தின்' விளைவாக, வங்கம் இரண்டு பட்டது. வங்காளத்தின் சில பகுதிகள் பீகாரில் இருக்கின்றன; பிற்போக்காளர்கள் வங்காளி—பீகாரி கலகத்துக்குக் கொள்ளி வைக்க, இது வசதியாகப் பயன்படுகிறது.

வங்காளத்துக்கு வடகிழக்கே அஸ்ஸாம் இருக்கிறது, அதன் ஜனத்தொகை 90 லட்சம். அஸ்ஸாம் நாட்டின் மூன்றில் இரு பகுதி மலைப்பிரதேசமாகும்; அந்த மலைப்பிரதேசத்தில் அஸ்ஸாமியர்களில் மூன்றில் ஒருவர் வாழ்கின்றனர்; அவர்கள் திபேத்திய—பர்மிய வழியில் வந்த பூர்வ குடிகளாகும். சமவெளியில் வாழும் மக்கள் அஸ்ஸாமி அல்லது வங்காளி மொழி பேசுகிறவர்கள்.

வங்கத்துக்கு மேற்கே, கிட்டத்தட்ட 4 கோடி மக்கள் வாழும் பீகார் இருக்கிறது. பீகாரின் தென் பகுதியான சோட்டா நாக்பூர் மலைப்பிரதேசமாகும்: இங்கு சான்தால்கள், முண்டாக்கள், ஓரான்கள் முதலிய இனத்தினர் வாழ்கின்றனர்; இவர்கள் இன்றும் பல புராதனப் பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்கின்ற பிற்பட்ட நிலையில் உள்ளனர்.

பீகாருக்கு மேற்கே இருப்பது உத்திர பிரதேசம்; கிட்டத்தட்ட ஆறு கோடி மக்கள் வாழும் இந்த மாகாணம் இந்திய சரித்திரத்தில் நடுநாயகமாக விளங்கி வந்திருக்கிறது.

உத்திரப் பிரதேசம், பீகார், ராஜஸ்தான், மத்திய பாரத், விந்தியப் பிரதேசம், மத்திய மாகாணத்தின் பகுதி ஆகியவற்றில் உள்ள ஜனங்கள் ஹிந்துஸ்தானி மொழியின் பல்வேறு சிதைவுகளைப் பேசுகிறார்கள். ஐக்கிய மாகாணத்துக்கு மேற்கே, யமுனை நதிக்கரையில் பாரதத்தின் தலைநகரான டெல்லி இருக்கிறது. ஐக்கிய மாகாணத்துக்கு வடக்கே பாஞ்சாலமும், பாஞ்சாலத்துக்கு வடக்கே காஷ்மீரும் உள்ளன. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் பாஞ்சாலத்தைத் துண்டாடினார்கள்; தமக்கு ஐந்தாம் படையாக செயலாற்றுவதற்கு முன்வந்த மன்னர்களுக்கு சமஸ்தானங்களைப் பரிசளித்தார்கள். இதன் விளைவாக, பாஞ்சால நாட்டில் திட்டுதிட்டாக, சமஸ்தானங்கள் முளைத்தன. இந்த திட்டுகளெல்லாம் பெப்சு என்ற ராஜ்யத்தில் ஐக்கிய மடைந்துள்ளன. ஸர்தார் படேலின் முயற்சியால் பாடியாலா ராஜா இந்தப் பெப்சு ராஜயத்துக்கு ராஜப் பிரமுகராக்கப் பட்டிருக்கிறார். இதன் மூலம், பாஞ்சாலம் சிதறுண்டு வாழ்வுக்கு முடிவு காணவில்லை. பார்க்கப் போனால், பெப்சுவுக்கு தொடர்ந்தாற்போலிருக்கும் நிலப்பரப்புகூட கிடையாது. பெப்சுவின் பகுதிகள் பாஞ்சாலப் பரப்பிலுள்ள தீவுகளேயாகும். பெப்சு மன்னர்களுக்கும் ராஜப் பிரமுகருக்கும் வருஷத்துக்கு 42 லட்ச ரூபாய் படி கொடுக்கப்படுகிறது.

இதுதான் இன்றைய பாரதத்தின் அரசியல் படம். பல்வேறு மக்களின் தாயகங்கள் பிளவுபட்டிருப்பதையும், பன்மொழி மாகாணங்களில் முடிச்சுப் போடப்பட்டிருப்பதையும் பூர்வ குடிகளின் சுயாட்சி கிட்டாக் கனவாக இருப்பதையும் இந்தப் படம் பட்டவர்த்தனமாக்குகிறது.

இவ்வாறு பாரதக் குடும்பம் சீர்குலைந்திருப்பது ஒற்றுமைக்கு உதவுகிறதா? அல்லது உலைவைக்கிறதா? பன்மொழி மாகாணங்களில், இனவெறியர்கள் கலகத்துக்கு தூபம் போடுவதற்கே இது பயன்படுவதை நமக்கு அனுபவம் எடுத்துக்காட்டுகிறது. இந்தத்தான்தோன்றித்தனமான எல்லைக் கோடுகளை அழிக்க வேண்டும். ஆந்திரர்கள், தமிழர்கள், மலையாளிகள், கன்னடியர்கள், மராத்தியர்கள், குஜராத்திகள் முதலிய இனத்தினர் தத்தம் தாயகத்தில் ஒன்றுபட வேண்டும்; இதற்காக, சமஸ்தானாதிபதி முறைக்கு சாவு மணி யடிக்கவேண்டுமென்பது உண்மை. ஆனால் பத்தாம் பசலிப் பிரபுத்துவப் பிண்டங்களின் யதேச்சாதிகாரத்தைப் பாதுகாப்பதற்காகவா இந்திய மக்கள் சுதந்திரப் போர் நடத்தினார்கள்?

மொழிவழி அரசுகளில்தான் மக்களின் மொழியில் ஆட்சி நடத்த முடியும். தமிழ் நாட்டில் நீதி நிர்வாகமும், சட்டசபையும், கல்லூரியும் தமிழ் மொழியை அரியாசனத்தில் அமர்த்தினால் தான், தமிழ் மக்கள் அரசியல், பொருளாதார விவகாரங்களில் பங்குகொள்ள முடியும். அன்னிய மொழி அரசாங்க மொழியாக உள்ளவரை, ஆட்சிக்கும் மக்களுக்கும் தொடர்பு ஏற்பட முடியாது. தமிழ் மொழியும். தமிழ்க் கலைகளும் செழித்தோங்க வேண்டுமானால், தமிழ் மொழி அரசாங்க மொழியாக வேண்டும், கல்லூரி மொழியாக வேண்டும். தமிழ் மொழி ஆட்சி மொழியாகிவிட்டால், ஜனநாயகம் கைகூடி விடுமென்று நாம்

வாதிக்கவில்லை; அது ஜனநாயகத்தின் முதற் தேவை என்பதே நமது கட்சி, முழுத் தேவை என்பதல்ல.

இந்திய தேசத்தின் ஐக்கியத்துக்கு ஜனநாயக இயக்கமே உத்திரவாதமாகும். ஏகாதிபத்தியத்தின் பல்லக்கு தூக்கிகளாகச் செயலாற்றிய மன்னர்களும் நிலப்பிரபுக்களும் ஐக்கிய இந்தியாவின் தூண்களாக விருக்க முடியாது. சந்தர்ப்பம் கிடைத்த பொழுது, தனியரசு அமைக்க ஹைதராபாத் நிஜாமும் திருவாங்கூர் மன்னனும் சதிசெய்யவில்லையா? காஷ்மீர் இந்தியாவில்இணைந்திருப்பதற்கு காஷ்மீர் மன்னனோ காஷ்மீர் பிரபுக்களோ காரணமல்ல. ஷேக் அப்துல்லாவே அமெரிக்க வலையில் விழுந்து தனியரசுக் கோரிக்கையை வற்புறுத்தியபொழுது, அந்த சூழ்ச்சிக்கும் சாவுமணியடிக்கும் உணர்வை காஷ்மீரில் கண்டோம். இந்த ஜனசக்தியின் வளர்ச்சிக்கே மொழிவழி மாகாணம் அவசியமாகும்.

இந்திய ஒற்றுமை வாழையடி வாழையாக விளங்கி வரும் கருத்து. ஐக்கிய இந்திய அரசுக்குத் தேவையான பொருளாதார அடிப்படை இல்லாத காலத்திலும், இந்திய நாகரிகத்தின் ஒற்றுமை உருப் பெற்றிருந்தது. கிராமப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட பாரத நாகரிகத்தின் ஒற்றுமையை அரச குலங்களின் மாறுதல்களோ, அன்னியர் ஆக்கிரமிப்புகளோ குலைக்க முடியவில்லை. பிரிட்டிஷ் படையெடுப்பு இந்திய சமூக அமைப்பை அழித்தது. ஆனால் நவீன கால விடுதலை இயக்கம் இந்திய மக்களின் ஒற்றுமையை கண்கூடாகக் கட்டி வளர்த்திருக்கிறது. நவீனத் தொழில்களும் போக்கு வரத்தும், இந்தியப் பொருளாதாரத்தை ஐக்கியப்படுத்தி, இந்தியக் கூட்டரசுக்கு அடிப்படையை அளித்துள்ளன.

இந்த ஒற்றுமைக்கு உலை வைக்க இந்திய மக்கள் விரும்பமாட்டார்கள். இல்லாமையும், கல்லாமையும், சாதிக்கொடுமையும் ஒழிந்து, தொழில்கள் பெருகி, நவ இந்தியா உருப்பெற வேண்டுமானால் இந்திய மக்களின் கூட்டு முயற்சியும் கூட்டு வலுவுமே அதைச் சாத்தியமாக்கும். எகாதிபத்திய நிலப்பிரபுத்துவப் பீடைகளை ஒழித்து, தொழிலாளி விவசாயி மக்களின் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட குடியரசு மலரும் பொழுது, இந்திய மக்கள் ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டு முன்னேறுவார்கள். அத்தகைய நவ இந்தியாவே உலகத்தில் ஒரு வல்லரசாக விளங்கி, ஏகாதிபத்திய வாதிகளின் கொட்டத்தை அடக்கும்; நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுவதற்குப் பேருதவியாக விளங்கும். சிதறுண்ட பாரதமோ பகைவர்களின் சூழ்ச்சிக் களமாகச் சீரழிந்து விடும். எனவே மொழிவாரி அரசுகளின் கூட்டரசாக இந்திய யூனியனை அமைப்பதால், ஒற்றுமை உரம்பெறும், ஊனமடையாது.

மொழிவழி மாகாணங்கள், மக்களின் மொழியில் ஆட்சியை நடத்தும்பொழுது இந்தியக் கூட்டரசின் பொது மொழிப் பிரச்னையும் புதிய பார்வையில் பரிகாரம் காண முடியும். பெரும்பான்மையான இந்தியர்கள் புரிந்து கொள்ளக்கூடிய ஹிந்துஸ்தானி மொழியை, கூட்டரசு விவகாரங்களின் அவசியத் தேவைகளுக்கு பயன்படுத்துவதை, எல்லா இனத்தினரும் விரும்பி வரவேற்பார்கள். அதன் மூலம், தத்தம் மொழிக்கு இழிவு நேரிடாதென்பதை அவர்கள் கண்கூடாகக் காண்பார்கள்.

பல மொழிகளைப் பேசும் பல இனத்தவர்கள், வெள்ளையர், கறுப்பர், மஞ்சள் நிறத்தவர் போன்ற பல நிறத்தவர்கள், சோவியத் சமாஜத்தில் ஒன்றுபட்டு வாழ்க்கின்றனர். ஒவ்வொரு மொழியும் வளம்பெறுவதற்கு ஆக்கம் தரும் ஆட்சி அமைந்துவிட்டதால், ருஷிய மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பதில் எவருக்கும் தயக்கமில்லை; எல்லோருக்கும் ஊக்கம் இருக்கிறது. இந்திய மக்கள் அந்த முன்னுதாரணத்திலிருந்து பாடம் கற்பார்கள்: பிரிவினை வாதிகளுக்கும் தனியரசு வாதிகளுக்கும் செவி கொடுக்க மாட்டார்கள்.

சைபீரியாவை யொட்டியுள்ள மஞ்சூரியாவிலிருந்து நேபாளத்தை ஒட்டியுள்ள திபேத் வரை, சீன உப கண்டத்தை ஒன்றுபடுத்தி, விமோசனமடைந்த 48 கோடி மக்களைக் கொண்ட புதிய சீனம் மலர்ந்திருக்கிறது. அஜாதசத்துருவின் பலத்தைப் பெற்றவர்கள் போல, சுதந்திரத்துக்காகப் போராடும் ஆசிய மக்கள் அக மகிழ்கிறார்கள்; ஆதிக்க வெறியர்கள் அலறுகின்றனர். அத்தகைய பீமனாக பாரதம் விளங்க வேண்டுமானால், இந்திய ஒற்றுமை அவசியம். எனவே தான் இனவாரி அரசுகளின் கூட்டுக் குடும்பமாகத் திகழும் நவ இந்தியாவின் நிர்மாணத்துக்கு முற்போக்கை நாடும் மக்கள் தம்மை அர்ப்பணித்துக் கொள்கிறார்கள். ★

—கிரிம் சகோதரர்கள்

நல்ல பெண்ணுக்கு அடையாளம்

ஒருகாலத்தில் ஒருஇடையன் கல்யாணம் செய்துகொள்ள விரும்பினான். அந்த ஊரில் மூன்று அழகான பெண்கள் இருந்தார்கள்; மூவரும் உடன் பிறந்த சகோதரிகள். மூன்று பேரும் ஒரே மாதிரி அழகாக இருந்ததால் யாரைக் கல்யாணம் செய்துகொள்ளுவது என்று தெரியாமல் திகைத்தான் இடையன். கடைசியில் தன் தாயாருடைய ஆலோசனையைக் கேட்டான். அவள் சொன்னாள்: "மூன்று பேரையும் நம் வீட்டுக்குச் சாப்பிடக் கூப்பிடு. மூவருக்கும் ரொட்டியை எடுத்துவை. அவர்கள் எப்படிச் சாப்பிடுகிறார்கள் என்பதைக் கவனித்துப் பார். அப்புறம் அதை என்னிடம் சொல்"

கிரிம் சகோதரர்கள் : ஜேக்கப் லூட்விக் காரல், வில்ஹெம்காரல் என்ற இரண்டு ஜெர்மன் சகோதரர்கள். இவர்கள் 18-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். சிறந்த அறிவாளிகள். இருவரும் சேர்ந்து ஏராளமான நாடோடிக் கதைகளை எழுதியவர்கள். ஆரம்ப காலங்களில் பல நூல் நிலையங்களில் வேலை செய்தனர். அக்காலத்தில் ஜெர்மனியை ஆண்ட 4-வது பிரடெரிக் வில்லியத்தின் அழைப்பை ஏற்று ஜெர்மன் சர்வகலாசாலையில் பேராசிரியர்களாகப் பணி யாற்றினர். இவர்கள் எழுதிய குட்டிக் கதைகள் கருத்தாழம் நிறம்பியவை. இக்கதைகளை தமிழில் தருபவர் கு. அழகிரிசாமி.

அப்படியே மூன்று சகோதரிகளையும் சாப்பிட அழைத்து வந்து, ஆளுக்கு ஒரு ரொட்டியை எடுத்துவைத்தான், ரொட்டியின் மேல்பாகம் மிருதுவாக இல்லாமல், கடினமாக இருந்ததால், அந்த மேல் பாகத்தை மட்டும் உரித்து விட்டு உள்ளே இருப்பதைச் சாப்பிடும்படி நேர்ந்தது. ஒருத்தி தனக்கு வைத்த ரொட்டியை எடுத்து அதை உரிக்காமல் கொள்ளாமல் அப்படியே வாயில் போட்டு விழுங்கிவிட்டாள்; மற்றொருத்தி ரொட்டியை எடுத்து உரித்தாள்; ஆனால் உரிக்கும் போது ரொட்டியின் பெரும்பாகம் மேல்பாகத்துடன் ஒட்டிக்கொண்டு வந்துவிட்டது. ஆனால் அவள் அதைப் பொருட்படுத்தாமல் அப்படியே தூர எறிந்துவிட்டு, மீதியுள்ளதைச் சாப்பிட்டாள். மூன்றாவது பெண்ணோ தன் ரொட்டியை எடுத்து, ரொட்டிக்குச் சேதமில்லாமல் திட்டமாக மேல்பாகத்தை மட்டும் உரித்து எறிந்துவிட்டுச் சாப்பிட்டாள். இந்தச் சமாச்சாரங்களைத் தன் தாயாரிடம் போய்ச் சொன்னான் இடையன். அவள், "மூன்றாவது பெண்ணை நீ கல்யாணம் பண்ணிக்கொள்" என்று சொன்னாள். அவ்வண்ணமே அவளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு சந்தோஷமாக வாழ்ந்து வந்தான் இடையன்.

சுவர்க்கத்துக்குப் போன குடியானவன்

ஒரு காலத்தில் ஒரு ஏழைக் குடியானவன் செத்துப் போய்விட்டான்.

அவன் மிகவும் நல்லவன். அவன் சுவர்க்கத்தின் வாசலில் வந்து நிற்கும் போது, ஒரு பெரிய பணக்காரப் பிரபுவும் அங்கே வந்து சேர்ந்தான். அந்தச் சமயத்தில் பேதுருச் சாமியார் கையில் சாவியோடு வந்து, சுவர்க்கத்தின் கதவைத் திறந்து பணக்காரனை உள்ளே அனுப்பிவிட்டுப் பழையபடியும் கதவைப் பூட்டிவிட்டார். ஏழைக் குடியானவன் நிற்பதை அவர் கவனிக்கவில்லை. உள்ளே சென்ற பணக்காரனுக்கு ஏக தடபுடலாக உபசாரம் நடந்தது. மேள தாளங்களுடன் அவனை வரவேற்றார்கள். பாட்டும் கூத்தும் அமர்க்களப்பட்டன. இவற்றையெல்லாம் வெளியே நின்று கேட்டுக்கொண்டிருந்தான் குடியானவன். பாட்டும் மேள தாளங்களும் நின்ற பிறகு, பேதுருச் சாமியார் வந்து, பழையபடியும் கதவைத் திறந்து குடியானவனை உள்ளே அழைத்துச் சென்றார். தன்னை வரவேற்பதற்கும் மேள தாளங்களை முழக்குவார்கள்; பாட்டுப் பாடுவார்கள் என்றெல்லாம் குடியானவன் எதிர்பார்த்தான். ஆனால் அப்படியொன்றும் நடக்கவில்லை. அதே சமயத்தில் அவனை மிகமிக அன்போடு வரவேற்றார்கள்; தேவதூதர்கள்கூட அவனைப் பார்க்க வந்தார்கள். ஆனால், ஒருவரும் பாடவில்லை. இதைப் பார்த்த குடியானவன், பேதுருவிடம், "பணக்காரனைப் பாட்டுப்பாடி வரவேற்றார்கள்; ஆனால் என்னை அப்படி வரவேற்கக் காணோம். ஏன் இந்தப் பாரபக்ஷம்? பூலோகத்தில்தான் நியாயத்திற்கு விரோதமாகக் காரியங்கள் நடக்கின்றன. சுவர்க்கத்திலும் அப்படித் தானா?" என்று கேட்டான் அதற்குப் பேதுரு பின்வருமாறு பதில் சொன்னார்:

"உனக்கு நாங்கள் ஓரவஞ்சகம் செய்யவில்லை. எல்லோரைப் போல நீயும் எங்கள் பரிபூரணமான அன்புக்குப் பாத்திரமானவன்தான். சுவர்க்கத்தில் பணக்காரன் அனுபவிக்கும் இன்பத்தையெல்லாம் நீயும் அனுபவிக்கலாம். ஆனால், பணக்காரனை வரவேற்பதற்கு ஏன் பாட்டுப் பாடி கொட்டு மேளம் கொட்டினார்கள் என்றால், உன்னைப் போன்ற ஏழைகள் தினந்தினமும் சுவர்க்கத்துக்கு வருகிறார்கள்; பணக்காரனோ நூறு வருஷங்களுக்கு ஒரு முறைதான் வருகிறான்! அதனால்தான்."

மிச்சம் மிஞ்சாடிகள்

ஒரு காலத்தில் ஒரு அழகான பெண் இருந்தாள். அவள் ஒரு முழுச் சோம்பேறி. எதிலும் அவளுக்கு அசிரத்தை. அவள் நூல் நூற்கும்போது எங்காவது ஓரிடத்தில் முடிச்சு விழுந்துவிட்டால் மிகவும் எரிச்சலுடன் முடிச்சையும் முடிச்சோடு ஏராளமான நூலையும் அறுத்துத் தூர எறிவாள். இப்படியே அவள் அறுத்தெறிந்த நூல்கள் நீள நீளமாகத் தரையெங்கும் சிதறிக் கிடந்தன. அவளிடம் ஒரு வேலைக்காரி இருந்தாள். அவள் நல்ல உழைப்பாளி; பொறுமையோடு கஷ்டப்பட்டு வேலை செய்யக்கூடியவள். எஜமானியம்மாள் தூர எறிந்த நூல் துண்டுகளையெல்லாம் பொறுக்கிப் பொறுக்கிச் சேர்த்து வைத்துக்கொண்டே வந்தாள். அப்புறம் அவற்றை ஒழுங்காக முறுக்கேற்றி நூற்று அந்த நூலை நெய்து ஒரு 'கவுன்' தைத்துப் போட்டுக் கொண்டாள்.

இந்தச் சமயத்தில் எஜமானியாகிய அந்த அழகிய பெண்ணுக்குக் கல்யாணம் செய்ய நிச்சயிக்கப்பட்டது. கல்யாணத்துக்கு முதல் நாள் மாலையில் வேலைக்காரப் பெண் தன் புது கவுனைப் போட்டுக்கொண்டு சந்தோஷமாக ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தாள். இதைப் பார்த்த மணப்பெண், "இதென்ன பெருமை! கேவலம், தூர எறிந்த மிச்ச மிஞ்சாடி நூலினால் கவுன் செய்து போட்டுக் கொண்டு இப்படிக் குதிக்கிறாள் இந்தப் பெண்" என்று சொன்னாள். இதை மணமகன் கேட்டுக் கொண்டான். உடனே மணமகளைப் பார்த்து, "நீ சொன்னது எனக்குப் புரியவில்லை. விஷயம் என்ன?" என்று கேட்டான். உடனே மணப் பெண் தான் தூர எறிந்த நூலைக்கொண்டே வேலைக்காரப் பெண் கவுன் தைத்துப் போட்டுக் கொண்ட செய்தியை விபரமாகச் சொன்னாள். உடனே மணமகனுக்கு அவள் எவ்வளவு பெரிய சோம்பேறி என்பதும் வேலைக்காரப் பெண் எவ்

வளவு நல்ல உழைப்பாளி என்பதும் தெரியவந்தன. அவ்வளவுதான், அந்த அழகான பெண்ணை அந்த க்ஷணமே உதறித் தள்ளிவிட்டு, வேலைக்காரப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டான்.

தானியக் கதிர்

ஒரு காலத்தில் இந்தப் பூமி மிகவும் வளமுடையதாக இருந்தது. அப்பொழு தெல்லாம் தானியக் கதிர்கள் மிகமிகப் பெரியனவாக இருக்கும். இப்பொழுது பயிரும் கதிரும் சேர்ந்து எவ்வளவு உயரமிருக்கிறதோ அவ்வளவு உயர மாக அப்பொழுது தானியக் கதிர்கள் இருந்தன. இப்படிப்பட்ட அமோக மான வளப்பத்தின் காரணமாக, மனிதர்களுக்கு அலட்சிய புத்தி வந்து விட்டது.

ஒரு நாள் ஒரு பெண் தன் குழந்தை யுடன் நடந்து போய்க்கொண்டிருந் தாள். குழந்தை கால் தவறிச் சேற்றில் விழுந்துவிட்டது. உடனே அந்தப் பெண் ஓடிப்போய் குழந்தையை எடுத்தாள். பக்கத்திலுள்ள பயிர்களி லிருந்து பத்துப் பன்னிரண்டு கதிர்களை ஒடித்து அவற்றைக் கொண்டு குழந் தையின் உடைகளில் ஒட்டியிருந்த சேற்றைத் துடைத்தாள். இதைப் பார்த்த கடவுளுக்குக் கோபம் வந்து விட்டது. "இனிமேல் பயிர்களில் கதிர் களே இல்லாமல் போகக் கடவது! மனிதர்களுக்கு இப்படிப்பட்ட நற்பாக் கியங்களை அனுபவிக்கும் தகுதி இல்லை" என்று சபித்துவிட்டார் கடவுள். உடனே ஊரிலுள்ள எல் லோரும் மண்டியிட்டு வணங்கி, "ஆண் டவனே! கதிர்களே இல்லாமல் செய்து விட்டால் எப்படி? நாங்கள் தகுதியற் றவர்கள்தான்; ஆனால் பறவைகளுக் காகவாவது பயிர்களில் சின்னஞ்சிறு கதிர்கள் இருக்க அருள் செய்ய வேண் டும். இல்லையென்றால் பறவைகள் பட்டினி கிடந்து செத்துப் போகுமே" என்று பிரலாபித்தார்கள். கடவுளும் மனம் இரங்கி அவர்களுடைய கோரிக் கையை நிறைவேற்றினர். அன்று முதல் இன்று வரை தானியக் கதிர்கள் இப்பொழுது இருப்பது போலவே சின்னஞ் சிறியனவாகவே இருந்து வருகின்றன. ★

பொருளின் சக்தி

"எவனுக்குப் பொருள் இருக்கிறதோ அவனுக்கு சிநேகிதர்கள் உண்டு; எவ னுக்குப் பொருள் இருக்கிறதோ அவனுக்குப் பந்துக்கள் உண்டு; எவனுக்குப்பொருளி ருக்கிறதோ அவனே உலகத்தில் புருஷன்; எவனுக்குப் பொருளிருக்கிறதோ அவனே வித்துவான்; பொருளாசையுடையவனுக்கு பொருளின்றி பொருள்சம்பாதிக்கமுடியாது. யானைகளால் பெரியயானைகள் கட்டப்படுவதைப் போலப் பொருள்களால் பொருள்கள் கட்டப்பகின்றன"

— தர்மபுத்திரருக்கு, அர்ஜுனன் கூறியது,
மகாபாரதம் — சாந்திபர்வம்

தாய்மொழியும் கல்வியும்

நம்முடைய இளைஞர்களுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்புள்ளவர்கள், சற்று மனம் வைத்து யோசித்துப் பார்த்தால், குழந்தையின் உடல் வளர்ச்சிக்குத் தாய்ப்பால் எப்படியோ அப்படி மனிதன் மன வளர்ச்சிக்குத் தாய் மொழியே இயற்கையானது என்பதை உணர்வார்கள். வேறெப்படி இருக்க முடியும்? குழந்தை தன் முதல் பாடத் தை கற்பது தாயிடமிருந்துதானே? ஆகவே குழந்தைகளின் உள வளர்ச்சிக்குத் தாய் மொழியல்லாத வேறொரு மொழியை அவர்கள் மேல் திணிப்பது தாய் நாட்டிற்குச் செய்யும் பெரிய பாபம் என்றே நினைக்கிறேன்.

— காந்தியடிகள்

நிலப் பிரச்னை

சி. எஸ். சுப்பிரமணியம்

நிலம் மனித வாழ்வுக்கு இன்றியமையாத அடிப்படை இயற்கை ஸ்தாபனம். மனிதன் நடமாடி ஜீவிப்பதும் அதன் மூலமேதான். அவனுடைய உணவுப் பொருள்களின் உற்பத்தி, அடிப்படையான வர்த்தகப் பொருள்களின் உற்பத்தி, அவனுடைய வாழ்க்கையை நடத்தும் வீடு. தொழில்களைச் செய்யும் தொழிற்சாலைகள். இவை அனைத்தும் நிலத்திலேதான். ஆகவே இந்த நிலம் எப்படி இருக்கின்றது, யாருடைய கையில், யாருடைய உடைமையாக இருக்கின்றது, அதில் யார் யாருக்கு என்ன உரிமை என்பதெல்லாம் ஒரு சமூகத்தின் அமைப்புக்கும், அதன் வளர்ச்சிக்கும் தாழ்வுக்கும் மிக முக்கியமான விஷயம்.

அந்நிய ஆட்சிக் காலத்தில் நம் நாட்டில் நமது மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களில் நிலவுடைமையினாலும் நிலவுரிமையினாலும் ஏற்பட்ட துயர் ஒன்று. குறிப்பாக விவசாய மக்களுக்கு ஏற்பட்டிருந்த நிலையற்ற வாழ்க்கைக்கும், அவர்களிடையே வளர்ந்து வந்து கொண்டிருந்த வறுமைக்கும் அந்நியருடைய ஆட்சி முறையும் அது ஏற்படுத்திப் பாதுகாத்து வந்த சமூக அமைப்பு முறையும் முக்கியமாயிருந்தது. அந்நிய ஆட்சியை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டமும் கணிசமான அளவுக்கு சக்தி பெற்று, ஒரு பொதுஜன இயக்கமாக எப்பொழுது மாறியதென்று பார்த்தால், அந்த விவசாய மக்களுடைய குறைகளை எடுத்துரைத்துப் போராட ஆரம்பித்த காலத்திலேதான் என்று தெரியும். காங்கிரஸ் ஸ்தாபனமும் கூட விவசாயிகளுடைய நிலைமையைச் சீர்படுத்த வேண்டுமென்று உணர்வு கொண்டே அதனுடைய கராச்சித் தீர்மானத்தில் வகுத்த அடிப்படை வேலைத் திட்டத்தில் விவசாயிகளின் உரிமைகளுக்கும் ஒரு முக்கிய இடத்தையளித்தது. அதன் பின்னர் பைஸ்பூரில் 1937-ல் நடந்த மகாநாட்டில் விவசாயிகளுக்கு வேண்டிய அத்யாவசியமான உரிமைகளைக் குறிப்பிட்டு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிற்று. அந்தத் தீர்மானத்தில் பழங்காலத்திலிருந்து நீடித்து வந்து பாதுகாக்கப்பட்டு வந்த ஜமீன்தாரி முறைச் சுரண்டல்களை ஒழிப்பது, நிலவரி முறையை ஏழை விவசாயிகளுக்குச் சாதகமாகத் திருத்துவது, வார பாத்தியதைகளை நியாயமாக மாற்றி அமைப்பது, விவசாயத் தொழிலாளிகளுக்கு ஜீவிப்பதற்கு வேண்டிய சம்பளத்தையும் வேலையையும் உத்திரவாதம் செய்வது போன்ற கோரிக்கைகள் அடங்கியிருந்தது. 1949-ல் நில உடைமையிலேயே மாறுபாடுகள் என்ன செய்ய வேண்டுமென்பதை ஆராய ஒரு கமிட்டியும் ஏற்படுத்தப்பட்டது.

> முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பி வாழும் நாடு இந்நாடு. நிலப் பிரச்னை மக்களின் அன்றாட வாழ்வுடன் பின்னிப் பிணைந்து இருக்கிறது. இங்கே இப்பிரச்னையை சரியானபடி தீர்க்காத வரை இந்நாட்டின் முன்னேற்றம் என்பது வெறும் பகற்கனவே யாகும். ஜீவாதாரமான இந்நிலப் பிரச்னையைப் பற்றி ஆராய்கிறது இக்கட்டுரை.

பிரதானமான அரசியல் ஸ்தாபனமாகிய காங்கிரஸ் வளர்ச்சியிலே இந்த அம்சங்களைக் காணும் பொழுது நாம் மற்றொரு விஷயத்தையும் இந்த வளர்ச்சிக்கே காரணமாயிருந்த விஷயத்தையும் கவனிக்க வேண்டும். அதுதான் விவசாயிகள் முதலில் ஆங்காங்கு ஏற்படுத்திக்கொண்ட உரிமைப் போராட்ட ஸ்தாபனங்கள். அவை பின்னர் அகில இந்திய ஸ்தாபனமாகச் சேர்ந்து இயங்குவதற்கு ஆரம்பித்தது. ஜமீன்தாரி முறையை ஒழிக்க வேண்டும் என்று ஜமீன்தாரி ஒழிப்பு இயக்கம், விவசாயக் கூலிகளின் நிலைமையை உயர்த்த வேண்டுமென்ற விவசாயத் தொழிலாளிகளுடைய போராட்டங்கள், நிலவரி விதிப்பதிலுள்ள அநீதிகளையும் அது கடுமையாக சுமை ஏற்றுவதையும் எதிர்த்து நடந்த கிளர்ச்சிகள், விவசாயிகள் மீது மலைபோல் வளர்ந்து வந்த கடன் சுமையைக் குறைப்பதற்கு நடந்த கிளர்ச்சிகள், ஜமீன்தாரிகளல்லாது பெரிய

பெரிய நிலச் சொந்தக்காரர்கள் நீடித்து வரும், கண்ணை உறுத்தும் ஏற்றத் தாழ்வுகளை எடுத்துக் காட்டும் முறையீடுகள்—இவை அனைத்தும் விவசாயிகள் தங்களுடையதென்ற ஒரு ஸ்தாபன அமைப்பைக் கொண்டு நடத்தி வருவதற்கு ஆரம்பித்தனர். அனுபவித்துவந்த இந்த உருப்படியான அநீதங்களை விவசாயிகளே திட்டவட்டமாக முன்னெடுத்து வைப்பதற்கு முடிந்தது.

இந்தக் காலத்தில் முன் வந்த பல பிரச்னைகளில் இன்று முக்கியமாக முன் வந்துள்ள பிரச்னை நில உடமைக்கு ஒரு அதிகபட்ச அளவு ஏற்படுத்த வேண்டுமா என்பது. மற்ற பிரச்னைகள் ஒன்றும் தீரவில்லை. ஜமீன்தாரிகள் தான் சட்டபூர்வமாக, அதுவும் கூட எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்திற்கு நஷ்டஈடுடன்-ஒழிக்கப் பட்டிருக்கின்றன. இந்த ஜமீன் ஒழிப்புச் சட்டங்களால் அங்குள்ள விவசாயக் குடிகளின் நிலைமை அபிவிருத்தி அடைந்து விட்டதாகவோ அபிவிருத்தி அடைவதற்கான-அஸ்திவாரம் ஏற்பட்டிருப்பதாகவோ ஒன்றும் தெரியவில்லை.

நாட்டின் அபிவிருத்திக்காக இந்நாட்டு மத்திய சர்க்கார் ஏற்படுத்திய திட்டக் கமிஷன் அதனுடைய ரிப்போர்ட்டில் நாட்டின் அபிவிருத்திக்காக வகுத்துள்ள திட்டங்கள் சரிவர நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் நில உடமை முறை பரிசீலனை செய்யப்பட்டு, அதில் மாறுபாடுகள் செய்ய வேண்டுமென்று கூறிற்று. குறிப்பாக ஒரு நபர் அதிகப்பட்சமாக எவ்வளவு நிலம் வைத்துக் கொள்வதற்கு அனுமதிக்கப் படலாம் என்பதை நிர்ணயித்து, ஒரு நபருடைய நில உடைமைக்கு ஒரு வரப்பு கட்ட வேண்டுமென்றனர். ஆக்ராவில் கூடிய அ. இ. காங்கிரஸ் கமிட்டியும் இது பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றிற்று. அவ்வாறு வரம்பு கட்டுவது உசிதமல்லவென்று மத்திய விவசாய மந்திரியே சமீபத்தில் கூறிவிட்டார். இப்படி வரம்பு கட்ட வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றி ஒரு சர்ச்சை ஆரம்பித்து விட்டது. இதனால் ஏற்படும் விளைவு என்னவென்றால் அவசரமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டிய பற்பல பிரச்னைகளனைத்தும் மறுக்கப்பட்டு, இந்த ஒரு விஷயத்தைப் பற்றிய தர்க்கம் அதிகரித்து வருகின்றது. உடைமைப் பிரச்னை மிக முக்கியமானதுதான். மிகப் பெரிய நிலப்பிரபுக்களை தங்களுடைய சொந்த உடமையாக வைத்துக்கொண்டு ஆதிக்கம் செலுத்தும் நிலச்சுவான்தார்களுடைய உடமைக்கு வரம்பு கட்டுவதற்காகப் போராட வேண்டுமென்பதோடு பெரும்பாலான விவசாயிகளைப் பாதித்துவரும் இதர பிரச்னைகளையும்—கடன் சுமையை ஒழிப்பது, வரிச் சுமையை ஒழிப்பது, வாரம் குத்தகை ஆகியவற்றின் அநீதிகளை ஒழிப்பது, நிலமற்ற விவசாயத் தொழிலாளிகளாக நின்று, மிகக் குறைந்த ஊதியத்திற்கு ஊழியம் செய்யும் நிலைமையிலிருக்கும் லக்ஷக்கணக்கானவர்களுக்கு நியாயமானதும் வாழ்க்கை நடத்துவதற்கு உத்திரவாதமளிப்பதுமான கூலிகளை ஏற்படுத்துவது இவற்றையும்—கவனிக்க வேண்டியது அவசியம்.

நம்முடைய சென்னை இராஜ்ஜியத்தை எடுத்துக் கொண்டால் (இந்தப் புள்ளி விவரங்கள் ஆந்திர இராஜ்ஜியம் பிரிவதற்கு முன்னிருந்த இராஜ்ஜியத்தின் புள்ளி விவரங்கள்) 3 கோடி 70 லட்சம் விவசாய ஜனத்தொகையில் 1 கோடி 54 லட்சம் நபர்கள் அறவே நிலமில்லாதவர்கள். நிலமுடையவர்களில் 51 சதவிகித்தவர்—சுமார் 1 கோடி 18 லட்சம் நபர்கள் சராசரி 2 ஏக்கருக்கு குறைவான நிலத்தை உடையவர்கள். விவசாய ஜனத்தொகை என்று கணக்கிடப்பட்டவர்களில் மூன்றில் 2 பங்குக்கு மேற்பட்டவர்கள் மிகவும் கேவலமான நிரந்தரமற்ற நிலைமையில் இருப்பவர்கள். 100 ஏக்கராவுக்கு மேற்பட்ட நிலத்தை உடையவர்களின் எண்ணிக்கை சுமார் 11,000 என்று சமீபத்தில் வெளியான ஒரு புள்ளி விவரம் கூறுகின்றது.

நில உடைமையில் இந்த ஏற்றத் தாழ்வுகள் ஒருபுறமிருக்க நிலத்தைப் பண்படுத்திச் சாகுபடி செய்வதில் மிகப் பெரிய அநீதிகள் இருக்கின்றன. பெரிய நிலப் பரப்பை உடையவர்கள் பெரும்பாலோர் தங்களுடைய நிலத்தில் பெரும் பகுதியை குத்தகைக்கோ வாரத்துக்கோ கொடுத்து விடுகின்றனர். ஒரு சிலர் விவசாயத்தில் எந்த வகையிலும் ஈடுபடுவதே கிடையாது. அவர்கள் வாங்கும் குத்தகையோ,—(குத்தகை ஒரு ஏக்கருக்கு இவ்வளவு ரூபாய் ரொக்கமாகக் கொடுப்பது என்றும், அல்லது இவ்வளவு தானியம் கறாராகக் கொடுப்பது என்ற முறை) வாரமோ—(விளைந்ததில் ஒரு பங்கை உழுபவனும், ஒரு பங்கை நிலச் சொந்தக்காரனுமாக எடுத்துக் கொள்ளும் முறை) உண்மையில் பாடுபடுபவனை ஓட்டாண்டியாக்கிக் கொண்டு வருகின்றது.—(அவன் ஏற்கனவே ஓட்டாண்டியாக இல்லாவிட்டால்!)

இதற்கு ஒரு புள்ளி விவரத்தைக் கண்டால் போதும். குத்தகைக்கோ வாரத்துக்கோ எடுத்துச் சாகுபடி செய்பவர்களில் பெரும்பாலோர் நிலம் இல்லாதவர்களாகவோ அல்லது 5 ஏக்கராவுக்கும் குறைந்த அளவு நிலமுடையவர்களாகவோ தான் இருக்கின்றனர். 1935-ல் W. R. S. சத்தியநாதன் என்ற அதிகாரி நடத்திய விவசாயிகள் கடன் சுமை ஆராய்ச்சியில் 100 ரூபாய்க்குக் குறைவாக கிஸ்தி செலுத்துவோரின் கடன் சுமையையும் ரூ. 100-க்கு மேற்கொண்டு கிஸ்தி செலுத்துவோர் கடன் சுமையையும் கணக்கெடுத்துப் பார்த்ததில் ரூ. 100-க்குக் குறைவாக கிஸ்தி செலுத்துபவன் ஒவ்வொரு ரூபாய் கிஸ்திக்கும் ரூ. 29 கடன் பட்டிருக்கிறானென்றும், ரூ. 100-க்கு மேற்பட்ட கிஸ்தி செலுத்துபவன் ரூ. 8 தான் கடன் பட்டிருக்கிறான் என்றும் கூறுகிறார். ஆகவே சிறு விவசாயிகளின் மீது கடன் சுமை மிக அதிகமாயிருந்தது என்று தெரியவருகிறது.

1945-ல் எடுக்கப்பட்ட ஒரு கணக்கின்படி 1945-ல் குத்தகைதார்கள் விவசாயத் தொழிலாளிகள் ஆகியோருடைய கடன் சுமை 1939-ல் இருந்ததைவிட 4 சதவிகிதமும் அதிகரித்திருந்தது என்றும், நிலமுடைய விவசாயிகளின் கடன் 1939-ல் இருந்ததிலிருந்து 40 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதம் வரை குறைந்திருந்தது என்றும் கூறுகிறார். டாக்டர் பி. வி. நாயுடு. ஆகவே யுத்த காலத்து விலையுயர்வினால் ஏற்பட்ட லாபம் பெரிய நிலச் சொந்தக்காரர்களுக்குத் தான் என்பது தெளிவாகின்றது. நிலத்தில் பாடுபட்டு உழைப்பவனுக்கு உட்கார்ந்த இடத்திலே லாபம்!!

அதனால்தான் குத்தகை, வாரம் ஆகியவற்றில் உடனடியான மாறுபாடுகள் வேண்டும் என்ற பிரச்னை மிக முக்கியமாகின்றது. 1947-ல் சர்க்கார் அதிகாரி சேகரித்துள்ள தகவல்களின்படி இந்த இராஜ்ஜியத்தின் பெரும் பகுதியில் நிலச் சொந்தக்காரருக்கு மூன்றில் இரண்டு பங்கும், சாகுபடியாளனுக்து மூன்றில் ஒரு பங்கும்தான் கிடைக்கின்றது என்று கூறுகிறார். சில இடங்களில் நிலச் சொந்தக்காரனின் பங்கு இதற்கும் அதிகமாகவும் இருக்கின்றது. சிற்சில இடங்களில் குறைவாகவும் இருக்கலாம். நிலத்தின் தரத்தைப் பொருத்திருக்கும் இந்த ஏற்பாடு.

குத்தகை, வார ஏற்பாட்டில் மாறுபாடு செய்வதைப் பற்றிய சிபார்சுகளைப் பார்ப்போம். 1947-ம் வருஷத்து ரிப்போர்ட்டில் குத்தகைதாருக்கு 45 சதவிகிதம்—(நல்ல நிலங்களில்)— மற்ற சாதாரண நிலங்களில் 50 சதவிகிதம்— தரலாம் என்று கூறப்பட்டது. 1950-ல் ஏற்படுத்திய சுப்ரமணியம் கமிட்டி நிலச் சொங்கக்காரருடைய பங்கை 40 சதவிகிதமாக்க வேண்டும் என்று சிபார்சு செய்தது. தஞ்சைச் சட்டத்தில் குத்தகைதார் பங்கை 40 சதவிகிதமெனப் குறிப்பிடப்பட்டது!

நிலச் சாகுபடி செய்வதில் உழுபவன் பங்கு என்ன என்பதிலேயே இன்னும் சரியான முடிவு ஏற்படவில்லை. இதைத் தவிர குடியானவன் சாகுபடி செய்து வாழலாம் என்ற உத்திரவாதமில்லாத ஒரு குத்தகை முறை. நிலச் சொந்தக்காரன் இஷ்டப்பட்டால் நிலத்தை ஒரு குத்தகைதாரனிடமிருந்து எடுத்துக் கொண்டுவிடுவது போன்ற தொல்லைகள்.

குத்தகைதாரின் பங்கு உயர்த்தப்பட வேண்டும் என்று கேட்கும்போது நிலச் சொந்தக்காரன்தான் நிலத்தைப் பண்படுத்தக்கூடிய வசதியுடையவன். அதற்கு வேண்டிய முதலீடு செய்யக் கூடியவன், என்றெல்லாம் கூறி அந்தக் கோரிக்கை எதிர்க்கப்படுகின்றது. இந்த எதிர்ப்பை ஆராய்ந்தால் கிராமப்புற அமைப்பிலுள்ள மற்றொரு அம்சம் தெளிவாகும். குத்தகைக்காரன் பங்கு இப்படியே இருந்தால் அவன் கடன்பட்டவனாகவே இருந்து வரவேண்டியதுதான். கிராமப் புறங்களில் கடன் கொடுக்கும் பேர்வழிகளே லேவாதேவிக்காரர்களும், இந்தப் பெரிய நிலச்சுவான்தார்களும் தான். நிலத்தை உழுபவனுடைய பங்கை உயர்த்தி, அவன் சாகுபடி செய்வதற்கும் உயிர் வாழ்வதற்கும் அவசியமாயிருக்கும் பண வசதியை அரசாங்கமே ஏற்படுத்திக் கொடுத்தால் கிராமப்புற அமைப்பிலுள்ள சுரண்டல் அம்சங்களிலொன்று விரைவிலே மறைந்துவிடக்கூடும். ஆகவே கடன் சுமை அதிகரித்து வரும் குத்தகைதார், சிறு விவசாயிகள், நிலமற்ற விவசாயிகளுடைய கடன்களை ஒழித்து, அவர்களுக்கு வேண்டிய பண உதவியை அரசாங்கமே கொடுக்க முன்வர வேண்டும். கடைசியாக விவசாயத் தொழிலாளிகள் பிரச்னை அவர்கள் வசிப்பதற்கு நிரந்தரமான மனைக்கட்டு வசதிகள். உத்திரவாதமான வேலை, கூலி, அவர்கள் விவசாய வேலைக்கு வைத்துக் கொள்ளப்படுவதில் மற்ற வேலைகளை நிலச் சொந்தக்காரனுக்கும் தன்னை அமர்த்திக் கொள்

பவனுக்கும் செய்ய வேண்டிய இதர தொண்டுகள் ஆகியவற்றையும் கவனித்து மாற்றவேண்டும். ஏனெனில் சாகுபடி செய்வதில் மிக அவசியமான உழைப்பு இந்த விவசாயத் தொழிலாளிகளிடமிருந்துதான் வருகின்றது.

குத்தகைதாரின் பங்கு, விவசாயத் தொழிலாளர்களுடைய கூலி, வேலை உத்திரவாதம் இவற்றைத் தவிர நிலப் பிரச்னையைப் பற்றிய விஷயங்களில் இன்றுள்ள வரி முறையையும் மாற்றியாக வேண்டும். வரி விதிப்பதிலும், பாசன வரி, அபிவிருத்தி வரி ஆகியவை விதித்து வசூலிப்பதிலும் (குறிப்பாகப் புதிய நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ள ஜமீன்தாரி நிலங்கள் சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள இடங்களிலும் சாதாரண விவசாயிகள் பெரிய புள்ளிகளின் அளவுக்கு அதே விகிதத்தில் ஒவ்வொரு ஏக்கருக்கும் வரி செலுத்துகின்ற முறை மாற்றப்பட வேண்டும்.

ஜமீன்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்காக லக்ஷக்கணக்கான ரூபாய்களுக்கு ஏற்பாடு செய்யும் நிலையிலிருக்கும்போது நில வரியைக் குறைப்பது, அந்த முறையை மாற்றி அமைப்பது என்பது அசாத்தியமானதாகத்தான் சர்க்காருக்குத் தோன்றும். அது போலவே அதிகபட்சநில உடைமையை ஏற்படுத்திவிட்டால், உபரி நிலத்தை எடுத்துக் கொள்ளும்பொழுது அந்த நிலச்சுவான்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்ற ஒரு வாதமும் குறுக்கே கொண்டு வரப்படும். ஆகவே நிலங்களையும் உற்பத்தி சாதனங்களையும் சர்க்கார் எடுத்துக் கொள்ளும் போது நஷ்ட ஈடு தரப்பட வேண்டுமா என்ற அடிப்படை பிரச்னையும் மீண்டும் நன்கு ஆலோசனை செய்யப்பட வேண்டும்.

உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள் இவை. கூட்டுப்பண்ணைகளை ஏற்படுத்துவது கூட்டுறவுப் பண்ணைகள் நடத்துவது போன்ற விஷயங்களையும் கவனிக்க வேண்டும். ஆனாலும் மேலே கூறப்பட்ட பிரச்னைகளில் தீர்வு காண்பதற்கு முயர்சி செய்யாமல் நாடு முன்னேற்றமடைவது, நாட்டு மக்கள் விவசாயக் குடிகள் உய்வித்து உயிர் வாழ்ந்து உயர்வதோ சாத்தியப்படாது.*

★

வாழ்க்கை முறை

தென்னிந்தியாவில் பிரதான உணவாக அரிசியைக் கொள்வது பொருத்தம்தான். ஆனால் இது தீட்டாத அரிசியாக இருக்க வேண்டும். இதைப் பால், பருப்பு, காய்கறி, எண்ணெய் போன்றவற்றுடன் கலந்து சமநிலையாக்க வேண்டும். இங்கு சீதோஷ்ண ரீதியாக விஶேசமான உடை எதுவும் தேவையிருக்காது. காலுக்கு மிகுதியடி தேவை இருக்காது. படுக்க ஒரு கோரைப்பாய் இருந்தால் போதும். ஆனால், வட நாட்டிலே, உணவில் கோதுமை பிரதான இடம் வகிக்கும். இதைச் சமநிலை சொய்வதற்கு மற்றப் பொருள்கள் தேவை. அங்கு கடும் குளிர் இருப்பதால் இன்னும் அதிக உடை வேண்டும். காலுக்கு மிதியடியும், படுக்கக் கட்டிலும் தேவை. ஆகவே ஓரிடத்தில் அவசியமானது மற்றோரிடத்துக்கு அதிகப்படியாக இருக்கும். ஆகையால் பிரதேச நிலைமைகளையும் சூழ் நிலையையும் தொடர்பு படுத்தி வாழ்க்கை முறையை நிர்ணயிப்பது அவசியமாகும்.

—டாக்டர் ஜே ஸி குமரப்பா

அரசின் மாறுதல்

மிகவும் பழைய காலத்தில், மக்களுக்கு அரசர்கள் இருக்கிறார்களென்றே தெரியாமல் இருந்து வந்தது. அதற்குச் சிறிது காலம் கழித்து மக்கள் அரசர்களின் மீது பிரியம் கொண்டு அவர்களைப் பாராட்டினார்கள். அதற்குப் பிறகு அவர்கள் அரசர்களுக்குப் பயந்தார்கள். பின்னால் அரசர்களை அவர்கள் வெறுக்கத் தொடங்கி விட்டார்கள்.

—சீன ஞானி லவோத்சே

நிலத்தின் வாழ்வு

வித்துவான் மு. சண்முகம் பிள்ளை

நிலம் என்ன ஓர் உயிருடைய பொருளா? அதற்குப் பிற உயிர்களைப் போல வாழ இயலுமா? அதற்கு எனத் தனிப்பட்ட வாழ்வு உண்டா? என்னும் ஐயங்கள் தோன்றுதல் இயல்பே. இயற்கையின் அற்புத சக்தியிலே புதுப்புது நிலப் பகுதிகள் தோன்றுவதும், முன்புள்ள நிலப்பகுதிகளில் சில அழிந்து போவதும் அநாதி காலம் முதல் நடைபெற்று வருகின்றன.

ஒரு காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய காவிரிப்பூம் பட்டினம், தொண்டி, கொற்கை, முசிறி முதலிய பண்டைத்தமிழ் நாட்டுத் துறைமுகங்கள் இருந்த சுவடும் தெரிய இயலாத நிலையில் மறைந்து போய் விட்டன. பரதவர் குடியிருப்பாயிருந்த ஒரு சிறு குப்பம் சென்னை என்ற பெயருடன் இன்று மிகப்பெரிய நகரமாக வளர்ந்து விட்டது. சிலப்பதிகார காவியத்திலிருந்து பழைய காவிரிப்பூம் பட்டினத்தை நம் மனக்கண் முன் கண்டு களிக்கிறோம். அந்நகரின் கடற்கரையில் கலங்கரை விளக்கமும், பண்டக சாலைகளும், கடைவீதிகளும் விளங்கிய மாட்சியும், நகரின் உட்பகுதியிலே அந்தணர், அரசர் முதலியோர் வசித்த தெருக்கள் அணியணியாக விளங்கியதையும் காண்கிறோம். இக்காட்சிகளை இன்றைய சென்னைநகரிலும் கண்கூடாகக் காண்கிறோம். அன்றிருந்த காவிரிப்பூம் பட்டினத்தின் வாழ்வு முடிந்து விட்டது. சென்னையோ இன்று வாழ்வு பெருகி விளங்குகிறது. இது இயற்கை செய்யும் பெருவிந்தை அல்லவா?

எழுநிலை மாடம் கால்சாய்ந்து உக்கு
கழுதை மேய்பாழ் ஆயினும் ஆகும்.
பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் சிறந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.†

"ஒரு நாட்டின் வாழ்வும் தன தான்யங்களால் அல்ல, தனக்கென வாழா' ரக்கென வாழும் பெரியோர்கள் வாழ்வதால் தான்"

என்று அரசகவிஞர் அதிவீரராம பாண்டியர் நிலத்தின் வாழ்வையும் தாழ்வையும் நமக்குக் காட்டுகிறார்.

இவ்வாறாக, நிலத்தை நாம் உயிரற்ற பொருள் என்று சொல்ல முடியுமா? எண்ணற்ற ஜீவராசிகளையும் அவைகளெல்லாம் வாழ்வதற்கு வேண்டிய வளங்களையும் தன்னிடத்தே அது கொண்டிருக்கிறது. இவை மட்டுமா? இந்தப் பொருள்களிலெல்லாம் சிறந்த அறிவு பெற்ற மனித சமுதாயமும் இந் நிலத்தில் வாழ்கிறது. சில பகுதிகளிலே மனிதர்கள் மிகுதியாக வாழ்கிறார்கள்; சில பிரதேசங்களிலே மனிதர்கள் மிகக் குறைந்த தொகையினராயுள்ளனர்; இன்னும் சில பகுதிகளிலே மனிதப்பூண்டே இல்லை. வளமற்றதும் மனித இனத்தார் மிகுதியாய் இல்லாததுமான பாலை நிலத்தை வாழும் நிலம் என்று சொல்ல முடியுமா? குளிர் மிகுந்த துருவப்பிரதேசத்தையோ, அங்கு வாழும் சில பூர்விக மக்களையோ நாம் கனவில்கூட எண்ணுகிறோமா? நவ நாகரிகத்தில் மிகச் சிறந்து செல்வத்தில் திளைத்து விளையாடும் அமெரிக்க நாட்டை வாழும் நிலம் என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனால் அவர்களுடைய செல்வம் உலகை நிர்மூலமாகச் செய்யும் நாசகாரிகளுக்குப் பயன்படுமானால், அவர்களை நாம் உலகம் வாழ வழி தேடுபவர்கள் என்று எண்ணமாட்டோம்.

செல்வச் செழிப்பு ஒரு நாட்டின் நல் வாழ்வுக்கும், மக்களின் உயர்வுக்கும் காரணம் தான். ஆனால், அது மட்டும் போதியதன்று. விளைவுகளும் பிறபொருள்களும் மிகுந்திருப்பது போலவே, ஒரு நாடு நல்ல அரசையும் ஞான ஒழுக்கங்களிலே சிறந்த பெரியோர்களையும் பெற்றிருக்க வேண்டும். நாட்டு மக்களை நன்னெறிச் செலுத்தவல்ல நல்லோர்களும் நல்ல அரசாட்சியும் நிலவும் நாடே நல்வாழ்வு பெற்றுள்ள நாடாம். 'நெல் வளம், நீர்வளம் முதலியன வெல்லாம் நிலத்திற்கு உயிராக மாட்டா; அரசனே உயிராக விளங்குகிறான்' என்கிறார் மோசிகீரனார் என்ற பழம் புலவர்.

† உக்கு - அழிந்து; பெற்றம் - மாடு.

நெல்லும் உயிர் அன்றே ;
நீரும் உயிர் அன்றே ;
மன்னன் உயிர்த்தே
மலர்தலை உலகம்.† (புறம்-186)

என்பது அவர் வாக்கு. இயற்கை தரும் செல்வங்களை யெல்லாம் சீரிய முறையில் பெற்று, மக்களை நல்வாழ்வு வாழ வழி காட்டும் அரசனது செங்கோலாட்சி ஒரு நாட்டிற்கு மிகமிகத் தேவை. நீதி மன்னரைப் போன்றே நெறிதவறாப் பெரியோர்களும் ஒருநாட்டின் நல்வாழ்வுக்கு இன்றியமையாதவர்களாவர்.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு (குறள். 731)

என்கிறார் வள்ளுவர். 'குறையாத விளைவும், அறமுணர்ந்த பெரியோர்களும், பொருள்வளம் நிறைந்த செல்வர்களும் கூடி வாழ்வதேநாடு' என்பது இதன் பொருள். உலகியல் சீர்பெற நடைபெறுவது அறமுணர்ந்த பெரியோர்களால் தான். இத்தகைய பெரியோர்கள் இல்லையென்றால் உலகியல் சிறப்புற நடைபெறாது. அது மட்டுமல்ல, அந்நிலமே வாழ்விழந்து மாய்ந்துபோம் என்று வள்ளுவரே,

பண்புடையார் பட்டுண்டு உலகம் ;
—அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்
(குறள். 996)

என்னும் இக்குறளில் எடுத்துக் காட்டுகிறார். ஆகவே எல்லா வளங்களை விடவும் அறவொழுக்கங்களில் சிறந்த ஆன்றோர்கள் நிலத்தின் வாழ்வுக்கு மூலகாரணமாயுள்ளார்கள். இப்பெரியார் வாழ்கின்ற நிலம் வளம் குறைந்ததாயினும் அது வாழும் நிலமாக அமையும். நல்ல தருமவான்கள் வாழும் இடம் நாடாயிருந்தாலும் சரி, காடாயிருந்தாலும் சரி; அல்லது பள்ளமாயிருந்தாலும் மேடாயிருந்தாலும் குற்றமில்லை; அந்த நிலம்தான் நல்ல நிலம்; வாழும் நிலம். இக்கருத்தை ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்று தெளிவுற விளக்கிக் காட்டுகிறது. பாடல் பின்வருமாறு;

நாடா கொன்றோ ; காடா கொன்றோ ;
அவலா கொன்றோ ; மிசையா கொன்றோ ;
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே ‡
(புறம்–181)

இப்பாடலில் ஔவையார் அறிவுறுத்தியதுபோன்றே, புத்தர் பிரானும் உலகிற்கு உபதேசம் செய்திருக்கிறார். புத்தரது அருள்மொழிகளின் தொகுப்பாகவுள்ள 'தம்ம பதம்' என்ற நூலிலே வரும் 98-வது சூத்திரம்,

> அருகத்துக்கள் (முனிவர்கள்) எங்கே வசிக்கிறார்களோ அது நாடாயினும் காடாயினும், பள்ளமாயினும் மேட்டுநிலமாயினும் அதுவே ரமணீயமான இடம்'

என்று தெரிவிக்கிறது. மிகமிகப் பழங்காலந்தொட்டே, 'ஒரு நிலத்தின் வாழ்வு தனதானியங்களால் அல்ல; தக்க பெரியோர் உறைவதால் தான்' என்ற கொள்கை, நம் பாரத நாட்டில் வேரூன்றி வந்துள்ளமை, வடநாட்டில் வாழ்ந்த புத்தரது பொன் மொழியாலும் தென்னாட்டில் வாழ்ந்த ஔவையாரின் அமுத மொழிகளாலும் தெளியலாம்.

அறமுணர்ந்தபெரியோர்கள்எவ்வாறு உலகை வாழ்விக்கிறார்கள்? அவர்கள் தமக்காக உலகில் வாழ்பவர்களல்லர். உலகிலுள்ள அனைவரையும் நல்வழிப்படுத்தி, இந்த வையகத்தையே வாழ வைக்கப் பிறந்தவர்கள். புத்தர், விவேகானந்தர், காந்தி மகான் போன்ற பெரியோர்கள் தமக்காகவே வாழவில்லை. தங்கள் தாய் நாட்டின் சமுதாயத்தை முன்னேற்றுவதற்காக மட்டும் அல்ல, உலக சமுதாயத்தையே முன்னேற்றுவதற்காக வாழ்ந்து வழிகாட்டியவர்களாவர். இவ்வாறு ஆன்றோர்கள் செய்து காட்டிய சமூக சேவையின் உயர்வையும் பழங்காலத் தமிழ் மக்கள் உணர்ந்து ஒழுகினார்கள் என்பதைப் பின் வரும் புறநானூற்றுப் பாடலிலே பார்க்கலாம்.

உண்டால் அம்ம ! இவ் வுலகம் ; இந்திரர்
அமிழ்தம் இயை வதாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே ; முனிவிலர் ;
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சி;
புகழெனின் உயிரும் கொடுக்குவர் ;
பழியெனின்,
உலகுடன் பெறினும் கொள்ளலர் ;
அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.||
(புறம். 182)

† உயிர்த்தே - உயிராகவுடையது.
‡ மலர் தலை உலகம் - விரிந்து பரந்தநிலப் பரப்புடைய பூமி
|| அவல் - பள்ளம்

என்னும் இப்பாடலைப் பாடியவர் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் பாண்டிய மன்னர்.

இந்த உலகம் உளதாயிருக்கிறது; எதனால், யாரால், தெரியுமா? தமக்கு என வாழாது பிறருக்காகத் தம் வாழ்வை அர்ப்பணம் செய்துள்ள சிரியோர்களால் தான் உலகம் நிலைபெற்று வாழ்கிறது. இவர்கள் சாவை நீக்கும் தேவாமிருதம் கிட்டினுல் கூட, கிடைத்தற்கு அருமையான பொருளாயிற்றே என்று தாம் மட்டும் உண்ணுர். 'மருந்தேயாயினும் விருந்தோடு உண்க' என்ற நெறிப்படி விருந்தினர்க்குக் கொடுத்து உபசரித்துப் பின்னரே தாம் உண்பர். யாரோடும் இவர்கள் வெறுப்புக் கொள்ள மாட்டார்கள். பிறர் அஞ்சத்தகும் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி, அது தீர்க்க முற்படாது சோம்பியிரார். புகழுக்குக் காரணமான நிகழ்ச்சியானுல்தம் உயிரையும் கொடுத்து விடுவர். ஆனல், தமக்குப் பழிவரும் செயலாயிருந்தால், இந்த உலகம் முழுமையும் ஒரு சேரக் கொடுத்தாலும் அதனை மேற் கொள்ளமாட்டார்கள். இவர் என்றும் மனக்கவற்சியில்லாதவராயிருப்பர். தமக்கென முயன்று தொழில் புரியும் முயற்சியின்றிப் பிறர் பொருட்டாக முயன்று அருந்தொண்டு புரிவர். இத்தகைய இயல்புடையார் பலர் இவ்வுலகிலே உள்ளார்கள். அதனுல் தான் இந்நிலம் வாழ்கிறது என்பது இப்புறப் பாட்டின் உள்ளுறை பொருள்.

நமது பாரத நாட்டில் உலகிற்கு உண்மை நெறி காட்ட எண்ணிறந்த மகான்கள் தோன்றி வாழ்ந்து நமக்கு வழி காட்டிச் சென்றிருக்கிருர்கள். அவர்களது அடிச்சுவட்டிலே நாமும் செல்வோம். அப்பொழுது தான் நாமும் வாழ்வோம். நாம் மட்டும் அல்ல; இந்தப் பரந்தமானிலமே மாண்புடன் வாழும்.

உண்ணும் உணவுக்கு ஏங்காமல்
உடுக்கும் ஆடைக்கு அலையாமல்
பண்ணும் தொழில்கள் பலகாண்போம்
பஞ்சப் பேயைத் துரத்திடுவோம்;
அண்ணல் காந்தி வழிபற்றி
அகிலம் புகழ வாழ்ந்திடுவோம்;
எண்ணும் அன்பர் உளம்தங்கும்
இறைவா! துணைசெய்தருள்வாயே!

என்று கவிமணி தேசிக் விநாயகம் பிள்ளை வேண்டுமாறு ஒவ்வொருவரும் வாழ முயன்ருல், இவ்வையகம் துயர் தீர்ந்து நல்வாழ்வு பெறும் என்பதற்குச் சிறிதேனும் ஐயமுண்டா? ★

பெண் யார்?

பெண் கடவுளின் ஓர் ஒளிக் கதிர்; கேவலம் மனைவி மாத்திரம் அல்ல, அவள் சிருஷ்டிகர்த்தாவின் ஆத்மா; கேவலம் ஜீவஜந்து மாத்திரம் அல்ல.

—ஜலாவுதீன் ரூமி

மாம்பழத்தில் வைட்டமின் 'எ', வைட்டமின் 'சி' போதிய அளவு இருக்கிறது. ★

ஆட்டெரு

இது மிகக் காரமான எரு. ஒரு ஏகருக்கு 2000 ஆடுகளை ஓர் இரவு கிடை வைக்க, பின் அந்த நிலத்துக்கு அது போதிய எருவாகின்றது. இது உடனே பலனைக் கொடுக்கும் என்பது பற்றியே, "ஆட்டெரு அந்த போகம்" என்று சொல்லுவதுண்டு. இதைத் தண்ணீரில் கரைத்து உபயோகித்தால் பயிருக்கு அதிக நன்மையைக் கொடுக்கின்றது. பாத்திரம், தொட்டிகளில் வளர்க்கும் புஷ்பம், முதலிய அலங்காரச் செடிகளுக்கு ஆட்டுப் புழுக்கைகளை மேலே தூவி தண்ணீர் ஊற்றிவர அதன் சாரம் நாளடைவில் கீழே இறங்கி பயிர் செழிப்பாய் வளரும். ★

முன்னேருடைய மரபைப் பின்பற்றி நடப்பதே பெரிதென்று கொள்ளும் மூடர்கள், முன்னேருடைய ஜாதிகங்களை பகுத்தறிவின் கற்பனையாகக் கொண்டு தீராத நாசத்தைத் தேடிக் கொள்வர். ★

மனத் தடுமாற்றம் உற்றவர்க்கு நல்லோர் கூட்டுறவு போன்ற பரிகாரம் வேறில்லை.

—அக்பர்

வாழைப் பழம்

வை. கோ.

"தினம் நாலு அவுன்சு பாலும், இரண்டு வாழைப் பழங்களும் கொடுத்தால் நலிவுற்றிருக்கும் குழந்தைகள் வளமடைவார்கள்" என்று சமீபத்தில் ஒருகூட்டத்தில் நம்நாட்டில் குழந்தைகளின் சுகாதார நிலையைப் பற்றி யூனியன் சுகாதார மந்திரி அமிர்தகௌரி பேசும்போது கூறியிருக்கிறார்.

வாழைப் பழம் எத்தனையோ ஆயிரம் வருஷங்களாக நம் நாட்டிலும், கீழ் நாடுகளிலும் உணவுப் பொருளாக இருந்து வந்திருக்கிறது. சமீபகாலத்தில் சில வெளிநாட்டுப் பழங்கள் நம் பழக்கத்திற்கு வந்த பிறகு வாழைப் பழம் ஏழைகள் சாப்பிடும் பழம் என்ற பழக்கத்திற்கு வந்துவிட்டது.

நமக்கு 'ஆப்பிள் பழம் சாப்பிட்டோம். ஆரஞ்சு சாப்பிட்டோம்' என்று சொல்லிக்கொள்ளுவதில் பெருமையடைகிறோமில்லையா? ஆப்பிள் பழம், ஆரஞ்சுப்பழம் விலை அதிகமாக இருக்கிறபடியால் போதிய அளவு வாங்கிச் சாப்பிட முடிவதில்லை. ஆதலால் பழங்களால் பெறும் நலத்தை நாமோ, நம் குழந்தைகளோ அடைய முடிவதில்லை.

வாழைப் பழம் இரண்டு விதம் ஒவ்வொருநாளும் சாப்பிட்டால் பழங்களால் அடையும் பலன் முழுவதையும் அடையலாம். மற்ற பழங்களால் எட்டணைச் செலவில் அடையும் பலனை ஓரணைச் செலவில் வாழைப் பழத்தைச் சாப்பிடுவதால் அடைய முடிகிறபோது எதற்காக விலை அதிகமானபழத்தை வாங்க வேண்டும்? பண வசதி பெற்றோர் விலை அதிகம் உடைய பழங்களைத் தாராளமாக வாங்கிச் சாப்பிடட்டும். மற்றவர்கள் உடல் உரம் பெற வாழைப்பழத்தைச் சாப்பிடலாம். வாழைப் பழம், ஆரஞ்சுப் பழம், ஆப்பிள் பழம் பற்றிய சத்து விபரத்தைப் பாருங்கள்.

சத்து விபரம்	ஆரஞ்சு	ஆப்பிள்	வாழைப் பழம்
புரோட்டின்	·9	·3	1·2
கொழுப்பு	·1	·4	·2
கார்போஹைடிரேட்	11·2	14·9	23·0
கால்சியம்	·024	·008	·008
இரும்பு	·050	·36	·65
வைடமின் A	400	100	385
,, B	26	8	18
,, C	16·95	0·20	1·15

சத்து வகையிலும் ஆரஞ்சு, ஆப்பிள் பழங்களைவிட எந்த வகையிலும் குறைந்ததாக இல்லை வாழைப் பழம்.

வாழைப் பழம் பற்றி நம் பழைய வைத்திய நூல்கள் சொல்வதையும் பார்க்கலாம்.

"வாழைப் பழம் சாப்பிடுவதால் உடம்பை வெளுக்கச் செய்கின்ற சோம ரோகம் போகும். பித்தப் பிணிகள், மதநோய், மூர்ச்சை ஆகியவை தீரும். பேயன் வாழைப் பழம் சாப்பிடுவதால் பயித்தியமும், உட்சூடும் நீங்கும். வாத ஆதிக்கமும், மிகு குளிர்ச்சியும், மலக்கழிவும் உண்டாகும்." என்று குணபாடம் கூறுகிறது.

இனி நீங்கள் வாழைப் பழத்தை அதிகமாகச் சாப்பிட்டுவிடப் போகிறீர்கள். ஆளுக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு பழங்கள் போதும். நிறைய வாங்க ஆரம்பித்தீர்களோ வியாபாரிகள் வாழைப் பழத்திற்கும் ஆப்பிள் பழ விலை வாங்க ஆரம்பித்துவிடுவார்கள். ஜாக்கிரதை! ஜாக்கிரதை!! ★

பணம் (எமிலி பேர்ன்ஸ் எழுதியது. தமிழாக்கியது. வெ. ராமசாமி விலை ரூ. 1-8-0 சக்தி காரியாலயம். சென்னை-14)

பொருளாதார இயலில் ஒரு பகுதி பணத்தைப்பற்றியது. பணம், செலாவணி, மதிப்பு, விலை, பரிவர்த்தனை முறை ஆகிய பல வகைப்பட்ட சொற்கள், அவற்றின் பொருளாதாரக் கருத்துக்கள் பணத்தைப்பற்றிய ஆராய்ச்சியிலே அறிந்து தெரியவேண்டியவை. கடினமான பகுதி, ஆனால் அடிப்படையான விஷயம இது யாவரும். அறிய ஆவல் கொள்ளக்கூடிய விஷயம்.

மூல நூல் எழுதியவர் ஒரு பிரபல மார்க்ஸீயவாதி. மாாக்ஸிஸக் கண்ணோட்டத்திலே பொருளாதார விஷயங்களை எளிதிலே புரிந்துகொள்ளும்படி கூறும் திறமைவாய்ந்தவர். ஒன்பது பிரிவுகளில் அவர் இந் நூற்றாண்டின் முதல் முப்பது வருஷகால அனுபவத்திலிருந்து-குறிப்பாக 1914 லிருந்து 1936 வரையிலுள்ள காலத்தின அனுபவத்திலிருந்து-பல உதாரணங்களைத் தந்து எந்த அடிப்படையில் முதலாளித்வ உலகில் பணம் இயங்குகின்றது, எப்படி அதற்கு ஆதாரமாக இருந்த தங்க மதிப்பு மாறியது, அதன் விளைவுகள் என்ன என்பதை விளக்குகிறார். திடீரென்று விலைகள் ஏறுவதும் இறங்குவதும் ஏன், பணவீக்கம் எப்படி ஏற்படுகிறது, நிலைமையைச் சீர்குலைக்கின்றது, ஸோஷலிஸ்டு நாட்டில் எப்படி பணம் வேலை செய்கின்றது என்பதையும் எடுத்துக் கூறியிருக்கிறார்.

●

இந்தப் பகுதியில் அவ்வப் பொழுது வெளிவரும் புத்தகங்களுக்கு மதிப்புரை வரும். புத்தகம் அனுப்புவர்கள் இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும். ஒரு பிரதி அனுப்பினால் புத்தக வரவு என்று மட்டும்தான் குறிக்கப் பெறும்.

●

இதுபோன்ற விஷயங்களைப்பற்றிய மூலநூல்களை நாமே தமிழில் எழுதுமளவுக்குத் தேவை ஏற்பட்டுள்ளகாலம் இது. எனினும் கடினமான விஷயத்தை எளிதிலே எடுத்துரைக்கும் அந்நிய மொழியிலுள்ள நூல்களைத் தமிழ்ப் படுத்துவதும் பயன் தரத்தக்க முயற்சி. புதிய விஞ்ஞான ஆராய்ச்சி விஷயங்களைத் தமிழில் தந்து, ஏழைத் தமிழனுக்கும் பாமரத் தமிழனுக்கும் ஆங்கில மோஸ்தரறியாத்தமிழனுக்கும்பிறநாட்டவருடைய அறிவு விளக்கங்களை எடுத்துரைக்கும் பணியும் இன்றைக்கு அவசியமானது. தமிழாக்கிய வெ. ராமசாமி சாதாரணமாக அனைவரும் பேசிப் பழகும் சொற்களைக் கொண்டே மூலத்தை மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

வி. எஸ்.

நவயுகப் புத்தகங்கள்

		ரூ.	அ
உலக சரித்திரம்	: ஜவாஹர்லால் நேரு	8	12
பிரிக்கப்பட்ட இந்தியா	: பாபு ராஜேந்திர பிரசாத்	10	8
இந்தியாவும் பொதுநலசமுதாயமும்	: க. சந்தானம்	2	4
அரசின் அடிப்படைத் தத்துவம்	: தாமஸ் பெயின்	0	10
சர்க்காவின் அரசியல்	: கிருபளானி	2	0
அஹிம்சா புரட்சி	: ,,	1	4
இந்திய தேசிய காங்கிரஸ்	: ,,	1	4
தாய் மொழி மூலம் கல்வி	: அகர்வால்	1	0
கந்தர்வ வாழ்க்கை	: கி. ரா	5	0
கிரஹதாகம்	: சரத் சந்திரர்	5	0
மஹாராஷ்டிர ஜீவன் உதயம்	: ரமேச சந்திரதத்	4	0
பெண்	: சியாமசரண் குப்தா	3	8
ஒரு நாள்	: க. நா. சுப்பிரமணயம்	3	0
மிருணாலவதி	: கே. எம். முன்ஷி	3	0
காஞ்சனமாலை	: கு. ப. ரா.	2	8
இரட்டை மனிதன்	: ஸ்டீவன்ஸன்	2	4
அத்தை மீனா	: ஜைனேந்திர குமார்	1	8
கந்தர்வ கோட்டை	: ஆர். எஸ். மணி	1	0
மதனி	: சரத் சந்திரர்	0	12
ஏழை பங்காளன்	: விக்டர் ஹ்யுகோ	1	12
உலகத்துச் சிறுகதைகள்	: புதுமைப்பித்தன்	3	8

தபால் செலவு தனி

நவயுகப் பிரசுராலயம்

135, பவளக்காரத் தெரு,

த. பெ. 1803, சென்னை-1.

உங்களிடம் இருக்கிறதா?

ராஜாஜி: வியாசர் விருந்து ரூ. 10-0, ஆத்ம சிந்தனை ரூ. 1-8, கண்ணன் காட்டிய வழி ரூ. 2-0, நிரந்தரச் செல்வம் ரூ 1-8, பஜ கோவிந்தம் ரூ. 1-0, அச்சமில்லை ரூ. 0-6, திண்ணை ரசாயனம் ரூ. 0-12, வேதாந்த தீபம் 1-4, அற நூல்கள் ரூ. 5-0, கதைகள் ரூ. 4.0, கட்டுரைகள் ரூ. 4-0, ராஜாஜி மணிவாசகம் ரூ. 1-12, அபேத வாதம் ரூ. 1-0, அரசியல் விமோசனம் ரூ. 0-8.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை: ஆசிய ஜோதி ரூ. 1-8, மருமக்கள் வழிமான்மியம் ரூ. 2-0, உமர்க்கய்யாம் பாடல்கள் ரூ. 1-4. மலரும் மாலையும் (அச்சில்)

எஸ். வையாபுரிப் பிள்ளை; இலக்கிய உதயம் I ரூ. 2-8, இலக்கிய உதயம் II ரூ. 5-0, தமிழர் பண்பாடு ரூ. 3-0, தமிழின் மறுமலர்ச்சி ரூ. 2-8, திராவிட மொழி ஆராய்ச்சி ரூ. 1-0, தமிழ்ச் சுடர் மணிகள் ரூ. 5-8, இலக்கிய தீபம் ரூ. 3-0.

கவிஞர் வெ. ராமலிங்கம் பிள்ளை; மலைக் கள்ளன் ரூ. 4-12, அவனும் அவளும் ரூ. 6-0, சங்கொலி ரூ. 2-12, தமிழன் இதயம் ரூ. 3-0, கவிஞன் குரல் ரூ. 2-12.

ரா. பி. சேதுப் பிள்ளை: ஊரும் பேரும் ரூ. 5-0, வேலும் வில்லும் ரூ. 1-4, வழிவழி வள்ளுவர் ரூ. 1-8, கடற் கரையிலே ரூ. 1-4.

மு. வரதராசன்: பாவை ரூ. 2-4, அல்லி ரூ. 3-12, இலக்கிய ஆராய்ச்சி ரூ. 2-12, பெற்ற மனம் ரூ. 4-4, இளங்கோ ரூ. 0-12, சொல்லின் கதை ரூ. 0-12, எழுத்தின் கதை ரூ. 0-10, அந்த நாள் ரூ. 3-0, நற்றிணை விருந்து ரூ. 2-0, முல்லைத்திணை ரூ. 1-8, மனச் சான்று ரூ. 1-12, மணல் வீடு ரூ. 1-0, காதல் எங்கே ரூ. 1-8, மாதவி ரூ. 1-4, கண்ணகி ரூ. 1-8, நெடுந்தொகை விருந்து ரூ. 3-0, திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் ரூ. 4-0, பச்சையப்பர் ரூ. 1-4, மலர் விழி ரூ. 3-4, திருக்குறள் தெளிவுரை ரூ. 1-4, அன்னைக்கு ரூ 1-0, தம்பிக்கு ரூ. 0-12, தங்கைக்கு ரூ. 1-4, தமிழ் நெஞ்சம் ரூ. 2-0, ஓவச்செய்தி 3-0, கள்ளோ காவியமோ? ரூ. 3-0, கி. பி. 2000 ரூ. 1-8, காந்தி அண்ணல் ரூ. 1-8, கவிஞர் தாகூர் ரூ. 0-14, மொழி நூல் ரூ. 4-0. அரசியல் அலைகள் ரூ. 1-4, அறமும் அரசியலும் ரூ. 1-12, கரித்துண்டு ரூ. 3-4.

வ. ரா: மகாகவி பாரதியார் ரூ. 1-8, புண்ணியமும் பலவீனமும் ரூ. 0-12, மழையும் புயலும் ரூ. 3-0, கோதைத் தீவு ரூ. 2-0.

சக்தி காரியாலயம், சென்னை-14

இந்தப் புத்தகங்கள்

கல்கி : அபலையின் கண்ணீர் ரூ. 1-4, மோகினித் தீவு ரூ. 1-12, ஏட்டிக்குப் போட்டி ரூ. 3-0, அலை ஓசை ரூ. 12-8, பார்த்திபன் கனவு ரூ. 1-4, பார்த்திபன் கனவு ரூ. 7-8, ஒற்றை ரோஜா ரூ. 1-12, அமர வாழ்வு ரூ. 2-4, சங்கீத யோகம் ரூ. 5-0, நம் தந்தையார் செய்த விந்தைகள் ரூ. 1-8, தேவகியின் கணவன் ரூ. 1-8. சிவகாமியின் சபதம் ரூ. 15-0, சாரதையின் தந்திரம் ரூ. 3-4.

புதுமைப்பித்தன் ; தெய்வம் கொடுத்த வரம் ரூ. 1–8, பளிங்குச் சிலை ரூ. 1-0, முதலும் முடிவும் ரூ. 1–4, வாக்கும் வக்கும் ரூ. 1–8, பிரேத மனிதன் ரூ. 1–8, உலகத்துச் சிறு கதைகள் ரூ 3–8, ஆண்மை ரூ. 1–0, நமது இலக்கியம் ரூ. 0–12. புதுமைப்பித்தன் கதைகள் ரூ. 4–0,

வெ. சாமிநாத சர்மா : மாஜினியின் மணி மொழிகள் ரூ. 0–12, பிரஜைகளின் உரிமைகளும் கடமைகளும் ரூ. 0–8. அரசாங்கத்தின் பிறப்பு ரூ. 0–8, ஸர் ஐஸக் நியூட்டன் ரூ. 0–8, அரசியல் கட்சிகள் ரூ. 0–8 தாமஸ் எடிசன் ரூ. 0–8, சார்லஸ் டார்வின் 0–8, கார்ல் மார்க்ஸ் ரூ. 3–4, மாஜினியின் மனிதன் கடமை ரூ. 3–8, அரசியல் வரலாறு 2–10, பார்லிமெண்ட் 2–0, சமுதாய சிற்பிகள் ரூ. 2–0, ராஜதந்திர யுத்த களப் பிரசங்கங்கள் 5–10, மானிட ஜாதியின் சுதந்திரம் ரூ. 1–4, ரூஸ்ஸோ 1–8, மாஜினி வாழ்க்கை வரலாறு ரூ. 1–8, ருஷ்ய சரித்திர வரலாறு ரூ. 1–8, ஸ்ரீராமகிருஷ்ணர்—ஒரு தீர்க்க தரிசி ரூ 2–4, சமுதாய ஒப்பந்தம் 3–4, பிளேட்டோ–வின் அரசியல் 7–0.

கவிஞர் பாரதி தாசன் : பாரதிதாசன் கவிதைகள் ரூ. 3–8, இசையமுது ரூ. 0–12, இரணியன் ரூ. 1-0, காதல் நினைவுகள் ரூ. 0–12, அழகின் சிரிப்பு ரூ. 1–0, தமிழியக்கம் ரூ. 1–0, எதிர்பாரா முத்தம் ரூ. 1–4, நல்ல தீர்ப்பு 0–10.

அறிஞர் அண்ணாத்துரை : காதல் ஜோதி ரூ. 2-8, வள்ளிநாயகியின் கோபம் ரூ. 1–4, தமிழகம் ரூ. 1-0, சூழ்நிலை ரூ. 1-0, தமிழரின் மறுமலர்ச்சி ரூ. 0–8, வாழ்க்கைப்புயல் ரூ. 0-12, ரோமாபுரி ராணிகள் ரூ. 2–4, பணத்தோட்டம் ரூ. 1-0. ஜமீன் இனம் ஒழிப்பு ரூ 1-0.

'லக்ஷ்மி' : பெண்மனம் ரூ. 3-8, மிதிலா விலாஸ் ரூ. 6 0, ஓடிப்போனவள் ரூ. 0-12, நாயக்கர் மக்கள் ரூ 6-4, படித்த மனைவி ரூ. 2-0, பத்துமாதம் ரூ, 4-8, தாய்மை ரூ. 4-8, காஞ்சனையின் கனவு ரூ. 4–0, விசித்திரப் பெண்கள் ரூ. 2-0, லட்சிய வாதி ரூ. 5-8.

சக்தி காரியாலயம், சென்னை-14

குழந்தைப் புத்தகங்கள்

சிலையும் குருவியும் ஆஸ்கார்வைல்டு

ஒரு சிறு குருவி. ஒரு அழகிய இளவரசனின் சிலை. மக்கள் படும் கஷ்டத்தைச் சகியாது அந்தச் சிலை செய்யும் தியாகமும், இளவரசனின் தியாகத்தில் சொக்கிப்போய் அந்தச் சிறு குருவி தன்னையே மறந்துசெய்யும் காரியங்களையும் மிக அழகாக ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

விலை அணா எட்டு தபால் செலவுடன் ஒன்பதணா

மாயவிளக்கு அணில் அண்ணன்

இது அராபிக் கதை. குழந்தைகளுக்காக எளிய தமிழில் எழுதப்பெற்றது. ஒரு சீனச் சிறுவன். அவனைக் கொண்டு உலக இன்பங்களை வெகு சுலபமாக அடைய நினைக்கிறான் ஒரு மந்திரவாதி. சிறுவனை அடைந்தான். அவன் அடைய நினைத்த விளக்கு அவனுக்குக் கிடைக்க வில்லை. சிறுவனுக்கே கிடைத்தது. சிறுவனிடம் பொறாமை அடைந்த மந்திரவாதி சூழ்ச்சியால் விளக்கை அடைந்தான். சிறுவனாக இருந்து பெரியவனான அலாவுதீன் மோதிரத்தின் மாயத்தால் மறுபடியும் விளக்கை அடைந்து மந்திரவாதியை மேல் உலகத்துக்கு அனுப்புகிறான். சுவாரசியமான கதை, படிக்கப்படிக்கத் தெவிட்டாது.

'தாணு' எழுதிய அழகிய மூவர்ண அட்டைப் படம், 'ராகி' எழுதிய படங்கள் உள் பக்கங்களை அலங்கரிக்கிறது.

விலை. ரூ. இரண்டு. தபால் செலவுடன் ரூ 2. 8.

கூனன் கதை அணில் அண்ணன்

இதுவும் அராபிக் கதைதான். ஆயிரத்தோரு இரவுகள் என்ற கதையிலே மிகவும் உயர்ந்த கதை இதுதான். சிறுவர்க்காக எளிய நடையில் எழுதப் பெற்றது. பக்கத்துக்குப் பக்கம் சிரிப்பு மூட்டும் சம்பவங்கள். ஐயோ இனி என்ன நடக்குமோ என்ற எண்ணம் ஒவ்வொரு வரியைப் படிக்கும் போதும் தோன்றிக்கொண்டே இருக்கும். செத்துப்போன ஒருவன் கடைசியாக உயிர் பிழைத்து வருகிறான். மருந்தில்லை, மாயமில்லை. எப்படிப் பிழைத்தான் என்பதைப் படிக்கும் போது ஒரே ஆச்சரியமாக இருக்கும்.

விலை அணா எட்டு தபால் செலவுடன் அணா ஒன்பது.

[இந்த இரண்டு புத்தகங்களும் டிசம்பர் 15-ந்தேதி வெளிவரும்]

சக்தி காரியாலயம், சென்னை-14

விற்பனையாளர்கள் தேவை

ஒவ்வொரு பெரிய ஊரிலும் எங்கள் காரியாலய வெளியீடு களை விற்க விற்பனையாளர்கள் தேவை. சம்பளம் உண்டு. மாதம் 500 ரூபாய்க்குக் குறையாமல் விற்பனை செய்யக் கூடியவர்கள் விண்ணப்பம் செய்க.

சக்தி காரியாலயம்
தபால் பெட்டி 660, சென்னை-14

காய்கறித் தோட்டம்

தோட்டம் போடுவது எப்படி
விதை விதைப்பது எப்படி
எரு இடுவது எப்படி
காய்கறிகளிலுள்ள உணவுச்
சத்து யாது

என்ற விஷயங்களை
அறிய வேண்டுமா?

கத்தரி வகை, அவரை வகை,
கீரை வகை, பூசணி வகை, கிழங்கு
வகை, சீமைக் காய்கறி வகை

பயிரிடக் கற்றுக்
கொள்ள வேண்டுமா?

இதற்கேற்ற புத்தகம்
காய்கறித் தோட்டம்
மு. அருணசலம் எழுதியது

விலை ரூ. ஐந்து
தபால் செலவு தனி

சக்திகாரியாலயம்

தபால் பெட்டி : 660
ராயப்பேட்டை, சென்னை - 14

★ ★ ★

Edited and Published by Vai Govindan, SHAKTI Karyalayam 115E Mowbray's Road, Madras, 14. Printed by A. Ganapathy at Asian Printers, 4, Venkatasa Naicken St., Chepauk, Madras-5.

ஒரு சில நிமிஷங்களில்....

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் அற்புதமான பாதுகாப்பு ஏற்படுத்திவிடலாம். பாதுகாப்பு தரும் பாலிஸியை வாங்க பெரிய தொகை ஏதும் தேவையில்லை. உங்கள் சௌகரியத்தின் பிரகாரம் வருடம் ஒருமுறை, அரை வருடத்திற் கொருமுறை, 3 மாதத்திற்கு ஒருமுறை அல்லது மாதா மாதம் பிரீமியம் தொகை செலுத்தும்படியாக உங்கள் தேவைக்குகந்த திட்டத்தை தெரிந்தெடுத்து **முதல் பிரீமியம்** கட்டிய மாத்திரத்தில் பாலிஸி கிடைத்து விடுகிறது

ஹிந்துஸ்தான் அநேக வகை பாலிஸிகள் வெளியிடுகின்றனர் : —

- ○ *உங்கள் சொந்த நலனுக்கு*
- ○ *உங்களை அண்டியவர்களுக்கு*
- ○ *உங்கள் சொத்துக்களுக்கு*
- ○ *உங்கள் கூட்டு வியாபாரத்திற்கு*

விவரங்களறிய உங்கள் வயது, உங்கள் தேவை, மாதா மாதம் உங்களை அண்டியவர்களின் எதிர் காலத்திற்காக ஒதுக்கக்கூடிய தொகை முதலியவற்றைக் குறிப்பிட்டு எமக்கு எழுதுங்கள்.

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட்

4, சித்தரஞ்சன் அவினியூ, கல்கத்தா-13

★

சென்னைக் கிளை :

" ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ் "

அரமனைக்காரத் தெரு, சென்னை-1.

Asian Printers, Madras-5.